# விவேகபோதினி

## ஓர் சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

1624

ACL-TNAC
01351

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

**தொகுதி 3.**

**1910-ம் ஸு ஜுலைமீ —1911-ம் ஸு ஜுன்மீ**

***1910—11***

சென்னை

ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனியாரவர்களால்

"கார்டியன் அச்சுக்கூடத்தில்" பதிப்பிக்கப்பட்டது.

காபிரைட் ரிஜிஸ்டர் செய்தது] [விலை...

# அட்டவணை


பக்கம்

## மதவிஷயக் குறிப்புகள்.—

ஸன்மார்க்க ஸாதனங்கள் ... 1
சினம் ... 41
பச்சாத்தாபம் ... 73
ஸத்ஸங்கம் ... 105
கர்வம் ... 139
ஆக்ரஹம் ... 175
...வனைகள் ... 209
...ப க்ரந்திகள் ... 259
...கை ஸ்ருஷ்டி ... 303
...ரம் ... 345
... ஆநந்தரூபன் ... 385
...க்கங்கள் ... 425

## ...ஷயங்கள்.—

### முக்ய உபநிஷத்துகள்.

கடோபநிஷத்—(1) ... 2
கடோபநிஷத்—(2) ... 42
ப்ரச்னோபநிஷத் ... 74
முண்டகமாண்டூக்ய உபநிஷத்துக்கள் ... 106
தைத்ரீய உபநிஷத்—(1) ... 140
தைத்ரீய உபநிஷத்—(2) ... 176
அயித்ரேய உபநிஷத் ... 210
சாந்தோக்ய உபநிஷத்—(1) ... 260
சாந்தோக்ய உபநிஷத்—(2) ... 304
சாந்தோக்ய உபநிஷத்—(3) ... 346
ப்ருஹதாரண்யக உபநிஷத்—(1) ... 386
ப்ருஹதாரண்யக உபநிஷத்—(2) ... 426

## பெரியோர் சரிதை.—

மதன லீலையார் ... 8
போர்ஷியா ... 45
வீரமார்த்தாண்ட தேவர் ... 77
ஸ்ரீமத் சங்கராசாரியர் ... 148
மேரி மஹாராணியார் ... 153
ஸ்ரீமத் மத்வாசாரியார் ... 179

பக்கம்

லியோ டால்ஸ்டாய்ப்ரபு ... 217
ப்ளாரென்ஸ் நைடிங்கேல் ... 273.
ரிச்சார்டு ப்ரின்ஸ்லி ஷெரிடன் ... 321
ஷேக்ஸ்பியர் ... 372

## ப்ரக்ருதி தத்வ சாஸ்த்ர விஷயம்.—

### இயற்கை அற்புதங்கள்.—

ஹாலிவால் நக்ஷத்ரம் ... 33
விசிஷ்டகன அளவு ... 57
சப்தம் ... 126
உஷ்ணம்: அதன்தொழில், உஷ்ண அளவை 404
உஷ்ணம்: அதன்கார்யம், அதன் மாறுபாடுகள்:— ... 450

### ஜீவவர்க்க விசாரம்.—

கம்பளிப் பூச்சி ... 122
தேனீ ... ... 327
ப்ராணிகளின் முக்ய குணதிசயங்களும் அவைகளைப் பிரிக்கும் வகையும் ... 444

### தேஹதத்வ சாஸ்த்ரம்.—

சரீரசாஸ்த்ர பயிற்சியும் அதன் உபயோகமும் 223
தேஹ அமைபபும், ரகத ஓட்டமும் ... 317
ரக்த ஓட்டமும் நாடியும் ... 360

### பூதத்வம்.—

சங்கு, கிளிஞ்சல், பலகரை ... 24
பூமியும், அதன் மேற்பரப்பும் ... 80
மலைகளும், அவைகளின் வகுப்புகளும் ... 358

### வான சாஸ்த்ரம்.—

ஸூர்யன்.—

அதன் உஷ்ணமும், ஒளியும் 231, 281
அதன் தூரமும் பருமனும் ... 365
அதன் தோற்றம் ... 392

நக்ஷத்ர நிலையைக்கண்டு நாழிகை கணிக்கும் வகை (1) ... 238

பக்கம்

நக்ஷத்ரநிலையைகண்டு நாழிகைகணிக்கும் வகை (2) ... 396

**ஆடித்தன முறைமை.—**

வீடு ... 398

வீட்டின் அமைப்பு ... 436

**வியவஸாயம்.—**

பயிர்களுக்குத் தண்ணீரின் உபயோகமும், வீண்செலவும் ... 17

பனைமரம் ... 53

கம்போடியாப் பருத்தி ... 85

ஒற்றை யலகு நடுதல் ... 397

**ஸங்கீதம்.—**

ஆர்யர்களின் ஸங்கீத முறை : ஸப்த ஸ்வரங்கள் ... 354

மேள ராகங்கள் ... 438

**செல்வ சாஸ்த்ரம்.—** ... 87

**வ்யாஸங்கள்.—**

**அறிஞர்க்குறியவை.—**

பழைய தமிழ் வசன நடையின் ஆராய்ச்சி ... 5

முற்காலத்திய வழக்கங்களிற் சில ... 144

தமிழ் மொழியின் பரிபாலனை 213, 265

தமிழ் மொழி 225, 274, 314

காஞ்சிக்ஷேத்ர மஹிமை ... 233

பாட்டினியல்பு ... 351

தேவார ஆராய்ச்சி ... 431

**நீதி ஸம்பந்தமானவை.—**

பொறுமை ... 51

கீழ்ப்படிதல் ... 89

குறித்த காலம் தவறாமை ... 92

ந்யாயம் நிலை நிற்கும் ... 112

சட்டதிட்டங்களை மீறி நடத்தலாகாது ... 164

பூர்வ்ருதைகளின் சிறப்பு ... 166

சூதாடல் ... 191

விருந்தோம்பல் ... 196

பிதிர்வாத்ஸல்யம் ... 245

பக்கம்

வீண் செலவால் விளையும் விபத்துக்கள் ... 249

சான்றோரின்த்திரு ... 278

ஏவாமக்கண் மூவாமருந்து ... 309

கடவுளின் கருணையைக் கனவிலும் மறவாதே 362

**பொது.—**

பொருட்காட்சிகளும், அவைகளின் ப்ரயோஜனங்களும் ... 49

ராஜம் ஐயர் அபிப்ராயங்களும் குறிப்புகளும் 93, 124, 368

லக்ஷ்மி வஸிக்கும் இடங்கள் ... 247

மஹாஸமுத்ரம் ... 312

பொன் ... 363

மறவர் நாடு ... 394

**கல்வி விஷயங்கள்.—**

தொழிற்கல்வி ... 90

பாடசாலைகளில் ஸன்மார்க்கம் போதித்தல் 113

பாடசாலைகளில் தோட்டம் அமைப்பதின் நோக்கமும் அமைக்கவேண்டிய முறையும் 184

புஸ்தகாலயம் ... 229

எழுத்து ஞானமில்லாதவருக்குப் போதிக்கும் வழி ... 330

கல்வி ... 400

**சிறு கதைகள்.—**

அடங்காப்பிடாரி அடங்கியவிதம் 26, 55

இந்துலேகை 28, 61, 95, 130, 410

மந்திர மயூரம் ... 119

நடுக்கங்கற்க நடந்த சிறுவன் ... 156

ரூபாமதி ... 240

ஈனக் ஆர்டன் 242, 287

ஹிமயவதி ... 282

ஸுசீலா ஸ்வயம்வரம் ... 408

த்ருவ சரித்ரம் ... 447

**ராஜாங்க முறை.—**

ஸன்மார்க்கங்கள் ... 188

குடும்பம் ... 236

பெற்றோர்களின் ஸ்வதந்த்ரங்களும், அவற்றால் விளையும் நன்மைகளும் ... 308

பிள்ளைகள் கடமைகள் ... 434


1625

பக்கம்

## மாணவர் பக்கம்.—

### வியாஸவிதானம்—I வர்ணனை வியாஸங்கள்

நாட்டுப்பிராணிகள்—பசு ... 15
பழக்கக்கூடிய ப்ராணிகள்—விகடப்பறவை... 47
காட்டு ஜந்துக்கள்—புலி ... 83
ஸ்தாவரங்கள்—தென்னைமரம் ... 110
ஸாதாரண செயற்கைப்பொருள்கள் —கடிகாரங்கள் ... 146
இயற்கை வஸ்துக்கள்—காவிரி ... 215
ஸந்தர்சன விஷயங்கள்—விடுமுறை யாத்ரை 269
ஸம்பவங்கள்—வீடு நெருப்புப்பற்றி எரிதல் 333

### II கதா வியாஸங்கள்

பெரியோர் சரிதை—வித்யாரண்ய ஸ்வாமிகள் 379
வெளிநாட்டோர் சரிதை—மைகேல் பாரேடே 414
வெளிநாட்டுவிஷயங்கள் —தர்மாபிலே காவல் 455

### மொழிபெயர்ப்பு விளக்கம்.—

பூதத்வசாஸ்தரம் கேடு விளைப்பதல்ல .. 335
பூமி ஓயா மாறுதற்கிடம் ... 381
ஸ்தாவரங்களின் அமைப்பு ... 416
உஷ்ணம் ஊடுருவிப் பரவல் ... 457

## சிறுவர்க்கான ஸந்தர்சன முறைகள்.—

குரங்கு (1) ... 19

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

துஷ்டநிக்ரகம் ... 31
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் ... 32
சிங்கமும் சிற்றெலியும்.— ஓர் அறியபுத்திமதி 65
அஹங்காரம் அல்லது பெரியோர் நிந்தனை ஆகாது ... 68
ஆடும் ஓநாயும் ... 98
ஜகத் மித்யா ... 99
மனோராஜ்யத்தால் வரும் கேடுகள் ... 100
வானம்பாடியும் கழுதையும்; வல்லவனுக் குப் புல்லும் ஆயுதம் ... 132
அடாது செய்பவர் படாது படுவர் ... 134
ஓநாயும் கொக்கும்—உனக்கென்ன கொம்பு முளைத்திருக்கிறதோ ... 167

பக்கம்

வேஷத்தின் திறம் ... 168
கிழவனும் பிள்ளைகளும்; முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் ... 200
விச்வாமித்ரர் கதை ... 201
கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை— முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் ... 251
கொன்றபாபம் தின்றால் போகும் ... 295
ஸ்ரீராம வாலி ஸம்வாதம் ... 336

### ஜடபரதர் சரித்ரம்.

(1) ஜீவகாருண்யமும் அபிமானமும் ... 382
(2) விட்டகுறையின் சிறப்பு ... 417
(3) மஹான்கள் நிலை ... 458

## ஸ்த்ரீகளுக்கான பக்கங்கள்.—

### த்ரௌபதி அல்லது மனத்தினிலை.

(1) பிறப்படைந்த காதை ... 38
(2) மீன்பொறி எய்த காதை ... 69
(3) ஐவரை அடைந்த காதை ... 101
(4) அவை நடுவுற்ற காதை 134, 169
(5) உபதேசம் செய்த காதை ... 203
(6) அகந்தை யடங்குங் காதை ... 254
(7) பழம் பொருந்து காதை ... 296
(8) மனனிலை நின்ற காதை ... 338
(9) கீழ்மை யடைந்த காதை ... 418
(10) முடிவடைந்த காதை ... 462

பதிவ்ரதைகளின் நடக்கை ... 383

## விசேஷ வர்த்தமானங்கள்.—

ஸர் சார்லஸ் ஹார்டிஞ்சு—சைவஸமயாபி விருத்தி ஸபை;—பரோடா ராஜ்யமும் கல்வியும் ... 39
உப்பு;—வியவஸாயிகள் செய்யக்கூடிய சிறு தொழில்கள்;—பாம்புகடிக்குக் கெரோ வின் ஆயில்;—வியவஸாய பஞ்சாங்கம்; நூதன செடிகளைச் சேர்த்தல்;—தென்னை நெற்று சாறறுதல்;—திமிங்கலத்தின் தாடை எலும்பு;—தந்தம் வைக்கோல் வர்ணமானது ... 40

| | பக்கம் |
|---|---|
| ஆழமுள்ள ஸமுத்ரம்—விலையுயர்ந்த முத்து—பம்பாய் மாகாணத்தில் நிலங்களுக்கு உரம் வைத்தல்;—தலைமுடிகள் சேர்க்கும் தராதிபன்;—சர்க்கரை உற்பத்தி;—தலைமயிர் வியாபாரம் — அதிசயமான காந்தக்கல்—நாற்பத்தையாயிரம் ஜனங்கள் கொள்ளும் மண்டபம்—தென்னம் பிள்ளை சாற்றுதல் ... | 72 |
| டில்லி சிறைகல்விச் சாலையை யொட்டி ஒரு விவஸாயப்பண்ணை;--மெழுகுவர்த்தி;—தம்பலப்பூச்சி;--தென்னிந்தியாவில் தற்கொலை ... | 103 |
| மணிலாப்பயிர் வெட்டுங்காலம்;—கரும்பு காடி;—ஆட்டுப்பால் கறப்பது--பழங்களை டப்பிமுதலிய பாத்திரங்களில் போட்டுவைத்தல்—எலும்பு—ஒரு ஏகருக்கு வேண்டிய ஜலம் ... | 104 |
| உபாத்திமைச் சங்கம் திருமங்கலம் ... | 136 |
| ராமநாதபுரம் ராஜாவும் தமிழ்ச் சங்கமும்—கீழ்த்தேச ராணி;—கள்ளரைத்திருத்தல்;–ஓர் பெரிய போர் கப்பல்;–பேதி–மரண தண்டனையின்மை ... | 137 |
| குடிவெறியைவிட மருந்து—அமெரிக்காவுக்குச்செல்லும் இந்தியர்;—அனுதாபக்கடிதங்கள்;—சர்க்கரையின் குணம்;—அதிக உயரத்துக்குப் பரந்த ஆகாய விமானம் ... | 138 |
| புதிய ராஜப்ரதிநிதி; —புதிய இந்திய மந்திரி;—தஞ்சாவூர் கல்விப் பொருட்காக்ஷி;—மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல் விடரரி ஸொஸைடி;—ஓர் உபாத்யாயரின் பெருந்தன்மை ... | 173 |
| வெடிமருந்து விபத்து;–போஸ்டாபீஸ் விடுமுறை நாள்கள்;—உலகத்தில் அதிகப் பெரிய பழத்தோட்டம்;—வாழை நார்த் தொழில்; — பர்மா மாணிக்கங்கள்;—தென்னிந்தியா ரயில்வே ப்ளாட்பாரம் டிக்கட்டுகள் ... | 174 |
| லார்டு ஹார்டிஞ்சு;—நமது சக்ரவர்த்தி;—ஹிந்துமதத்திற்குத் திரும்பி விட்டார்கள்; —நாய்களுக்குப் போலீஸ்வேலை;—தாரம்பூரில் க்ஷயரோகிகளுக்கு சுகவாஸஸ்தலம் ; — இருதலைபையன் ; — ஞாயிற்றுக்கிழமை விடுமுறை; — ஒரு ஆச்சரியமான ஜோதி ... | 207 |
| மட்பாண்டங்கள் செய்தல்;—சிவஸமுத்ரத்தில் இன்னொரு மின்சார விசை யந்திரம்;—ஓர் பனையில் ஏழுகிளை—தண்ணீர் கலந்தபாலைச் சோதிக்கு முறை, — இந்திய ரெயில்வேகள் ;—பம்பாய்கவர்ன்மெண்டார் கள்ளுக்கடை முதலியவைகளைப்பற்றி ... | 257 |
| நம்மவரை கவர்ன்மெண்டார் நன்குமதித்தல்;—புதிய சென்னை கவர்னர்;—குண்டூர் கல்விப் பொருட்காக்ஷி;—கும்பகோணம் ரேஞ்சு எலிமெண்டரி ஸ்கூல்கள் ... | 299 |
| பர்மாவில் வாழைநார் செய்யும் கம்பெனி;–பயங்கரமான வெடி விபத்து;—மின்சாரகடிகாரம்; –இங்கிலாந்தின் க்ரீடம்;–அடைக்கலாங் குருவி ... | 300 |
| பெருங்காக்ஷி சாலை;—நீளமுள்ள பாலம்—செம்படவனால் காப்பாற்றப்பட்ட ப்ராஹ்மணன்—சென்னையில் ஜனன மரணம்—கவர்ன்மெண்டு விவசாயப் பஞ்சாங்கம்—துஷ்டரைக் கண்டால் தூர விலகு ... | 301 |
| 1911-வருஷ ஸென்ஸஸ் கணக்கு–கொழும்பில் ஸென்ஸஸ் கணக்கு—டெல்லி தர்பாரும், ஜ்யார்ஜ் சக்ரவர்த்தி முடிசூட்டு வைபவமும் ... | 342 |
| வைரம் கண்டுபிடித்தல்–தென்னிந்திய விவஸாயம்–பெங்களூர் ஆர்யஸகோதரி ஸங்கம் | 343 |
| சென்னை ராஜதானியின் ஜனத்தொகை கணக்கு, ஜில்லாவாரியாய் ... | 344 |
| பாளையம்பட்டி கல்விப்பொருட்காக்ஷி—டில்லிதர்பார் ... | 384 |
| கம்போடியா பருத்திச்சாகுபடி–ஆகாயகமன யந்திரவாயிலாகத் தபால்—சென்னை மாகாணத்தில் மாடல் ஹைஸ்கூல்கள்—இந்தியாவின் ஏற்றுமதியும் இறக்குமதியும் ... | 422 |
| தென்னாப்பிரிக்காவில் யூதர்கள்–கம்பியில்லாத்தந்தி—கல்மழை—ஊமையர் பேசப்படித்தல் ... | 423 |
| மரங்களுக்கு மலாம் பூசுதல்–ஆகாயகப்பற் பந்தயம்—ஜப்பான் தேச வர்த்தக விருத்தி–காசி ஹிந்து யூனிவர்ஸிடி—விலையுயர்ந்த படம்—சீனாவில் பிளேக்கின் மூலத்தைக் கண்டவர்—மிகப்பெரிய ரெயில்வே ஸ்டேஷன்–சம்பளமின்றி வித்தை கற்பித்தல்—கப்பல் விபத்து ... | 424 |
| அசோகவனம்;—நமது புதிய ரூபாய்;—மரத்தை அறுக்கும் நூதனவழி ; — | |

பக்கம்

கல்கத்தாவுக்கு வெளியூரிலிருந்து வரும் நெய்—மைசூர் பொருட்காக்ஷி ;—திருநெல்வேலி ஹிந்துகாலேஜ்;—சரித்ரபூர்வமான ஒரு மோதிரம் விற்கப்பட்டது. ... 463
இந்தியாவிலுள்ள பிரஞ்சு நாடுகளுக்குப் புதிய கவர்னர்—ஸ்ரீ சங்கராசாரியாரால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சம்ஸ்கிருதப் பாடசாலை—கல்விக்காக நன்கொடைகள்—ஒரு யானையின் அறிவுடைமை—தென்னாப்ரிகாவிலுள்ள இந்தியரது தொகை ... 464

## அடிக்குறிப்புகள்

விஷயங்களின் ஸ்வரூபம் ... 4
உயர்வு தாழ்வு இல்லை ... 14
வெந்நீரின் உபயோகம் ... 16
நீர்த்தாழி ... 23
செம்படவர்களின் பந்தயம் ... 26
இளமையில் மனத்தை ஈசன்பால் செலுத்துதல் ... 44
விடாமுயற்சி ... 47
நித்திரை ... 49
வியாயாமம் ... 53
குறள் ... 54
ஜாதிபேதம் ... 57
இயற்கை அற்புதம் ... 61
உலக ஆசை ... 71
ஈசனைப் பஜித்தல் ... 85
உலகப்பற்று ... 86
சரீரம் நிலையற்றது ... 89
நவராத்ரி ... 112
நிச்சயமாய்த் தெரிந்ததை மட்டும் தெரியும் என்று சொல் ... 148
பேச்சின் மத்தியில் தடுக்காமை ... 152
நீ கற்றவித்தையைச் சங்கத்திற் காட்டாதே ... 163
செய்வன திருந்தச் செய் ... 164
வேலைக்கள்ளனாய்த் திரியாதே ... 166
பொருளிலும் இன்பத்திலும் பற்றுள்ள மனம் ... 179
குடும்பிகள் மதோபதேசத்தைக் கவனியா திருத்தல் ... 183
கள் ... ... ... ... 190
இளமையில் மன்த்தை ஈசன்பால் செலுத்துக ... 199
குரு அத்யாத்ம ஸாதன விர்த்தியைச் சுலபமாக்குகிறார் ... 230
எல்லாம் உன் உடமையே ... 235
பூர்ண ஞானிகளின் உபதேசம் ... 237
குற்றத்தைக் கௌரவமாய் ஒப்புக்கொள் ... 242
உண்மை ... 247
ஸ்ரீ ஸாஸ்வதியின் படிகநிலை ... 256
பாட்டுப்பாடி மாடு கறத்தல் ... 269
பாளயம்பட்டி வித்யாகாக்ஷிசாலை ... 280
குளிர்ந்த தண்ணீர் குடித்தல் ... 362
125 வயது கிழவர் ... 363
ஸ்ரீ சங்கராசாரியர் பிறந்த நாள் ... 365
பருத்திக்கொட்டை மனிதன் உணவு ... 368
கடவுளைக் காண்பவனை உலகம் பாதிக்காது 391
நீதி வாக்கியங்கள் ... 394
பாப விமோசனம் ... 396
வெற்றிலையின் குணங்கள் ... 422
அபாத்ரதானம் செய்யாதே ... 433
பணமும் பாக்யமும் ... 435
யோகிகளும் ஸன்யாஸிகளும் ... 446
டில்லி டர்பார் ... 455
மாம்ஸமுண்பதை விட்டதோர் மாது ... 458

## சித்ரப்படங்களின் அட்டவணை

ஹாலிவால் நக்ஷத்ரகதி— ... 1
நீர்க்காலும் (சாலும்) சிறுவரம்பும் சிறுமேடு அல்லது மஞ்சி கட்டிப்பாய்ச்சுதல் ... 18
குரங்குகள் பேன் பார்த்தல் ... 19
சங்கு, கிளிஞ்சல், சிப்பி, பலகரை ... 24
1910ம் வருஷத்திய ஹாலிவால் நக்ஷத்ரகதி ... 35
நமது சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி ... 41
விசிஷ்ட கன அளவைக் கண்டுபிடித்தல் ௭8
பூமி நாரத்தங்காய் போலானது ... 81
குளிர்ந்த ஜலம் விட்டு தண்ணீரைக் கொதுப்பித்தல் ... 82
ஸ்ரீமத் சங்கராசாரியர் ... 149
ஸ்ரீ சாரதாம்பிகை ... 151
ஸ்ரீ மாத்வாசாரியர் ... 182
லியோ டால்ஸ்டாய் ... 217
ஸூர்யன் உஷ்ணதிகத்தைக் காட்டுவது ... 231
ஸூர்யகாந்தக் கண்ணாடி ... 234
ஈனக் ஆர்டன் ... 224
மேலே செல்லச்செல்ல உஷ்ணம் குறைவு... 281
உடல் / ஹிருதயம் ... 319
வரித்தசை நார், ஸாதாத் தசைநார்; தசை சுருங்குவதினால் உண்டாகும் சலனம் ... 320
பிரின்ஸ்லி ஷெரிடன் ... 321
ஸூர்யன் தூரமும் பருமனும் ... 366
ஷேக்ஸ்பியர் ... 372
உஷ்ணம் அளவை கருவி ... 406
ஷை ... 407
த்ருவருக்கு பகவான் ப்ரத்யக்ஷமாதல் ... 449
கீசக ஸைரந்த்ரீ ... 461

OFFICE OF ... BOOKS REGISTERED 12 AUG 1910 MADRAS


# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

தொகுதி III } ஸாதாரணஹு ஆனிமீ 1910-ஹு ஜூலைமீ { பகுதி 1


## ஸன்மார்க்க ஸாதனங்கள்

### REQUISITES ON THE NARROW WAY

அறிஞனே நல்லோர் சொன்ன அரியநூல் பய
னெலாமும், பொறிவழி சென்று போகம் புஜித்
திடா திருக்கத்தானே, மறமோடு கோபம் ஆதி
வஞ்சனை நீத்துஞான, நெறி தவறமல் இந்த நில
மிசை வாழுவாயே.

என்று சிதம்பரஸ்வாமிகள் கூறியிருக்கிறர்.

வைராக்யம், உபரதி, ஞானம், ஆகிய மூன்றும் ஒருவனிடம் இருந்தால்தான் இவ்வுலகத்தில் வரும் ஸுகங்களில் அதிகமாக மொத்துண்டு வருந்தாமல் உயிருள்ளவரையில் அவன் சாந்தமாக விருந்து மரணகாலத்தில் பரமபதம் பெற முடியும். இவைகளுள் மோக்ஷம் அடைய ஞானம் மாத்திரம் போதும். அதுதான் மோக்ஷத்திற்கு நேரான ஸாதனம். இது வைராக்யம் உபரதியோடு கலந்திருந்தால் இவைகள் உடையவன் நிலை திடமானதாக விருக்கும். இவன் மனதில் குடிகொண்டிருக்கும் சாந்தியும் நிலை குலையாதிருக்கும். ஆனல் ஞானம் மாத்திரம் உடையவன் மனது, ஸதா மேலான உண்மையில் பற்றியபோதிலும் விஷயங்கள் வந்து தாக்குங்கால் சற்று மயங்கிப் பின்னர் நிலைபெறும். 'காமமாதிகள் வந்தாலும் கணத்தில்போம். மனதிற் பற்ரு' என்று கைவல்ய நூலாசிரியர் ஞானம்மாத்திரம் உடையோரை வர்ணித்திருக்கிறர். மூன்று ஸன்மார்க்க ஸாதனங்களும் கூடி இருப்பவனுக்கோ காமமாதிகளே வரமாட்டா. ஞானம் மாத்திரம் இருப்பவனது நடத்தை சிற்சில சமயங்களில் ஸாதாரண ஜனங்களால் பழிக்கத்தக்கவையாகவும் இருக்கும். மூன்றும் இருப்பவனது நடத்தை ஒருவராலும் குற்றங்கூற முடியாததாக இருக்கும். ஆகவே இம்மூன்றில் மோக்ஷம் அடைவதற்கு ஞான தான் அவசியம். இது சிலரிடம் தனித்து நிற்கும்; சிலரிடம் மற்றைய இரண்டொடு கலந்திருக்கும். தனித்திருக்கிறதே என்று ஒருவன் வருந்தவேண்டாம். உலகவிஷய பாதை அவனுக்குக் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். இருப்பினும் உலக விஷயங்களின் உண்மை நிலையை அவன் உணர்ந்திருக்கிறபடியால் அவன் மனம் என்றும் உலகவிஷயங்களில் அழுந்திவிடமாட்டாது. ஞானநிஷ்டை பழகப் பழக அவனுக்கு வைராக்கியமும் உபரதியும் வந்து கைகூடும்.

ஞானம் இன்றி மற்றைய இரண்டும் இருப்பின் அவன் நிலை மிகக்கஷ்டமான நிலையே. வைராக்யம் மாத்திரம் இருப்பின் ஒருவன் கொடியவனுகி கண்ட விஷயங்கள் எல்லாவற்றையும் வெறுக்கும் நிலையை அடைவான். வடதேசக் கோஸாவிகள் போல வீண் ஹடங்கள் எல்லாம் பிடிக்கத் தொடங்குவான். உபரதியும் கலந்திருப்பின் ஒருவன் மிகுந்த நற்குணம் உடையவனுயும், எல்லோரும் விரும்பத்தக்கவனுயும் இருப்பான். ஆனல் அவன் மனதில் சாந்தமும் திருப்தியும் இரா. ஓர் வித துக்கமே அவன் மனதில் குடிகொண்டிருக்கும். இப்படிப்பட்டவனுக்கு ஸத்குரு கிடைத்து மஹாவாக்ய உபதேசம் நடந்துவிட்டால் உடனே அவன் எளிதில் மிகுந்த ஸுகமாகப் பரமபதம் அடைவான். இல்லாவிடில் இவன் ஆயுஸ் முழுவதும் மனங்குழைந்து வருந்த வேண்டியதுதான். வைராக்யமில்லா உபரதி யுடையவன் உலக விஷயங்களில் மூழ்கி மூழ்கி எழுந்து இவைகளைவிட்டு நீங்கும்வழி யறியாது தயங்கவேண்டியதுதான். ஒரு வேளை இவன் உபரதியால் உண்டாகும் அஷ்டமஹாஸித்திகளைப் பெரிதென்றெண்ணி பரம்பொருளை மறந்து நிற்கும்படியானாலும் ஆகும்.

இதுபற்றியே வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசிப் பிரகரணத்தில் 'மூன்றும் கூடினல் இடஸுகம் உண்டு என்பதேயல்லாமல் மோக்ஷத்திற்கு ஞானம் மாத்திரம் போதும், கர்மத்திற்கேற்ப சிலரிடம் மூன்றும் கூடியிருக்கும், சிலரிடம் பிரிந்திருக்கும். ஞானம் இருப்பின் கலங்கவேண்டியதே யில்லை' என்று கூறுகிறர்.

விவேக போதினி

தொகுதி 3] ஸாதாரணஹு ஆனிமீ [பகுதி 1

# முக்கிய உபநிஷத்துக்கள்

## THE PRINCIPAL UPANISHADS

## III. கடோபநிஷத் (1)

## THE KATHA UPANISHAD

இந்த உபநிஷத்தே எல்லோராலும் மிகச் சிறந்தது என்று மதிக்கப்படுகின்றது. இதில் பரமபதத்தைப்பற்றிக் கூறுவதோடுங் கூட அதை மிகுந்த அழகாயும், ஆற்றலோடும் கூறப்பட்டுள்ளது. அற்புத கற்பனை விஷயங்கள் காவ்யங்கள் எவ்வாறு மனதைக் குதூஹலப்படுத்தி சிறைப்படுத்துமோ அதுபோல இந்த உபநிஷத்தும் தன்னுள் அடங்கியுள்ள அன்பு கற்பனை விஷயங்கள், காவ்யவிஷயங்கள் இவைகளால் வாசிப்போர் மனதை ஸ்திரப்படுத்தி மேலான நிலைக்கு எடுத்துச்சென்று அங்கு உலகவிஷயவாசனை யாதொன்றுமின்றி சற்று நிற்கும்படி செய்யும் திறனுடையது. இதனால் கற்பனைதி அரிய விஷயங்கள் மனிதனை மேன்மைப்படுத்தவே ஏற்பட்டிருக்கின்றன; அதை மனிதன் உலகவிஷயங்களில் உபயோகப்படுத்தி ஸாதாரணகாவ்யங்களில் காதல்முதலியகாம்ய விஷயங்களை எடுத்து சிறந்தவைகளாகக் கூறி இவ்வாறு தட்டழிந்து வருந்துகிறான் என்பது வெளியாகும். இந்த உபநிஷத்திற்கு கடவல்லி என்ற வேறொரு பெயரும் உண்டு. இது இரண்டு அத்யாயங்களை உடையது; ஒவ்வொரு அத்யாயமும் வல்லி என்றபெயர்களையுடைய மூன்று உட்பிரிவுகளை யுடையது. வல்லி என்ற பதத்திற்கு அழகிய பூங்கொடி என்று பொருள். அழகிய புஷ்பங்களுக்கு ஸமமாக உள்ள சிறந்த மந்திரங்களை உடையதாகையால் ஒவ்வொரு உட்பிரிவிற்கும் வல்லி என்ற பெயர் வந்தது. ஆகவே உபநிஷத்திற்கே இப்பெயர் ஏற்பட்டது. இந்த உபநிஷத் நாசிகேதஸ் உபாக்யானத்துடன் தொடங்குகின்றது. இங்கு நாசிகேதஸ்ஸுக்கும் யமனுக்கும் நடக்கும் ஸம்பாஷணையில் உலக வாழ்க்கையின் உண்மை நோக்கம், மனிதர்கள் அடையவேண்டிய பரமபதம், ஸுகத்திற்கும் நன்மைக்கும் உள்ள வித்தியாஸம், இவைகள் நன்கு விளக்கப்படுகின்றன. மேலும் இக்கதையில் காணப்படும் நாசிகேதஸ்ஸின் மனோதிடத்தை எல்லோரும் நன்கு மதித்து அடைய முயலவேண்டியது அவசியம். புராண இதிஹாஸங்களில் காணப்படும் தருமபுத்திரர், ஹரிச்சந்திரன் ஆகிய இம்மஹான்கள் கூட மனோதிடத்தில் இந்த நாசிகேதஸ் ஸுக்கு ஈடல்லர்.

இந்த உபநிஷத்தில் ஜகத், ஜீவன், பரன் இவைகளது உண்மை ஸ்வரூபம் நன்கு விளக்கப்படுகின்றது. இதில் அடங்கியிருக்கும் விஷயங்களை சுருக்கிச் சொல்லுமிடத்து, (1) மனிதன் அடையவேண்டிய பரம புருஷார்த்தம், (2) பிரபஞ்சத்தின் ஆதிகாரணமும் அதை அடையும் விதமும், (3) ஆதிகாரணத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் உள்ள ஸம்பந்தம், (4) இந்த ஸம்பந்தத்தை உணர்ந்து பரமபதம் அடைய மனிதன் செய்யவேண்டிய முயற்சி, ஆகிய இவைகளே. இவைகளைப்பற்றிக் கூறும் பொழுதே மூன்று உலகவிஷயங்களின் நிலையாமையும், அவைகளிலிருந்து வரும் ஸுகம் எவ்வளவு சிறந்ததாயினும் நிலைத்து நிற்பவை அல்லவென்றும், இவைகளை பலனைக்கொடுக்கும் கர்மகாண்டத்திலுள்ள கர்மங்கள் எங்ஙாளும்மாறா ஸுகத்தைக் கொடுக்கவேமாட்ட என்றும் வற்புறுத்துகின்றது. இனி இவைகளை அடக்கியுள்ள நாசிகேதஸ் கதையை எடுத்து எழுதுவோம்.

1. முதல்வல்லி.—முன்னொரு காலத்தில் கௌதமர் என்ற ஓர் ரிஷி இருந்தார். இவ

ருக்கு வாஜச்ரவஸ் என்ற பெயரும் உண்டு. இவர் விச்வஜித் என்ற யாகத்தைச் செய்தார். இந்த யாகத்தில் யஜமானன் தனது ஸொத்து முழுவதையும் தானம்செய்துவிடவேண்டியது. இந்த விதிக்கு எற்ப இவர் தமது ஸொத்துக்களையெல்லாம் கொடுத்துவந்தார். இவருக்கு நாசிகேதஸ் என்றொரு பிள்ளை இருந்தான். அவன் அப்பொழுது அருகாமையிலிருந்தமையால் தன் தகப்பன் விலையுயர்ந்தது ஒன்றையும் தானம் செய்யவில்லை என்று கண்டு, தானும் தகப்பனுக்குப் பிரீதியான ஸொத்துக்கு ஸமமாதலால் தன்னைக் கொடுத்தாவது அவர் கிருதார்த்தமாகட்டும் என்ற எண்ணத்துடன், 'பிதாவே! என்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்?' என்று மஹா விநயத்துடன் கேட்டான். பிள்ளையின் சிறந்த மனோபாவத்தை மதியாமல், தாம் கிழட்டுப்பசு முதலிய உபயோகமற்றவைகளைத் தானம் செய்வதைக் கண்டு அவன் தன்னை பரிஹாஸம் செய்கிறான் என்று எண்ணிக் கோபங் கொண்டு, தம்மை அடிக்கடி தொந்திரவு செய்த பிள்ளையை நோக்கி, 'அப்பா! என்ன கஷ்டப்படுத்துகிறாய், உன்னை யமனுக்குக் கொடுத்தேன் போ!' என்று பரபரப்புடன் சொன்னார். அநியாயமாக தகப்பனாருக்குக் கோபம் உண்டாகும்படி செய்துவிட்டோமே என்ற வருத்தத்துடன் நாசிகேதஸ் தன் தகப்பனை நோக்கி, 'என்னால் யமனுக்கு ஆகவேண்டியதென்ன? இப்படி இருக்க யமனுக்குக் கொடுப்பதால் அவனுக்கு என்ன உபயோகம்? ஒரு ஏழைப் பிராஹ்மணனுக்குக் கொடுத்தாலாவது நான் அவனுக்கு வேலைக்காரனாகவிருந்து உபயோகப்படுவேனே' என்றான். பின்னர் கௌதமர் தம் கோபத்தில் கூறியதை எண்ணித் துக்கிக்கலாயினர். நாசிகேதஸ்ஸோ யமன் பட்டணம் சென்று தகப்பன் வாக்கியத்தை உண்மையாக்குவது என்று தீர்மானித்துவிட்டான். கௌதமரே தடுக்கமுடியாமல் நாசிகேதஸ்ஸை ஸாகுக்குப் போய்வரும்படி மிகுந்த துக்கத்துடன் உத்தரவளித்தார்.

யமன் பட்டணம் சென்றான் நாசிகேதஸ்! அங்கு மூன்று நாள்வரையில் வெளியேபோயிருந்த யமன் வரவில்லை. வீட்டு யஜமானன் இல்லாத ஸமயத்தில் அங்கு எவ்வித விஷயங்களையும் அங்கீகரிக்கக்கூடாது என்ற விதிப்படி நாசிகேதஸ் யமன் அரண்மனைவாயிலில் மூன்று நாளும் பட்டினிகிடந்து காத்துக்கொண்டிருந்தான். யமன் திரும்பிவந்ததும் பிராஹ்மணன் பட்டினிகிடப்பதைக் கண்டு 'ஓர் வீட்டிற்கு வரும் பிராஹ்மணன் பட்டினிகிடப்பானாயின், அந்த வீட்டு யஜமானன் சிறப்பை எல்லாம் அவன் அபஹரிக்கிறான் என்று விதியிருக்க, நாம் இப்படி மோசம் போய்விட்டோமே' என்ற பரபரப்புடன் நாசிகேதஸ்ஸை நோக்கி 'ஓ பிராஹ்மணோத்தமா! தாங்கள் என் வீட்டு வாயிலில் மூன்றுநாள்வரையில் ஓர்வித ஸாகத்தையும் அங்கீகரிக்காது என்னைப் பாபியாக்கிவிட்டபடியால், என்னிடமிருந்த மூன்று வரத்தை வாங்கிக்கொண்டு என்னை கிருதார்த்தனாக்கும். உமது இஷ்டப்படி ஏதாவது மூன்று வரத்தைக் கேளும்' என்று விண்ணப்பம் செய்துகொண்டான்.

இதைக் கேட்டதும் தன் தகப்பனாருக்குத் தன்பேரிலிருந்த கோபம் தணிய வேண்டும் என்று அவன் முதல் வரம் கேட்டான். அதற்கு யமன் 'அவ்வாறே யாதுக! உமது தகப்பனாராகிய கௌதமர் உம்மை முன்போல அன்புடன் நடத்துவார், நீர்கவலைப்படவேண்டாம்' என்று மறுமொழிகூறினான். பின்னர் நாசிகேதஸ் யமனைநோக்கி 'ஸ்வர்க்கத்திலோ உமது பயம் இல்லாததால் பயமில்லை. அங்கு கிழத்தனங்கூட இல்லை. பசி தாகம், துக்கம் முதலியவைகளுக்கு அப்பாற்பட்டிருப்பதால் அங்கிருப்பவர்கள் மாறா ஸந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள். எந்த அக்னியில் ஆஹுதி செய்தால் இப்படிப்பட்ட ஸ்வர்க்கம் வரும் என்

பது உமக்குத் தெரியுமல்லவா? பக்தியுள்ள எனக்கு அந்த ரஹஸ்யத்தை உபதேசிக்க வேண்டும். இதுதான் நான் கேட்கும் இரண்டாம் வரம்' என்றான். 'இந்த பரிசுத்த அக்னி இன்னது என்பதை நான் அறிவேன். இதில் ஆஹுதி செய்பவன் ஸ்வர்க்கம் அடைவன். இந்த அக்னிதான் எங்கும் பரவியிருக்கும் பரமாத்மா, விராட். ஆகையால் இதுவே பிரபஞ்சத்திற்கு மூலம்' என்று கூறி இந்த ஆஹுதிகள் செய்வதற்கு வேண்டிய வேதி முதலியவற்றை யமன் விஸ்தாரமாகச் சொல்ல, நாசிகேதஸ் மனவில் நன்றாகக் கிரஹித்துக் கொண்டான். இதைக் கண்டு யமன் மிகுந்த ஸந்தோஷம் அடைந்து, 'இந்த அக்னி இது முதல் நாசிகேதாக்னி என்று வழங்கி வரட்டும். இந்த அக்னியில் பெரியோரது அனுமதியின்பேரில் எவன் ஒருவன் மூன்று ஆஹுதிகள் செய்கிறானோ அவன் ஜனன மரணத்தினின்று நீங்குவான். மோக்ஷத்தை அடையத் தகுந்தவனாவான்' என்று வரமளித்தான்.

இவைகளெல்லாம் தீர்ந்தவுடன் நாசிகேதஸ் மூன்றாவது வரனைக் கேட்டான். அது பின்வருமாறு 'யமதர்மனே! ஒருவன் இறந்த பின்பு அவன் ஆத்மா இருக்கின்றது என்பர் சிலர், ஆத்மாவும் இறந்துவிடுகின்றது என்பர் சிலர், இதில் எது உண்மை? எனக்குத் தெளிவாகக் கூறவேண்டும்' என்பதே. பார்த்தான் யமன்! 'இதென்ன ஆச்சரியம்! மெதுவாக அடிமடியில் கையைப் போட்டுவிட்டானே!' என்று வியந்துகொண்டான். இவனது மனோதிடத்தைப் பார்ப்போம் என்று இவனை பரிசோதிக்கத் தொடங்கினான். 'அப்பா! இதை ஏன் கேட்கிறாய்? தேவதைகளுக்குங்கூட இந்த விஷயம் நன்றாக விளங்காதே. ஆகையால் நீ வேறு எதையாவது கேள்' என்று நாசிகேதஸ்ஸை அதைரியப்படுத்தினான். அதற்கு நாசிகேதஸ், 'இந்த விஷயமோ மிகக் கஷ்டமானது; ரஹஸ்யமானது. உம்மைப்போல குரு கிடைப்பதும் அரிது. ஆதலால் இந்த ஸமயத்தில் நான் இதை அறிந்தால்தான் அறிந்தது. ஆகவே இந்த வரம்தான் எனக்கு வேண்டும்' என்றான். யமனோ தயங்காது, 'தீர்க்க ஆயுஸ், சிறந்த பசு, பத்னி, பிள்ளைகள், ராஜ்யம் முதலிய ஸகல உலக இன்பங்களை வாங்கிக்கொள். உலகில் இதுவரையிலும் கண்டிராத ஸுகங்கள் எல்லாம் உனக்கு வரும்படி செய்கிறேன். இந்த வீண் முரண்டு மாத்திரம் வேண்டாம். இந்தக் கேள்வியை விட்டு விடு' என்று நாசிகேதஸ்ஸை மயக்கப் பார்த்தான். இதைவிட மிகச் சிறிய விஷயங்களில் மூழ்கி மதிமயங்கித் தத்தளிக்கும் நம்மைப் போன்றவனல்லவே நாசிகேதஸ்! மிகுந்த பரபரப்புடன் யமனை நோக்கி, 'உலக விஷயங்கள் எவ்வளவு ஸுககரமாயினும் நிலையற்றவை. இந்திரியாதிகளின் சக்திகளைக் குறைக்கும் தன்மைய. நீ இருக்கையில் யாருக்குத்தான் உலகஸுகம் சிறந்தது என்ற எண்ணம் தோன்றும். ஸ்வர்க்கபோகம்கூட ஒருநாள் முடியவேண்டியதுதானே. பெரியோர்கள் எவ்வித வெளிஸுகத்தையும் மதிக்கவேமாட்டார்கள். மரணத்தின் பின் உள்ள விஷயத்தைப்பற்றி உணர்வதே என் நோக்கம். என்னால் எவ்வாறு இதை மாற்றமுடியும்?' என்றான். வியந்தான் யமன்! 'இவனே இவ்விஷயங்களைக் கேட்கத் தக்க சிஷ்யன்' என்று மனம் மகிழ்ந்தான். பின்வருமாறு அரிய ரஹஸ்யத்தை நாசிகேதஸ்ஸுக்கு உபதேசிக்கத் தொடங்கினான்.

### விஷயங்களின் ஸ்வரூபம்.

சாதகத்திசைக்கண் விஷயமே தடையாம்
சாத்திய மானபின்பு சித்தற்கு
காதல்வைத்திடல் அப்பிரமானந்தத்தில்
அதிகமோ விஷயானந்தம்.
கோதில் வீடு இன்பம் பெருகலாவிடத்து
கூடுதற்கெனின் கரிபிழைக்கில்
தீதிலோர் சிங்கம் அதனையேயன்றி
தேடுமோ தேரையூண் டினுவே.

# பழைய தமிழ் வசன நடையின் ஆராய்ச்சி

## EARLY TAMIL PROSE

*(A Research)*

தமிழ் வசன நடையை இயன்றமட்டில் ஒருவாறு பூர்வோத்தரமாக ஆராய்வதுமாணாக்கர்களுக்கு வசனநடையின் சில கூறுகளை அறிவதற்கு அனுகூல சாதனமாகும். பாரத வெண்பாவும், தகடூர் யாத்திரையும் சங்கக் காலத்து நூல்கள். அவைகளின் பிரதி கிடைப்பதில்லை. பாரதவெண்பாவின் உத்தியோக பருவப் பகுதிமாத்திரம் ஒரு பிரதி துரைத்தனக் கையெழுத்துப் பிரதிசாலையில் இருக்கின்றது. அதுவும் கொத்துங் குறையுமாகவே இருக்கின்றது. அதிலுள்ள கட்டுரை முற்றும் பெருந்தேவனார் எழுதியதன்றெனச் சிலர் கூறுகின்றனர். இளம்பூரணர் உரை தொல்காப்பியச் சூத்திரங்களுக்குக் கருத்தும், பொழிப்பும், உதாரணமுமாகிய உரையே கூறுவது. அதில் உரையாசிரியர் தாமாகச் சித்தாந்தம் செய்தலான பகுதி யாதொன்றும் காணப்படவில்லை. ஆதலால் இவற்றினின்றும் நாம் ஆராயும்படி கொள்ளத்தக்க பகுதிகளில்லை. பழமொழி நானூற்றில் ஒன்று உரையுள்ளிட்ட செய்யுள்: அது உரைசெய்தார் காலத்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

### இறையனாரகப்பொருளுரை

1. இறையனாரகப் பொருளுரை சங்கத்துக்குச் சிலகாலம் பின்னிட்டு நூல் வடிவமாக எழுதப்பட்டதென்பது புலவர் கொள்கை. இதில் கதா ரூபமாக வருவது,

"அக்காலத்து பாண்டிய னாடு பன்னிருயாண்டு வற்கடஞ் சென்றது. செல்லவே, பசி கடுகுதலும் அரசன் சிட்டரையெல்லாங் கூவி, "வம்மின், யான் உங்களைப் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் நுமக்கறிந்தவாறு புக்கு, நாடு நாடாயின ஞான்று என்னை யுள்ளி வம்மின்" என்றான். என, அரசனை விடுத்து எல்லாரும் போயின பின்றைக் கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது, கழிந்தபின்னர், நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின், அரசன் இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்கவென்று எல்லாப் பக்கமும் போக்க, எழுத்ததிகாரமுஞ் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக்கொணர்ந்து, பொருளதிகாரம் வல்லாரை எங்குந் தலைப்பட்டிலேமென்று வந்தார். வர, அரசனும் புடைபடக்கவன்று, "என்னை? எழுத்துஞ், சொல்லும், யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்" எனச்சொல்லாநிற்ப; மதுரைஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்: "என்னை பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அது தானும் ஞானத்திடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என்று, இவ்வறுபது சூத்திரத்தையுஞ் செய்து, மூன்று செப்பிதழகத்தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்.

"இட்டபிற்றை ஞான்று, தேவர்குலம் வழிபடுவான் தேவர் கோட்டத்தை எங்குந்துடைத்து, நீர் தெளித்துப், பூவிட்டுப், பீடத்தின்கீழ் என்று மல கிடான் அன்று தெய்வத்தவக்குறிப்பினான் அலகிடுவனென்று உள்ளங்குளிர அலகிட்டான். இட்டாற்கு அலகினோடும் இதழ்போந்தன. போதரக், கொண்டு போந்து நோக்கினாற்கு வாய்ப்புடைத்தாயிற்றோர் பொருளதிகாரமாய்க் காட்டிற்று. காட்டப், பிராமணன் சிந்திப்பான்: அரசன் பொருளதிகாரம் இன்மையிற் கவல்கின்றானென்பது கேட்டுச் செல்லாநின்றதுணர்ந்து நம்பெருமான் அருளிச்செய்தானாகும் என்று, தன் அகம் புகுதாதே கோயிற்றலைக் கடைச்சென்று நின்று கடைகாப்பார்க் குணர்த்தக், கடைகாப்பார் அரசற்குணர்த்த, அரசன் புகுதுக வென்று பிராமணனைக்கூவச், சென்று புக்குக்காட்ட எற்றுக்கொண்டு நோக்கிப், "பொருளதிகாரம். இது நம்பெருமான் நமதிடுக்கண் கண்டு அருளிச் செய்தானாகற்பாலது" என்று, அத்திசை நோக்கித் தொழுதுகொண்டு நின்று, சங்கத்தாரைக் கூவுவித்து, "நம்பெருமான் நமது இடுக்கண் கண்டு அருளிச்செய்த பொருளதிகாரம், இதனைக்கொண்டு போய்ப் பொருள் காண்மின்" என, அவர்கள் அதனைக் கொண்டுபோந்து கனமாப்பலகை ஏறியிருந்தாராய்வுழி, எல்லாருந் தாந்தாம் உரைத்த உரையே நல்லதென்று சிலநாளெல்லாஞ் சென்றன. செல்ல,

நாம் இங்ஙனம் எத்துணையுரைப்பினும் ஒருதலைப் படாது; நாம் அரசனுழைச்சென்று நமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டு மென்று, கொண்டுபோந்து, அவனாற் பொருளெனப்பட்டது பொருளாய், அன்றெனப்பட்டது அன்றாய் ஒழியக்காண்டுமென, எல்லாரும் ஒருப்பட்டு அரசனுழைச் சென்றார். அரசனும் எதிர்சென்று, "என்னை, நூலுக்குப் பொருள் கண்டீரோ?" என, "அஃது காணுமாறு எமக்கோர் காரணிகனைத் தரல்வேண்டும்" எனப், "போமின், நுமக்கோர் காரணிகனை எங்ஙனம் நாடுவேன்? நீயிர் நாற்பத்தொன்பதின்மராயிற்று; நுமக்கு நிகராவர் ஒருவர் இம்மையினின்றே" என்று அரசன் சொல்லப், போந்து கனமாப்பலகையின் ஏறியிருந்து, அரசனும் இது சொல்லினான்; காரணிகனைப் பெறுமாறு என்னைகொலென்று சிந்திப்புழிச், சூத்திரஞ்செய்தான் ஆலவாயில் அவிர்சடைக் கடவுளன்றே! அவனையே காரணிகனைத் தரல் வேண்டுமென்று சென்று வரங்கிடத்து மென்று வரங்கிடப்ப; இடையாமத்து, "இவ்வூர் உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திரசன்மனென்பான், பைங்கண்ணன் புன்மயிரன் ஐயாட்டைப்பிராயத்தான் ஒரு மூங்கைப் பிள்ளையுளன்; அவனை அன்னனென்றிகழாது கொண்டுபோந்து ஆசனமேலிரீஇக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற், கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்டவிடத்து; மெய்யல்லா உரை கேட்டவிடத்து வாளா இருக்கும்; அவன் குமாரதெய்வம்; அங்கோர் சாபத்தினாற் றோன்றினான்" என முக்காலிசைத்தகுரல் எல்லார்க்கும் உடன்பாடாயிற்றாக, எழுந்திருந்து தேவர்குலத்தை வலங்கொண்டு போந்து, உப்பூரி குடிகிழாருழைச் சங்கமெல்லாஞ் சென்று, இவ்வார்த்தை யெல்லாஞ் சொல்லி, ஐயனாவான் உருத்திரசன்மனைத் தரல்வேண்டுமென்று வேண்டிக் கொடுபோந்து, வெளியது உடீஇ, வெண்பூச்சூட்டி, வெண்சாந்தணிந்து, கனமாப்பலகை யேற்றிக், கீழிருந்து சூத்திரப் பொருளுரைப்ப, எல்லாரும் முறையே உரைக்கக் கேட்டு வாளா இருந்து, மதுரை மருதனிளநாகனார் உரைத்தவிடத்து ஒரோவிடத்துக் கண்ணீர் வார்ந்து, மெய்ம்மயிர் நிறுத்திப், பின்னர்க் கணக்காயனார் மகனார் நக்கீரர் உரைத்த விடத்துப் பதந்தொறுங் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்ப இருந்தான். இருப்ப, ஆர்ப்பெடுத்து மெய்யுரைப் பெற்றாம் இந்நூற்கென்றார்"

என்னும் பகுதி. இதில் ஒருவாறாக எண்ணிய விடத்து (வாக்கியங்களின் முதலில் தொடுத்துக் காட்டியிருக்கும் சொற்கள் நீங்கலாக) ஏறக்குறைய நானூற்றிருபது சொற்கள் உண்டு. இவைகளில் சில தமிழ்ச் சொற்களும், சில வட சொற்களும், சில முறை அடுத்தடுத்து வருகின்றன. அங்ஙனம் வருகின்ற வடசொற்கள் எழுபது காணப்படுகின்றன. ஆக மொத்தத்தில் ஆறில் ஒன்றாக வடசொற்கள் அமைந்திருப்பதுவிளங்கும் குறிப்பு வினைகளையும், குறிப்பு வினையாலணையும்பெயர்களையும், திரிபான ஏழாம் வேற்றுமையுருபுகளையும், திரிபான வடசொற்களையும் சேர்த்து எண்ணியவிடத்தில் இந்தப் பகுதியில் ஐம்பது திரிசொற்களுக்கு அதிகம் இல்லை. இத் திரிசொற்களை நீக்கி இயற்சொற்களை அமைப்பின் இப்பகுதியின் கட்டுரைச்சுவை கெட்டொழிதலாகும்.

"பாண்டியனுடு பன்னிருயாண்டு" என்றும், "கணக்கின்றிப் பன்னீரியாண்டு கழிந்தது" என்றும் வருவன தவிர மோனைகள் வேறே அமைந்திருக்கவில்லை. எதுகையும் யாண்டும் இயைந்திருக்கவில்லை. இங்ஙனம் செயற்கையழகால் பெறலான சுவையின்றியே, இப்பகுதி, கதலீபாகமாய் எவ்விடத்தும் வாக்குத் தடைபெறாமல் அகவுதலும், துள்ளுதலும், தூங்குதலுமின்றி ஒழுகிசைச் செப்பலோசையூட்டியதுபோன்று இசைகனிந்து நிற்கின்றது. வாக்கியங்களைக் காரணகாரியமுறை விளங்கத் தொடர்புபடத் தொடுத்திருப்பது, பூவொடு பூவைத் தொடுத்தாற்போல, அந்தாதிநயம் விளக்கின்றது.

இந்தப் பகுதியின் முதல் பந்தியில் கடைசி வாக்கியம் ஒன்று தவிர மற்றவைகள் ஒவ்வொன்றும் தனித்தனியான ஒவ்வொரு கருத்தைக் கொண்டுள்ளன. கடைசி வாக்கியத்தில் தனித்தனியான இரண்டு கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. அரசன் கவன்றது ஒன்று:

REGISTERED 17 AUG 1910 MADRAS.

அதற்குக் கடவுள் பரிகாரம் செய்தது மற்றொன்று. இந்தப் பந்தியில் இறையனாரகப் பொருள் உண்டான வரலாறு உரைக்கப்படுகின்றது. அது "மதுரை ஆலவாயின்...பீடத்தின் கீழிட்டான்" என்பது. முதல் ஐந்து வாக்கியங்களும் காரணகாரிய முறையாகத் தனித்தனி நின்றன. ஐந்தாவது வாக்கியத்தின் பயன் ஆறாவது வாக்கியத்தில் "வர அரசனும் ...எனச் சொல்லாநிற்ப" என்னும் முற்பாதி. இதன் பயன் (இறைவன் அகப்பொருள் அருளிச்செய்ததென்னும்) "மதுரை....கீழிட்டான்" என்னும் அவ்வாக்கியத்தின் பிற்பகுதி. இந்த ஆறாவது வாக்கியத்தை "அரசனும் புடைபடக்கவன்று....எனச்சொல்லினான்" என்றும் "சொல்லாநிற்ப......கீழிட்டான்" என்றும் தனித்தனி வாக்கியங்களாகப் பிரித்து விட்டால், இந்தப் பந்தியின் அங்கங்களாகிய வாக்கியமெல்லாம் கருத்துக்களின் முறையாக நிரல்பட நிற்பதும், இறுதி வாக்கியம் பந்தியின் முக்கியாமிசத்தை உரிய இடத்தில்உரைப்பதும் ஆகி, இந்த பந்தி தன்னளவில் முற்றுப்பெற்றதாய் ஒழுங்குபெற்றிருக்கும். இங்ஙனம் தனியாகவாங்கிக்கொண்ட ஏழாவது வாக்கியமும், உற்றுநோக்குகையில் "மதுரை...சிந்திப்பான்" என்பதொன்றும், "என்னை...தீர்க்கற்பாலம்' என்று....கீழிட்டான்" என்பது எழுவாய் தொக்க மற்றொன்றுமாய் இரண்டு வாக்கியங்களாகக் காணப்படும். ஆதலால் "மதுரை...கடவுள் 'என்னைபாவம்...தீர்க்கற்பாலம்' என்று சிந்தித்து இவ்வறுபது...கீழிட்டான்" என இயைத்துக்கொள்வது அந்த வாக்கியத்தின் முடிபு விளக்கமெய்தற்கு அநுகூலமாகும்.

இரண்டாவது பந்தியில், அரசன் பொருளதிகாரம் பெற்றதும், அதற்கு உரையியற்றுவித்ததும், ஆகிய இரண்டு முக்கிபாமிசங்கள் கூறப்படுகின்றன. இவை ஏழுவாக்கியங்களால் உணர்த்தப்படுகின்றன. நான்காவது வாக்கியத்தில், பிராமணன் பொருளதிகாரத்தைக் கொண்டுபோய்க் காட்டினதும், அரசன் அது பெற்று நம்பெருமான் உள்ளதிசை நோக்கித் தொழுததும், சங்கத்தாரைக் கூவுவித்ததும், பொருள் காணும்படி சொற்றதும், அவர் பொருள்கண்டதும், தம்முள் மாறுபட்டுச் சிலநாள் சென்றதும் ஆக ஐந்து தனித்தனியான கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. இவ்வைந்தில் முதலிரண்டையும், "பிராமணன் 'அரசன் பொருளதிகாரம்...செய்தானாகும்' என்று சிந்தித்து, தன் அகம்...சென்று புக்குக் காட்டினான்" என்றும், "(அரசன் அதனை) ஏற்றுக்கொண்டு....அத்திசை நோக்கித் தொழுதான்" என்றும் இரண்டு தனிவாக்கியங்களாக்கி, முற்பட்ட வாக்கியங்களோடு சேர்த்து, இங்ஙனம் ஆன ஐந்து வாக்கியங்களை இரண்டாவது பந்தியாகப் பிரித்து வாங்கிக்கொள்ளின், அரசன் பொருளதிகாரம் பெற்ற அமிசம் தனியான ஒரு பந்தியில் நின்று நன்கு விளங்குவதாகும்.

மேலே நான்காவது வாக்கியத்தில் காட்டிய கருத்துக்கள் ஐந்தில் பின்னைய மூன்றையும், மூன்றாவது பந்தியின் முதலில், "தொழுது கொண்டு நின்று (அரசன்) சங்கத்தாரை... 'நம்பெருமான்...காண்மின்' என்றான்" என்றும், "என, அவர்கள்...ஆராய்ந்தனர்" என்றும், "ஆராய்வுழி...சென்றன" என்றும் மூன்று தனிவாக்கியங்களாக அமைத்துக்கொள்வது, மூன்றாவது பந்தியின் கூறுபாடான கருத்துக்கள் ஒன்றோடொன்று மயங்காமல் காரணகாரிய முறையாக நிற்பதற்கு ஏற்றவழியாகும். அப்பால் "செல்ல...அரசனுழைச் சென்றார்" என்கிற வாக்கியம் முன்னையவற்றோடு தொடர்புபட்டே நிற்கின்றது.

ஆறாவது வாக்கியம், ஒன்றை யொன்று கொண்டு முடியும் பலவினையெச்சத் தொடர்கள் இயைதலாய், அவன் (உருத்திரசன்மன்) என்கிற தோன்றாவெழுவாய் இருந்தான் என்னும்

முற்றேடு முடிவதாய் அமைத்திருக்கிறது. சிறிய லிபிகளான அச்சிலே இருபத்தாறு வரியுள்ள இந்த வாக்கியத்தில் முடிவுக்கு உதவியாய் வருகின்ற எச்சத்தொடர்கள், "அரசனும்...என" (1), "அஃது...என" (2), "போமின்....அரசன் சொல்ல" (3), "போந்து....சிந்திப்புழி...வரங்கிடப்ப" (4), "இடையாமத்து....உடன்பாடாயிற்றாக....வலங் கொண்டு போந்து" (5), "உப்பூரி...சொல்லி" (6), "ஐயனுவான்...போந்து" (7), "வெளியது....பொருளுரைப்ப" (8), "எல்லாரும்... இருந்து" (9), "மருதன்...மெய்ம் மயிர் நிறுத்தி" (10), எனப் பத்தாகின்றன. "[அவன் (உருத்திர சருமன்)] பின்னர்க் கணக்காயனார்...இருந்தான்" என்பதே இந்த வாக்கியத்தில் முற்றான முடிபு. இந்த முடிபுக்கும் முன் வாக்கியத்துக்கும், இடையில் எச்சங்கள் ஒன்றேடொன்று தொடர்பாக நிற்பதன்றி, நேராய் இயைவதான் தொடர்பு இல்லை. இங்ஙனம் தூராந்வயமாய் பல முழநீளமாய் நிற்கும் வாக்கியங்கள், தற்கால ரீதியாய் நிறுத்துமிடங்களுக்குரிய குறிப்புகளையும், அவரவர் கூற்றுக்குரிய மேற்கோள் குறிகளையும் இட்டு அச்சில் வாசிக்குமிடத்திலும், மாணாக்கனுக்கு மிக்க இடர்ப்பாட்டை விளைக்கும் என்றால், இவ்வித குறியீடுகளும், மெய்களுக்குப் புள்ளியும், எகார ஒகாரங்கள் ஏறிய உயிர் மெய்களின் கோடுகளுக்குச் சுழியும், பிற சுலப சாத்தியங்களும் இல்லாமல் ஓலையில் எழுதியிருந்த காலத்தில் மாணாக்கனுக்கு இவ்வகை வாக்கியங்கள் எம்மாத்திரம் இடர்ப்பாட்டை விளைத்திருக்கும்? மேல்காட்டிய எச்சத்தொடர் ஒவ்வொன்றையும் ஏற்றபெற்றி ஒவ்வொரு முடிபாய் முடித்திட்டால், மூன்றுவதாக அமைத்துக்கொள்ளலான பங்தியானது, பொருளதிகாரத்துக்கு உரைபெற்ற அமிசத்தை ஒழுங்காக விளக்குவதாய்ச் செவ்வி பெற்று நிற்கும். (தொடரும்)

ஸ்ரீ. செல்வகேசவராய முதலியார், எம். ஏ.

## மதனலீலையார்

### MADANA LILA

உலகத்தில் அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கே வாய்ந்த ஆடவரையேனும் பெண்டிரையேனும் காண்டலரிது.

'இருவேறு உலகத்து இயற்கை; திருவேறு ;
தெள்ளிய ராதலும் வேறு'

என்பது பொய்யா மொழி அன்றே? இவ் இரு இலக்கணங்களும் நன்கமைந்த ஸ்திரீ புமான்களைத் தனித்தனிக் காண்டலே அரிதாயின், அவர்களை ஒத்த கிழவனும் கிழத்தியுமாய் யாவரும் புகழும் மேவரும் சிறப்பினை உடையோராய் வாழக்காண்டல் எவ்வளவு அருமை!

ஆயினும், அமிழ்தினும் இனிய செந்தமிழ் மணம் கமழ்கிற மதுரை என்னும் மாநகர் தன்னை ஆண்டுவந்த பாண்டியர் குலமே இத்தகையோர் சிலரைப் பெறும்படியான பெரும் பேறு பெற்றுள்ளது. அவ்வாறு சிறந்தோங்கிய சிலருள் வரதுங்கராமபாண்டியனது ஆருயிர்த் துணைவியாகிய 'மதனலீலையார்' என்பவளது சரித்திரமே நாம் ஈண்டு எடுத்துக் கொண்ட விஷயமாகும். ஆனால் நாம் இங்குச் சொல்லவேண்டியது ஒன்று உண்டு. புலவர் பெருமக்களின் ஜீவிய சரித்திரம் எழுதும் வழக்கம் நம்மவரிடத்தில் இல்லாமற்போன பெருங்குறையால்இச்சரித்திரம்எழுதுவதற்கும் போதுமான ஆதாரம் எவர்க்குமே நாளைவரைக் கிடைத்திலது. ஆயினும் கர்ன பரம்பரையாகவும் என்னினும் கல்வியறிவு, ஒழுக்கங்களில் சிறந்த பெரியோர்கள் மூலமாகவும் கேட்டு உணர்ந்த சிற்சில விஷயங்களையே ஈண்டுக் குறித்துளேன்:

நுண்ணிய அறிவும், திண்ணிய கற்பும் வாய்ந்த இந்நல்லிசைப்புலமை மெல்லியலாரது சிறப்பு பின் வரும் விஷயங்களால் விளங்கும்:—

இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றுச்

சில்லறை வருஷங்கட்கு முன்னே செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுராபுரியில்சந்திர வம்சத்தவனாய் ஆண்டுவந்த பாண்டிய மன்னன் வரதுங்கராம பாண்டியன் என்பவன். இவனுக்கு அதிவீரராம பாண்டியன் என்ற ஓர் தம்பி உண்டு. சகோதரர்கள் இருவரும் நூலாராய்ச்சியும் தமிழ்ப்பாண்டித்தியமும் பெரிதுமுடையோர். ஆனால் இவர்களில் இளையோனாகிய அதிவீரராமன் கற்றறிமூடனாய் வெய்யர், பதகர், பாதார விருப்பர், வீணர், கையர், கயவர், பொய்யர், புலையர் முதலிய பல கீழ்மக்களோடு சேர்ந்து தனது காலத்தைக் கழித்து வந்தான். இவன் தன் கௌரவத்திற்கு ஏற்றபடி இராமல் கண்டவருடன் சேர்ந்து ஈனமான காரியங்களைச் செய்து வந்ததனால் இவனையாவரும் 'பிள்ளைப்பாண்டியன்' * எனக் கூறத் தலைப்பட்டார்கள். இவன் காமகலாஞானத்தில் கைதேர்ந்தவன். ஆதலின், சாமுத்திரிகா லக்ஷணம் பூரணமாய் அமைந்த பெண்கள் தன் குலத்தில் எவ்வளவு சிரமப்பட்டுத் தேடியும் கிடையாமற் போனமையால், அவ்விலக்ஷணம் யாவும் குறைவற வாய்ந்த சக்கிலியப்பெண் ஒருத்தியைக் கடிமணம் புரியலாயினன்.

தமையன் தன் தம்பியைச் சீர்திருத்த முயன்றும் முடியாமற்போகவே, தன்முகத்தில் என்றென்றும் விழியாதிருக்குமாறு அவனைத் தனது நாட்டினின்றும் ஓட்டிவிட்டான். துரத்துண்ட அதிவீரராமன் சில மூர்க்கர்களின் உதவியால் தற்காலம் 'தேன்காசி' என வழங்கும் 'கோற்கை' எனும் நாட்டைப்பிடித்து அதற்கு அரசனாகி, அழகும் கல்வியும் அமைந்த அவ்விழிகுலப்பெண்ணொடு இல்லறம்நடத்துவானாயினன்.

அதிவீரராம பாண்டியன் தமிழ்ப்பாண்டித்யம் பெரிதுமுடையவனாயும், கல்விப்பிரியனாயுமிருந்ததால், பொழுதுபோக்காக, தன்போன்று சந்திர வம்சத்தில் தோன்றி நிஷதபுரியை ஆண்ட நள ராஜனது திவ்ய சரித்திரத்தை விருத்தப்பாவில் எழுதி முடித்து அதற்கு 'நைடதம்' என்று பெயரிட்டான். தான் செய்த நூலின் சொல் நயம், பொருள் நயம், கற்பனை முதலியவற்றைக் கண்டு, தான் மகிழ்வெய்தியதோடுநில்லாமல், பற்பலதேசங்களிலுமுள்ள புலவர் பெருமக்களை வரவழைத்து, அவர்களுக்கும் தன் நூலைப் படித்துக்காட்டி அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவன் தயவை எதிர்பார்த்த சிலர், 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்றனர். அவன் பரம துஷ்டனாகையால் அவனது தண்டனைக்கு அஞ்சியோரும் சிலருண்டு. ஆயினும் அவர்களுக்குத் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக நூலைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுக்க மனமே இல்லை. ஆதலின், அவர்கள் அரசனையும் தம்மையும் திருப்திப்படுத்திக் கொள்ளுமாறு அந்நூலின் நடை 'கரும்பு போன்றிருக்கிறது' எனக் கூறினர். இவற்றை எல்லாம் கேட்ட அதிவீரராமன், உளம் பூரித்துத் தன்னைவிடச் சிறிதும் கல்வியில் தாழாத தன் தமையனுக்கும் ஓர் பிரதி அனுப்பி அவனது அபிப்பிராயமும் வேண்டினன். அது வந்து சேர்ந்த சமயம் வரதுங்கன் இராஜாங்க விசாரணையில் தனது முழுகவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்த காலமாய் இருந்தது. ஆதலின், அவன் தனது இன்னுயிர்த்தோழியாகிய மனைவி கையில் அதைக் கொடுத்து, அவளையே அதன் குணதோஷங்களைக் கண்டறிந்து அதிவீரராமனுக்கு அறிவிக்குமாறு ஆக்ஞாபித்தான். அக்கற்பரசியும் அதனை ஆதியோடந்தமாய்ப் படித்து, "அதன் நடை வேட்டை நாய் நடை போன்றுள்ளது" என அறிவித்தாள். இவ் வபிப்பிராயம் பெற்ற அதிவீரராமனுக்குக் கோபத்தால் முகம் பொங்கியது. ஏனெனில், "கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்றவர்

* பிள்ளைப்பாண்டியன் - பிள்ளைக்குணமுள்ள (ஆனவயதிற்கு அடையாளமில்லாத) பாண்டியன்.

கள், 'நைஷதம் புலவர்க்கு ஔஷதம்' என்றும், அதன் நடை 'கரும்புபோன்றுளது' என்றும் கூறியிருக்க, கேவலம் பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி 'வேட்டை நாய் போலிருக்கிறது' என துணிந்துசொல்லலாமா?" என்று நினைத்தான். தவிரவும், தான் அபிப்பிராயம் வேண்டியது தன் தமையனிடத்திருந்தே ஆதலால், தமையன் தன்னை அவமதிக்க வேண்டுமென்றே தன் மனைவியின் மூலமாகத் தன்னை அவமானப்படுத்தினான் எனக் கருதினான்.

இவ்விதமாக அவன் 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி' மனம் புழுங்கித் தன்னை அவமதித்தவனைத் தக்கபடி சிக்ஷிக்கக் கருதி நால்வகைப் படைகளுடனும் புறப்பட்டு வரதுங்கனது இராச்சியத்துட் பிரவேசித்து யுத்தபேரிகை முழக்கினான்.

அதிவீரராமன் போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் செய்தி வரதுங்கனுக்கு எட்டவே, அவன், தம்பிபால் ஓர் தூதனை விடுத்துப் போருக்குக் காரணம் கேட்டறிந்தனன். பிறகு அவன் தன் மனைவியை அழைத்து, "பெண்கள் நாயகமே! 'பெண்புத்தி பின்புத்தி' என்பதற்கேற்பக் காரியத்தைச் செய்து முடித்தனையே. முதலையும், மூர்க்கனும் கொண்டது விடாவே. நம்மிருவருக்கும் சம்பவிக்கும் அபாயத்தைக் கருதி இது யான் சொல்லவரவில்லை. ஏனெனில், வெற்றியோ, தோல்வியோ இருதிறத்தாருக்கும் பொது. ஆயினும் இருகக்ஷியினும் எவ்வளவு உயிர்ச்சேதம் நேரிடக்கூடும் என்பதை நினைக்குங்கால் என் மனம் வருந்துகின்றது. இதற்கு யாம் என் செய்வது" என்றனன்.

அதற்கு அவள், "அன்பே! யான் இச்சண்டைக்குக் காரணமாவது எப்படி? அதிவீரராமன் வேண்டியது அபிப்பிராயமா? புகழ்ச்சியா? அவன் அபிப்பிராயமே விரும்பியதால் நானும் அபிப்பிராயமே கொடுத்தேன். இருக்கட்டும். இதற்காக வருந்தவேண்டாம். 'அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாகும்.' கூடுமாயின், ஓர் உபாயத்தால் நேர் வழியிலேயே சண்டையை நிறுத்தப் பார்க்கிறேன்" எனக்கூறி, ஓர் ஏடும் எழுத்தாணியும் எடுத்து, "இருந்திருந்தும், ஒரு தாய் வயிற்றிற் பிறந்தும் பிராதத் துரோகிகளாய்ப் போய்விட்ட ஸூரியபுத்திரனாகிய ஸுக்கிரீவன், லங்காதிபதியான விபீஷணன், பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனன் ஆகிய இம்மூவருடைய உதாரணத்தையுமா நீர் பின்பற்றவேண்டும்? தமையன் சொல்லை வேதவாக்காய்க் கருதி நடந்துவந்த பரதனை அறியீரோ? ராமனும் பரதனும் யாவர்? உங்கள் இருவரையும்போல ஒரே தாய்வயிற்றில் உதித்தவர்கள்கூட இல்லையே! மாற்றாந்தாய் வயிற்று மக்களன்றோ? அப்படி இருந்தும் அவர்களுடைய பரஸ்பர நேசம் எத்தன்மையது? நீரும் பரதனுடைய உதாரணத்தைப் பின்பற்றுவீரானால் நம் குலத்திற்கே எவ்வளவு பெருமை!" என்ற கருத்தையடக்கி,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை
வேந்தனையும், பஞ்சவரிற் பார்த்தனையும் பாரா
தே—விஞ்சு, விரதமே பூண்டிந்த மேதினியை
ஆண்ட, பரதனையும் ராமனையும் பார்"

என்ற ஓர் வெண்பா எழுதி அதனை அவனிடம் போக்கினளாம்.

அதிவீரராமன் அதை வாங்கிப் படித்து அதில் கூறியவற்றின் பொருளைச் சிந்திப்பானாயினான். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கைப்பிடித்த வாளாயுதம் அவனை அறியாமலே நழுவிக் கீழே விழுந்தது. இரண்டு கண்களினின்றும் நீர் ததும்பியது. அவன் தனது தகாத செய்கைக்காக அத்தியந்த விசனமடைந்து தனது சைந்யங்களைத் தக்ஷணமே தன் ஊர்போய்ச் சேரும்படி ஆக்ஞாபித்து, அண்ணன் அண்ணியாரைத் தரிசித்து, அவர்கள் திருவடிக்கமலங்களில் வீழ்ந்து, 'சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம் பெரியோ

ராயிற் பொறுப்பது கடனே' என இரங்தனன்.

இது நடந்த சிலநாட்களுக்குப் பிறகு அதிவீரராமன், "அண்ணு! தொல்லிசைப் பயனுர் நல்லிசைப் புலவர்கட்கெல்லாம் கரும்பு போன்றிருக்கும் எனது நூலின் நடை அண்ணியார்க்கு மட்டும் வேட்டைநாய் போன்றிருப்பானேன்" என விநயமாய்க் கேட்க, அவன், "உனது அண்ணியாரையே கேட்டுத் தெரிந்துகொள்" என்றுன். அவனும் அவளே அப்படியே கேட்க, அவள், "வேட்டை நாய் வேட்டை பிடிக்கும்போது உள்ள சுறுசுறுப்பும், அது வேட்டை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போதுள்ள சோர்வும், மந்தகதியும் நீர் அனுபவத்தில் கண்டறிந்திருப்பீரே" என்றனள். அதற்கவன், "ஆம்! ஆம்! அப்படிப்போல்?" என்றனன். "அப்படிப்போல் உமது நூல் நடையும் வேட்டை நாய் நடை போலவே ஆரம்பத்தில் குதூகலமாய்த் தான் ஓடுகிறது. ஆயினும் அதன் ஓட்டமெல்லாம் புனல் விளையாட்டுப் படலம் முடியும் மட்டே. காரணம் அறியக் கஷ்டம் சிறிதும் இல்லை. நீர் ஓர் சிற்றின்பப் பிரியர் என்பதை உமது நூலாலேயே வெளிப்படுத்திக் கொண்டீர். உமது நூல் உருவகவணி யாதிய இலட்சணங்களாற் சிறந்ததேனும், சிற்றின்பவர்ணனைகளே அக்காண்டம் வரை அதில் பெரும்பாலும் நிறைந்துள. எஞ்சிய காண்டங்களிலும் இத்தகைய விஷயத்தை உம்மால் கூடிய வரை நுழைக்கத்தான் பார்த்தீர். ஆயினும் முடியவில்லை. ஆதலால் வெகு கஷ்டப்பட்டு வேண்டா வெறுப்பாய்ச் சிற்சில பாக்களைப் பாடி நூலை முடித்திருக்கின்றீர். யான் கூறியது உண்மைதானு?" என்றுள். இதைக் கேட்டவுடன் அவன் உத்தரம் சொல்லாது நின்று, சிறிது நேரத்திற்கெல்லாம், "உண்மையே. ஆயினும், புலவர் பெருமக்கள் என் என் நூலின் நடை கரும்பு போனறுள்ளது எனக் கூறினர் என்று எனக்குப் புலப்படவில்லை" என்றனன்.

அதற்கு அவள், "மைத்துனரே! அவர்கள் சொல்லியது வஞ்சகப் புகழ்ச்சியே யாகும். நீர் தமபனுக்கே அடங்காத் தறிதலையாதலின் அவர்கள் உமது ஆக்ஞைக்கு அஞ்சியே இவ்வாறு உரைத்திருக்கக்கூடும். ஆயினும் அவர்கள் வாக்கும் பொய்யாகாது. நீர் கூறிய புலவர்களும் யான் கொண்ட கருத்தே கொண்டவர்கள்தான். எவ்வாறெனில், கரும்பு எப்படி ஆரம்பத்தில் அதிக இனிமையும் ருசியுமாயிருந்து கொழுத்தாடைப் பக்கம் போகப்போக இனிமை குறைந்துவிடுகிறதோ, அப்படியே உமது நூலின் நடையும் ஆரம்பத்தில் இனிமையாயிருந்து கடைசியில் போகப் போக இனிமை குன்றியுள்ளதென இரகசியமாய் வெளிப்படுத்தினர். அன்றியும் கஷ்டப்பட்டுச் சாரத்தைக் கிரகிக்கவேண்டி யிருப்பதாலும் அதனைக் கரும்புக்கு அவர்களிற் சிலர் உவமித்து இருக்கலாம். இது உமக்குத் தெரியாமல் போயிற்றே" என்றுள்.

இதனைச் செவியுற்ற அதிவீரராமன் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கி நிற்க, அவனுடைய அண்ணியார், இதுதான் அவனைத் திருத்தி நல்வழிப் படுத்தத் தக்க சமயம் எனத் தேர்ந்து அவனை நோக்கி, "மைத்துனரே! நான் ஒன்று தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். யான் புகல்வது கடுமொழிபோற் காணப்படினும் இன்சொல் எனவே ஏற்குமாறு வேண்டுகிறேன். வேறொன்றும் இல்லை. உமது படிப்பெல்லாம் விழலுக்கிரைத்த நீர்போல் வீணுயிற்றே என்று விசனப்படுகிறேன். 'கற்றதனு லாயபயன் வாலறிவன் நற்றுள் தொழல்" அன்றோ? உமது கல்வித்திறத்தை இதுபோன்ற சிற்றின்பாதிகளிற் காட்டாமல் பேரின்ப விஷயமாய் யாதேனும் ஓர் நூல் செய்வதில் உபயோகித்திருப்பீராயின் எத்துணை பெருமைபாய் இருக்கும்!" என்ன, அவன், தனது மூடத்தனத்திற்கு

இரங்கி, தான் முன்பு பெண் என அவமதித்த பேரறிவுடையாளைப் பெரிதும் வியந்து, இனித் தான் ஒருக்காலும் சிற்றினம் சேர்வதில்லை என்றும், இனி சத்காலக்ஷேபமே செய்வதாகவும் அவளுக்கு உறுதிமொழி கொடுத்துத் தன் வாக்கையும் நிறைவேற்றினன். எங்ஙனமெனில், இவன் இதற்குப் பின்புதான் காசி காண்டம் முதலியன இயற்றினனென்றும், அப்பொழுது, தானே, வரதுங்கபாண்டியனது மனைவிக்கே தானியற்றிய நூலின் பிரதியை அனுப்பி அவளது அபிப்பிராயத்தை வேண்ட, அவள் அவற்றின் நடை, 'வேட்டைக்குதிரையின் நடைபோன்றுள்ள'தெனக் கூறினள் என்றும் தெரியவருகிறது. [வேட்டைக் குதிரையின் நடை போகப் போகத் தீவிரமும் சலிப்பின்மையுமாய் இருக்குமென்று அனுபவசாலிகள் கூறக் கேட்டிருக்கிறோம்.] இவன், பிறகு, இலிங்கபுராணத்தைப் பாடி அவளுக்கு அனுப்ப, அவள் "பாட்டு வெள்ளை (எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது) ஆயினும், பொருளோ மிகவும் மதிக்கத்தக்கது" என்பதைக் குறிப்பாய்க்காட்ட அது 'முத்துப்போலிருக்கின்றது' எனக் கூறினளாம். நிற்க.

அதிவீரராம பாண்டியன் அவளுடைய நல் உபதேசங்களைக் கேட்டுத் திருந்தியபிற்பாடு, தான் துஷ்டனாய் அடங்காப் பிடாரியாய்த் திரிந்த காலத்தில் வந்த சிறுமையையும், சற்குணவானானதன்பின் தனக்குக் கிடைத்த பெருமையையும் பூஜ்யதையையும் நினைத்து நினைத்துப் 'பெருமையும் சிறுமையும் தான்தர வருமே' என்று அடிக்கடி சொல்லிக்கொள்வானும். அவன் இயற்றிய 'வேற்றிவேற்கை' என்னும் 'நறுந்தொகை' யானது பெரும்பாலும் அவனது சுபானுபவங்களைப்பற்றியே கூறும் ஓர் சிறு நூல் என்றாலும் பொய்யாகமட்டாது. இவை நிற்க.

பொற்புறு கற்பரசி யாகிய இவ் வற்புதக் குலமாதைப்பற்றி மற்றும் சில கூறவேண்டியிருக்கிறது. அவளுடைய ஆருயிர்க்கொழுநனாகிய வரதுங்கபாண்டியன் தன்னுடைய தம்பியாகிய அதிவீரராம பாண்டியனோடு சமாதானமாகித் தென்காசியையும் ஆண்டுவந்தபொழுது சிற்சில காரணங்களால் தன் உயிர்க்காதலியைப் பிரியநேர்ந்தது. நாட்கள் பலவாகியும் அவன் வராமற்போகவே அவனது பிரிவாற்றாது வருந்தி அம்மாது சிரோன்மணி நாரை, வண்டு முதலியவற்றைத் தூதுவிட்ட பாவனையாக,

"என்னையிவ்வா றவர்மறந்தும் யானவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்தானோ? அப்பிறப்பிற்
செய்ததவம் முடிந்த வாறோ?
கன்னன்மதன் அபிராமன் வரதுங்க
ராமனியற் காசி * நாட்டி
லன்னவயற் குருகினங்காள்! இனியெவ்வா
றுயிர்தரித்திங் காற்று மாறோ?"

"செப்பாரும் முகிழ்முலையா ரெல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ
வொப்பாரு மில்லாவென் கணவனுடன்
யான்கூடி யுறவா டாமல்
வெப்பாலும் மிருகாமத் துயராலு
நாடோறும் மெலிந்து வாடி
யிப்பாடு படவன்றோ விறையோனென்
றலையோட்டி லெழுதி னானே."

"எண்டிசா முகத்துந் திங்க
ளிளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந் தோறுங்
கொழுங்கண்ணீர் முலையிற் சோரப்
பண்டுநா மறியாக் காமத்
துயரினாற் படுவ தெல்லாம்
வண்டுகாள்! உரையீ ருங்கள்
வரதுங்க ராம னுக்கே"

என்று சில பாக்கள் பாடி, அவை எழுதிய ஓலையைப் பணியாரக்குடத்துள் வைத்துத் தன் நாயகனுக்கு அனுப்பினளாம்.

பிறகு சின்னாட்களுக்கெல்லாம் நிகழ்ந்த ஓர் அதிசய சம்பவத்தால் கற்பிற் சிறந்த நம் கதா

* காசி = தென்காசி.

நாயகியின் உண்மைப் பெருமை விளங்கும். அவ்வதிசய சம்பவம் வருமாறு :—

வரதுங்கராம பாண்டியனுக்கு உலக வாழ்க்கை குறுகவே, அவன் அதி புத்திசாலியாக இருந்தும், தன் மனைவியினின்றும் பிரிவதற்காகச் சிறிது மனங்கலங்கிப் பின்னர்,

" அஞ்சலென்ற கரதலமும்
கணபணகங் கணமும்
அரைக்கிசைந்த புலிஉடையும்
அம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும்
கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும்
கண்கள்ஒரு மூன்றும்
நஞ்சைஉண்ட மணிமிடறும்
முந்நூலும் மார்பும்
நலம் திகழ்வெண் நீற்றொளியும்
மறிமானும் மழுவும்
பஞ்சணைச்சிற் றிடைஉமையாள்
ஒப்பனைப்பா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப்
பயமுண்டோ எமக்கே"

என மனந் தேறினனும்.

இஃது அறிந்த அவனது மனைவி பிறப்பு இறப்பிற்குக் காரணமாயிருக்கும் பற்றினை ஒழிக்குமாறு அவனுக்குப் புத்தி புகட்டி "உடம்பு என்ற புழுக்கூட்டைச் சேர்ந்தும் சேராமலும் இருக்கும் பரம்பொருளும், அருட்பிரகாசமும், பரம் அபரம் (ஆதி, அந்தம்) என்பவற்றிற்கும் அப்பாலாகிய அறிவும், மயிர்முனை கூட இடமில்லாமல் எங்கெங்கும் நிறைந்த முழுமுதற்பொருளும், நினைத்தமாத்திரத்தில் உதிக்கக்கூடிய ஜோதியும், பெரும்பாக்கியம்செய்து பல குறைகளை நிவர்த்திக்க விரும்பும் மெய்யடியார்களுக்கு வேண்டுவன உதவும் பசுமையான் பூங்கொத்துகளை உடைய கற்பக விருக்ஷம் போன்றுள்ளதும், மனவாக்காதிகளின் வேறுபாட்டால் அளவிடக் கூடாததுமான களங்கமற்ற வெட்ட வெளியை மனமாகிய ஆகாயத்தில் அடைப்பாம்" என்ற கருத்தை அடக்கி,

" ஆக்கையெனும் புழுக்குரம்பை
அணைந்து அணையாப் பொருளை
அருள் ஒளியை பராபரத்திற்கு
அப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கும்
இடமற எங்கெங்கும்
நிறைந்து நின்ற முழுமுதலை
நினைவில் எழும் சுடரை
பாக்கியங்கள் செய்து அனந்த
தவக்குறைகள் முடிக்கும்
பழ அடியார் தமக்கு உதவும்
பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால்
அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறு வெளியை
மனவெளியில் அடைப்பாம்"

எனக்கூறவே, என்ன ஆச்சரியம் பாருங்கள்! நமது கதாநாயகி உடனே குன்றாத மாங்கல்ய கோமளமாகவே பரமபதம் அடைந்தனள்! அவள் புருஷனோ மரணபத்தினின்றும் தப்பிப் பிழைத்து விட்டான்!

சகோதரிகளே! இவ்வுத்தமியின் உண்மைச் சரிதையைப் பற்றிச் சற்று யோசித்துப்பாருங்கள். இவ் வற்புதக் கலைமாது கல்விமானாகிய அதிவீரராமனுக்குப் புத்தி புகட்டி, கல்வியைக்கொண்டே அவனை நல்வழிப்படுத்தியது எவ்வளவு பாராட்டத்தக்கது! இதனால் நமது தேசத்து ஸ்திரீகள் முற்காலத்தில் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றவர்களாய் இருந்தனர் என்று தெரியவருகிறதல்லவா? வேத ஆகம புராண இதிகாசங்களும், தொல்காப்பியம் ஆதிய தொன்மைப் பேரிலக்கணங்களும், சிந்தாமணி சிலப்பதிகார மாதிய ஐம் பெருங்காப்பியங்களும், பதினெண்கீழ்க்கணக்கின் சிலவும், ஏனைய பிறவும் தக்க நூலாசிரியரிடம் வரன்முறையிற் கற்றுத் தெளிந்து, அவற்றினுள்ள சொற்களையும் விஷயங்களையும் தனது நூலில் அநேக இடங்களில் அதிவீரராமன் பொருந்தப்

...

பிரயோகித்துள்ளா னதலின், அவ் வரிய நூலின் குணதோஷங்களைக் கண்டறிய எத்துணைக் கல்விப்பயிற்சி அவனுக்கு இருந்திருத்தல் வேண்டும்! அன்றியும், 'அஞ்சலென்ற......' என்று சகுண மூர்த்தத்தைக் குறித்துக் கூறியதால் வரதுங்கராமன் த்வைதி என்றும் சித்தாந்தி என்றும், 'ஆக்கையேனும் .....' என்று நிர்க்குண சொரூபத்தைச் சுட்டியதால் அவன் மனைவி அத்வைதி என்றும் வேதாந்தி என்றும் அறியலா மன்றோ? இவ்வாறு வேதாந்த சித்தாந்திகள், காதன் மனையாளும் காதலனுமாக, மாறின்றி சமரச நன்னிலை பெற்ற உத்தம வித்துவ ரத்தினங்களாய் வாழ்ந்து இல்லறம் நடாத்தினது எவ்வளவு ஆச்சரியகரமானது! இதனால் ஸ்திரீபுருஷர்கள்கூட தத்தம் மதக்கொள்கையை அனுசரித்து வாழும்படியான ஸ்வாதீனம் முற்காலத்திற் பெற்றிருந்தார் என்று விளங்கவில்லையா? இம்மட்டோ? அரிவையரை அந்தப்புரங்களில் அடைத்து வைத்து அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தில் ஆழ்த்துவது பூர்வீக சம்பிரதாயம் இல்லை என்பதுவும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ? பாருங்கள்! அந்தப்புரத்திலேயே நமது வரதுங்கன் மனைவி அடைபட்டிருப்பாளேயாயின், 'வேட்டை நாய்,' 'வேட்டைக்குதிரை' இவைகளைப் பற்றிய இபற்கை விசேஷங்கள் எப்படி அறிந்திருக்கக்கூடும்? மேலும், கல்வி கற்பதாலும், கணவனையன்றி மற்றோரைக் கண்ணுறுவதாலும் கற்புநிலை தவறும் எனப்பிதற்றும் பேதைமாக்களுக்கு அப்பெண்மணியின் திவ்ய சரித்திரம் சற்புத்தி புகட்டாமற் போகாது. 'கற்பு' என்ற பதத்திற்குக் 'கல்வி' என்றே அர்த்தம். ஆதலால் கற்பு வேண்டுமாயின் கல்வியும் வேண்டும் என்பது அப்பதத்தினாலேயே விளங்கவில்லையா? ஒருவன் பெறுதற்கரிய பொருள்களுள் கற்புடைய மனையாளினும் உயர்வான பொருள்கள் எவை? 'தையலர் சிறந்தவழி வையகம் சிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. இதனை ஆடவர்கள் கடைப்பிடித்துத் தங்கள் மனைவிமார், தாய்மார், சகோதரிகள் முதலியோர்க்கு வித்தியாப்பியாசம் முதலியன செய்வித்து அவர்களை அந்தகாரத்தினின்றும் அகற்றுமாறு வேண்டுகிறோம். சுகந்தத்தோடு கூடிய சுவர்ண புஷ்பம்போல் குணமும் கல்வியும் வாய்ந்த பெண்மணிகளுடன் ஆடவர்கள் இல்லறம் நடத்திவருவது எத்துணை மேன்மையாய் இருக்கும்!

அன்பார்ந்த சகோதரிகளே! உங்களை யான் வேண்டுவது ஒன்று உண்டு. அஃதென்னவெனில் நீங்கள் வாயில்லாப் பூச்சிபோலிருப்பதே கற்பு என்று எண்ணாமல், நீங்களே வித்தை பெரிதும் விரும்புகிறீர்கள் என்பதை உங்கள் புருஷர்களுக்குக் காட்டி, அவர்களது அநுமதி பெற்று கற்றுத் தேர்ந்து அடங்கி அதி புத்திசாலிகளாவீர்களாக!

பண்டித ம. கோபால கிருஷ்ணையர்.

---

உயர்வு தாழ்வு இல்லை.—வயது சென்ற ஒரு சேனாபதி ஒரு நாளில் ஆலயத்திற்குச் சென்று பலிபீடத்தை நோக்கி நடந்துபோகையில் எதிரில் மற்றொரு எளிய கிழவன் வந்துகொண்டிருந்தான். அப்பொழுது அந்த ஆலயத்தில் வேலைசெய்யும் பரிசாரகன் இவ்விருவர்களும் சந்திக்கபோகிறதைப் பார்த்து சந்தடிசெய்யாமல் எளியகிழவன்பின்னே வந்துநின்று முதுகைத்தொட்டு சேனாபதி முன்னே போகட்டும். நீர் சற்றே ஒதுங்கி நிற்கவேண்டுமென்று காதிலே மெதுவாய்ச்சொன்னான். தீர்க்க பார்வையும் நுட்பமாய்க் கேட்டறியும் காதையும் படைத்த அந்தசேனாபதி அந்தபரிசாரகன் தொட்டதையும் ரகசியமாகச் சொன்னதையும் இன்னதென்று அறிந்துகொண்டு அந்த எளிய கிழவன் அருகிற்சென்று கையைப்பிடித்து அசையவொட்டாமல் நிறுத்திமரியாதையாயும் மிருதுவசனமாயும் நீர் ஒதுங்கவேண்டாம் கடவுளைத் தொழவந்த ஆலயத்தில் உயர்வும் தாழ்வும் இல்லை. எல்லாரும் சமமே என்றான்.

# வியாஸ விதானம்

## ESSAY WRITING

## I. வர்ணனை வியாஸங்கள்

## DESCRIPTIVE ESSAYS

### (1) நாட்டுப் பிராணிகள்—பசு : DOMESTIC ANIMALS—*The Cow.*

குறிப்பு.—தோற்றம் முதலியன—காணப்படும் இடங்கள்—ஸ்வபாவம் முதலியன—உபயோகம்—முடிவு.

பசு ஸுமார் $3\frac{1}{2}$-முதல் 4-அடி வரை உயரமும் $1\frac{1}{2}$-மடங்கு நீளமும் உடைய ஓர் நாற்கால் மிருகம். இது தன் இஷ்டப்படி மேய்ந்து வருமாயின் மிகுந்த புஷ்டியுள்ளதாக இருக்கும். இதனால்தான் கிராமங்களிலுள்ள பசுக்கள் மிகப் புஷ்டியாயும், பட்டணங்களிலுள்ள பசுக்கள் மிக மெலிந்தும் காணப்படுகின்றன. மாட்டினங்களில் காணப்படுவதுபோல கழுத்தடியில் ஆடு சதையும், மேல்புறம் சதைக் குவியலாகிய சிமிழும், நுனியில் மயிர்க்கற்றையுடைய வாலும், பிரிந்த குளம்புகளுடைய கால்களும், இரண்டு கொம்புகளும், இந்த ஜந்துவுக்கு உண்டு. அபாயம்வரும் வேளையில் கொம்புகளையும் கால்களையும், ஈ முதலியவைகள் மொய்க்குங்கால் வாலையும் பசு உபயோகப்படுத்துவது வழக்கம். அநேகவித நிறங்கள் உள்ள பசுக்கள் காணப்படினும் கபில (கருமைப் பொன்மை) வர்ணம் உடைய பசுக்களே சிறந்தவை என்று நம் தேசத்தவர் மதிக்கின்றனர்.

பசு ஆசியா முதலிய எல்லாக் கண்டங்களிலும் காணப்படும். நம் பரதகண்டப் பசுக்களைப்போல வெளியூர்ப்பசுக்கள் இருக்கமாட்டா. அவைகளில் சிற்சிலவற்றிற்குக் கழுத்தின் மேல்பாகத்தில் சிமிழ் இராது. அவைகளின் குரல் கொஞ்சம் பேதப்பட்டிருக்கும். இரவில் அவை கத்தினால் சிறுவர்கள் பயந்து கொள்வார்கள். ஆயினும் பால் கறக்கும் விஷயத்தில் எல்லாப் பசுக்களும் ஒரேமாதிரிதான். இஃது அவைகளுக்கு உண்ணக்கிடைக்கும் ஆஹாரத்தைப் பொறுத்ததே ஒழிய வேறொன்றுமில்லை. ஸ்விட்ஸர்லண்டு முதலிய மலைப்பிரதேசங்களில் தம் இஷ்டப்படி மேய்ந்து கொழுக்கும் பசுக்கள் ஏராளமாகப் பால் கறத்தலால் அவ்வூரார் தமக்கு வேண்டிய பால் போக மிகுதியை வெளியூர்களுக்கும் குறுக்கிய பாலாக அனுப்பி வியாபாரம் செய்து வருகின்றனர்.

பசு மிகுந்த ஸாதுவான ஜந்து. அதிகமாக உதைப்பது, முட்டுவது முதலிய துர்க்குணங்கள் பெரும்பாலும் பசுக்களுக்கு இல்லை. இதனால்தான் 'அவன் பசுப்போல இருக்கிறான்,' 'பார்த்தால் பசுபோல பாய்ந்தால் புலி போல' என்ற வசனங்களும் வழங்கிவருகின்றன. நமது கிராமவாஸங்களில் பெண்டுகளும் பசுவை எளிதில் கறந்துவிடுவார்கள். சிற்சில பசுக்கள் முரடுகளாகவும் இருக்கலாம். அவற்றின் கால்களை முதலில் கட்டிவிட்டுத்தான் கறக்கத் தொடங்கவேண்டும். பொதுவாக பசு அவ்வளவு அறிவுடைய பிராணியல்ல. இதனால் தான் 'அவன் வெறும் பசுவல்லவா?' என்ற வசனமும் வழங்கி வருகின்றது. ஸாதாரணமாகப் பசு கட்டினவிடத்து கஷ்டப்படுத்தாது விழுந்துகிடந்து, உடையவன் இஷ்டப்படி எல்லாம் நடந்துவரும்.

பசுவால் மனிதன் அடையும் பலன் அநேகம். முதலில் அதன் பால் மனிதனுக்கு ஓர் முக்கிய உணவு. அதிலிருந்து உண்டாக்கப்படும் தயிர், நெய் முதலியவைகளும் அத்தன்மையவே. பசுவின்பால் ஸாதாரண மனிதருக்கு நல்ல உணவாவதோடுங்கூட, குழந்தைகள், நோயாளிகள் இவர்களுக்கு நல்ல பலம் கொடுக்கும் ஓர் உணவாகும். அதன் சாணம் கெட்டகாற்றுக்களைச் சுத்தப்படுத்தும் குணமுடையது. ஆனால் அதன் சாணம் புழுத்துக் கெட்டுப்போகும்படி மாத்திரம் குவித்துவைக்கவே கூடாது. இந்தக் குவியல் வீட்டின் அரு

கிலிருந்தால் வியாதிகளை உண்டாக்கி விடும், வயல் வெளிகளிலிருந்தால் நல்ல உரமாகும். பசுவின் சாணத்தை உலரவைத்து எரித்துச் சாம்பலாக்கி உண்டாக்கும் விபூதிக்குச் சிறந்த சக்திகள் இருக்கின்றன. பசுவின் மூத்திரத்திற்குச் சிற்சில வியாதிகளைத் தீர்க்கும் திறனுண்டு. ஒருவன் சில பசுக்களை வைத்து ஆண்டு வருவானாயின் அவனுக்குப் பணம் ஏராளமாகச்சேரும். பசு இவ்வளவு உபயோககரமான ஜந்துவாதலின், இதை மிகச் சிறந்த பிராணி என்றும், இதைத்தானம் செய்வது மிகச் சிறந்த கொடை என்றும் எண்ணி, இந்த ஜந்துவை ஓர் பரிசுத்தப்படுத்தும் தேவதை என்றே நம் நாட்டவர்கள் கொண்டாடுகின்றனர். இதனாலே பசுக்களைவைத்து நன்றாக ஆள்வது ஓர்சிறந்த புண்ணியம் என்பது நம்மவர் துணிபு.

இப்படி இருப்பினும் நம்மவரில் அநேகர் பசுக்களின் விஷயமாக அநேகவித அநியாயங்களைச் செய்து வருகின்றனர். கசாப்புக்கடைக் காரர்களுக்குப் பசுக்களை விற்பது, பசுக்களை வைத்து ஆளும்பொழுது அவைகளுக்குத் தகுந்த உணவு அளிக்காமலும், கன்றினுக்குக் கூடப் பாலை விடாமலும் அறக்கறந்து விடுவது, கன்று இறந்தபின் பசுவைத் தோற்கன்று முதலிய உபாயங்களால் மோசம் செய்வது முதலியவைகளே இவ்வநியாயங்களிற் சில. வடதேசங்களில் சிற்சிலஇடங்களில்கோரக்ஷணஸபை வைத்துக் கசாப்புக் கடைக்காரர்கள் கையில்பசுக்கள் அகப்படாமல்தடுத்து, அவர்கள் கொல்வதற்காக அவைகளை எப்படி கொழுக்க வைக்கிறார்களோ, அப்படி இவர்களும் மெலிந்த பசுக்களைக் கொழுக்க வைத்துப் பால் கறந்து வியாபாரம் செய்கின்றனர். பசுக்களை வைத்துக்கொண்டே அவைகளை ஒழுங்காக நடத்தாத கொடியவர்கள் தாமேயாவது அல்லது அவர்களின் தோழர்கள் மூலமாகவாவது திருந்தவேண்டுமேயொழிய அவர்கள் திருந்துதற்கு வேறேவழி இல்லை.

[இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸ விஷயங்கள்

| | |
|---|---|
| 1. ஆடு | 6. குருவி |
| 2. கோழி | 7. காக்கை |
| 3. நாய் | 8. கிளி |
| 4. ஒட்டகம் | 9. பூனை |
| 5. எறும்பு | 10. எலி |

போதக்குறிப்புகள்

இக்குறிப்புகளுள் சிற்சில எல்லா வியாஸ விஷயங்களிலும் விஸ்தரிக்க முடியாமலும் இருக்கலாம்.

1. தோற்றம்.—அங்கங்களின் உபயோகங்கள்: மாறுபாடுகள்.
2. காணப்படும் இடங்கள்.—அவைகளுள் இருக்கும் பொது மாறுபாடுகள்.
3. இனங்கள்.—அவைகளின் வேற்றுமை ஒற்றுமைகள்.
4. ஸ்வபாவம்.—ஆஹாரம், வாழும் இடம், பொதுக் குணங்கள், இயற்கை அறிவு.
5. உபயோகம்.
6. முடிவு.—பொதுவிஷயங்கள், அறிவிப்பு முதலியன.]

வென்னீரின் உபயோகம்.—வென்னீரை வைத்தியத்துக்குக் கையாளாதவர்கள் ஒருவருமில்லை. வயிற்றுநோய், மார்நோய், மூச்சடைப்பு, கீல்வாய்வு, தொண்டை நோய் இவைகளுக்குச் சாதாரணமாய் வென்னீரை உபயோகப்படுத்தி சுகமடைவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? அப்படிக்கிருந்தாலும் வைத்தியர் சொன்னபடி உபயோகிக்க வேண்டுமேயல்லாமல் அவரவர்களுக்குத் தோன்றியபடி வழங்கினால் சிகிச்சா உபசாரமாகாமல் விபரீதமாய் முடியும். குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம் கட்டியிருந்தால் ஒரு கம்பளித்துண்டை பொங்கக் காய்ந்த வென்னீரில் தோய்த்துப் பிழிந்து கழுத்தைச் சுற்றி ஆவியிருக்குமளவில் சுத்திவைத்தால் பத்து நிமிஷத்தில் அந்தக் கபம் கரைந்துபோகும். பல் நோய் கண்டாலும், சைத்தியத்தால் கன்னத்தில் நரம்பு நொந்தாலும் வென்னீர் ஒத்தடம் கொடுக்கலகுவாகும். தலைநோய் கண்டால் கால்களை வென்னீரில் வைத்துக்கொண்டு பிடரியிலும் வென்னீர் ஒத்தடம் கொடுத்தால் நீங்கிப்போகும். பித்தநீர் வெளிப்படுத்தவேண்டுமானால் வென்னீரை உட்கொள்ளவேண்டும். நகத்தைச்சுற்றி உண்டாகும் உகிர்ச்சுற்று என்னும் புண்ணுக்குப் பொறுக்கப் பொறுக்கப் புண்விரலை தோய்த்தெடுத்தால் சீக்கிரத்தில் ஆறிப்போய்விடும். கட்டிகளையும் ரணங்களையும் வென்னீரால் அலம்புவதே இதமான உபசாரமாகும்.

# பயிர்களுக்குத் தண்ணீரின் உபயோகமும் வீண் செலவும்

## THE USE & ABUSE OF WATER FOR PLANTS

செடிகளுக்கு அவைகளின் வேர்பக்கத்தில் தண்ணீர் இருக்கவேண்டியது அவசியம். அனேகமாய் மழையில்லாத வறண்ட இடங்களில் தானாய் முளைத்து வளரும் காட்டுச் செடிகளுக்குங்கூடத் தண்ணீர் அவசியம். தண்ணீர் இருக்கும் இடத்தைத்தேடி பூமிக்குள் ஆழமாய்த் தங்கள் வேர்களைச் செலுத்தக்கூடிய சக்தி அவைகளுக்கிருப்பதால்தான் அவைகள் ஜீவிக்க முடிகிறது. தண்ணீர் அகப்படாத இடங்களில் செடிகளின் வளர்ச்சி குறைவாகவும் தாமதமாகவுமிருக்கும். மேலும் கொஞ்சகாலத்துக்குப் போதுமானபடி தண்ணீர் பாய்ச்சிப் பின் தண்ணீர் பாய்ச்சாமல் நிறுத்திவிட்டால் அவைகள் வாடி உருவங் குலைந்துபோகின்றன. உடனே அவைகளின் குறை தீர்த்தாலன்றி அவைகள் மடிந்துபோகும் அபாயத்துக்குள்ளாகின்றன. சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குத் (தண்ணீர்த் தட்டுண்டானால்) காலத்துக்கு முன்கூட்டியே அவைகள் பூத்துக் காய்த்துவிடும். அப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில் பயிரின் விளைவு வெகுவாய்க் குறைந்துபோவதுமன்றித் தானியத்தில் மணிபிடிக்காமல் பிரயோஜனமற்ற பதராயிருக்கும்.

செடிகளுக்குத் தண்ணீர் அநேக விதங்களில் உபயோகப்படுகிறது. முதலாவது அது செடிகளுக்கு அவசியமான ஆகாரம். ஜீவஜெந்துக்கள் தண்ணீர் குடிக்கவேண்டியது அவசியமென்று உங்களுக்குத் தெரியுமே. அவைகளைவிடச் செடிகளுக்குத் தண்ணீர் அதிக அவசியம். செடிகளில் அதிக பாகம் தண்ணீராகவேயிருக்கிறது. அவைகளுக்குப் போதுமான அளவுக்குத் தண்ணீர் பாய்ச்சவில்லையானால் அவற்றின் தண்டுகள் சத்தில்லாமல் கடினமடைந்து மரத்துப்போகும். செடிகள் தங்கள் ஆகாரத்தை ஜல ரூபமாகவே அருந்தக்கூடும். பூமியிலிருந்து வேர்களுக்குள் புகும் தண்ணீரில் எப்பொழுதும் தாதுப்பொருள்கள் கரைந்திருக்கின்றன. இதுவே செடிகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஆகாரம். மேலும் இந்த ஆகாரம் அதிக நீருடன் கலந்ததாய் இருக்கவேண்டும். (அதாவது கொஞ்சமான தாதுப்பொருள்கள் அதிகமான தண்ணீரில் கரைந்திருக்கவேண்டும்.) இவ்விதமாக ஏராளமான தண்ணீர் இடைவிடாமல் அவைகளின் தண்டுகளின் வழியாய் இலைகளுக்குப் போய் அங்கிருந்து ஆவியாய் வெளியாகிறது. கடைசியாகச் செடிகளின் உருவம் குலையாமல் இருப்பதற்குத் தண்ணீர் அவசியம். அவைகளுக்கு அதிகமான தண்ணீர் விடாவிட்டால் (அவைகளின் இலைகளும் கிளைகளும்) தளர்ந்து தொங்கிக்கொண்டிருக்கும். அவைகள் தங்கள் இலைகளின்மேல் சூரிய ஒளி படும்விதமாய்ப் பரப்பிக் கொண்டிருக்க வேண்டியதற்கு அவைகளின் உள்ளே தண்ணீர் நிறைந்து வளையாமல் விரைப்பாயிருக்க வேண்டியது அவசியம். செடிகளின் கிளைகள் விரிந்து படர்ந்திருக்க வேண்டியது மன்றி, அவற்றிலுள்ள புஷ்பங்கள் நன்றாய் மலர்ந்திருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் அவைகளில் காய் பிடித்தும் பழுத்தும் விளைவடையும். இல்லையானால் அந்தப்பயிர் பலனற்றதாகும்.

ஆனால் நீர்ப்பாய்ச்சலுக்கு ஏற்பட்ட பிரதிகூலங்களும் உண்டு. மேக மண்டலத்திலிருந்து அமைதியுடன் (நிஸ்ஸப்தமாய்) இறங்கும் மழைக்குப் பாய்ச்சல் தண்ணீர் நிகராகமாட்டாது. முதலாக, ஜீவஜந்துக்களைப்போலவே செடிகளுக்கும் அடிக்கடி குளித்தல் (உடம்பு கழுவுதல்) அவசியம். இல்லையானால் செடிகளின் ...



[நீர்க்காலும் (சாலும்) சிறுவரம்பும் சிறுமேடு
அல்லது மஞ்சி கட்டிப்பாய்ச்சுதல்]

இலைகள்மேல் தூசுபடிந்து அவைகளுக்கு மூச்சு
முட்டிப் போவதுமன்றி, பூச்சி புழுக்கள் பலு
கிப் பெருகி செடிகளுக்கும் பிராணாபாயத்தை
விளைக்கும். மழை பெய்து அது செடிகளைச்
சரியாய்க் கழுவிவிட்டால் பூச்சி புழுக்கள்
அதிகமாய் விர்த்தியடைய மார்க்கமிராது.
இரண்டாவது, நீர்ப்பாய்ச்சும்போது நிதான
மில்லாமல் அதிகத்தண்ணீர் பாய்ச்சுவதினால்
எப்பொழுதும் கெடுதியுண்டாகக் கூடியதாக
வே யிருக்கிறது. நெற்பயிரானாலுங்கூட, ஒரு
பயிரின் விளைவுக்கு வாஸ்தவத்தில் எவ்வளவு
குறைந்த தண்ணீர் போதுமானதென்று
இந்துதேசத்துக் கிருஷிகர் அறிந்துகொள்ள
வில்லை. இவ்வளவு காலமாய் அவர்கள்
ஒரு பயிருக்கு எவ்வளவு அதிகமான தண்
ணீர் பாய்ச்சினால் பாதகமிராதென்று
கண்டுகொள்ளப் பிரயாசப்படுவதாகத் தோற்று
கிறது. பயிர்கள் அழுகி அழிந்துபோகாமல்
அவைகளுக்கு எவ்வளவு அதிகமான தண்ணீர்
பாய்ச்சலாம் என்பதை அவர்கள் கவனிப்ப
தைப் பார்த்தால் ஆச்சரியத்தை யுண்டாக்கு
கிறது. இந்துதேசத்துக்கிருஷிகர் நீர்ப்பாய்ச்
சல் வெகு நல்லதென்றும் பயிர்கள் சரியான
படி விளைவடைய அது அவசியமானதென்
றும் கண்டுகொண்டதால், எவ்வளவுக்கு அதிக
மான தண்ணீரை உபயோகிக்கிறார்களோ,
அவ்வளவுக்கு அதிகமான விளைவு கிடைக்கும்
என்னும் தீர்மானம் கொண்டிருக்கிறார்கள்
போலும். ஆனால் இந்த அபிப்பிராயம் சரி
யானதல்ல. போதுமான அளவுக்கு அதிக
மான தண்ணீர் பாய்ச்சினால் மண்ணிலிருந்து
காற்று வெளியே போக்கப்படுகிறது. நிலத்
தில் அதனால் நீர்பிடிப்பு உண்டாகிறது. இத
னால் எண்ணிறந்த நோய்கள் பயிர்களுக்குண்
டாகின்றன. இந்த நோய்கள் முக்கியமாக
காளான் (Fungoid) போன்றவைகள். உதா
ரணமாகச் சென்னை இராஜதானியில் பயிராகும்
கரும்புப்பயிரில் உண்டாகும் நோய்களில்
அனேகம் அதிகமான பாய்ச்சல் தண்ணீரினால்
உண்டாகிறது. நிலத்துக்கு நீர்ப்பாய்ச்சுவது
எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமா
னது அதிலிருந்து நீர் வடியச்செய்தல். நீர்ப்
பாய்ச்சுவதுடன் சரியான நீர்வடிவும் கூடவே
இருக்கவேண்டும். நீர்வடிந்து போகக்கூடாத
பள்ளத்தாக்கு நிலங்களுக்கு அதி ஜாக்கிரதை
யுடன் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

கடைசியாக நீர்பாய்ச்சலால் உண்டாகும்
கெடுதிகளில் மிகவும் முக்கியமானது எதுவெ
னில், நிலங்கள் அதனால் உவர் (களர்) நிலமா
வதுதான். நிலங்களில் அனேக வருஷங்களுக்கு
நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தால் அதில் சில சம
யங்களில் கெடுதியுண்டாக்கும் அனேகவித
உப்பு நிறைந்து அவைகளைப் பயிரிடுவதற்கு
உபயோகமில்லாமல் செய்துவிடுகின்றன. நீர்
வடிவு சரியாய் நடத்திவந்தால் நிலங்கள் கள
ராவதைத் தடுக்கலாம். ஆனால் இதை அச
ட்டை செய்வார்களானால் நிலத்தை மறுபடி
சீர்திருத்துவதற்கு வெகுகாலஞ் செல்லும்.

தோட்டக்கால் சாகுபடியில் கிணற்றிறவை
உடையவர்களும் நன்செய் சாகுபடி செய்
யும் கிருஷிகரும் இவ்விஷயங்களைச் சிந்திக்க
வேண்டும்.

சி. எ. பார்பர்,
கவர்ன்மெண்ட் பாடனிஸ்ட்.

# சிறுவர்க்கான ஸந்தர்சன முறைகள்

## OBSERVATION LESSONS FOR SCHOOL CHILDREN

### 1. குரங்கு—Monkey

*(All Rights Reserved)*

தேவையானவை.—பழக்கின குரங்கு ஒன்று. அதற்கு உண்ண கொஞ்சம் கடலை. தடி ஒன்று.

இந்த வினோதமான மிருகத்தைப் பாருங்கள். இது குரங்கென்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். நாம் பார்க்கிற மற்றெல்லாப் பிராணிகளைவிட இது மனிதனை ஒத்திருக்கிறது. இதன் வாலை நறுக்கிவிட்டால் மனிதனென்றே சொல்லக் கூடியதாயிருக்கும். இந்தக் குரங்கு குட்டியாயிருக்கும்பொழுதே நான் பிடித்து வளர்த்து வருகிறேன். பழக்கி வைத்திருப்பதால் நான் சொல்லியதையெல்லாம் செய்யும். சிலஜாதி பிச்சைக்காரர்களும் இக்குரங்குகளைப் பிடித்துப் பழக்கி அவற்றிற்கு உடுப்புகள் தைத்துப் போட்டு, ஒரு ஆட்டுக் கிடாவின் பேரில் ஏற்றிக்கொண்டு ஊர் ஊராய்ச் சென்று வேடிக்கை செய்யச்சொல்லிப் பிச்சை வாங்கிப் பிழைப்பார்கள். இது அறிவுள்ள பிராணியாயிருந்தபோதிலும் நாம் அஜாக்கிரதையாயிருந்தால் ஏதாவது குறும்புத்தனம் செய்துகொண்டிருக்கும். ஆனால் இதை அழகுக்காக வளர்க்கிறேனே தவிர பூனை, நாய், பசு இவற்றைப் போல் உதவிக்காக வளர்க்கவில்லை. குரங்கால் நமக்குக் கெடுதியேயன்றி யாதொரு நன்மையுமில்லை. குரங்கு மிகுதியாய்க் காட்டில் வசிக்கும். நமது தோட்டங்களிலும் ரோட் பக்கங்களிலும் இதை ஏராளமாகப் பார்க்கலாம். நமது வீடுகளிலும் வரும். தோட்டங்களிலும் வீடுகளிலும் இவை செய்யும் அக்கிரமங்கள் இவ்வளவவ்வளவென்றில்லை. நமது மாமரங்களில் கூட்டம் கூட்டமாய் ஏறி மாங்காயோ, பழமோ ஒன்று பாக்கிவிடாமல் பறித்து, சிலதைத் தின்று, பாக்கி சிலதைக் கடித்து சீ என்று எறிந்து விடும். சில குரங்குகள் தென்னைமரத்திலேறி தேங்காய்களைப் பறித்து முற்றினதானால் கீழே எறிந்து வழுக்கையாயிருந்தால் அதைத் தின்னும். சிலவேளை குரங்குகளெல்லாம் ஒரு புளியந்தோப்பிற்குச் சென்று பாதி குரங்குகள் மரத்திலேறி கிளைகளைக் குலுக்கும்; கீழே இருக்கும் பாதி, விழுந்த புளியம்பழங்களை ஆவலுடன் பொறுக்கி விழுங்கும். சோளம் போட்டிருக்கும் தோட்டங்களில் சென்று ஒரு கொண்டை பாக்கிவிடாமல் கொண்டே போய்விடும். நமது கொல்லைகளில் கறிகாய் போட்டிருந்தால் ஒன்றுவிடாமல் பறித்துத் தின்னும். தின்காவிட்டாலும் ஒரு செடிவிடாமல் வேரோடு பறித்தெறியும். நமது வீடுகளின் மோட்டில் உட்கார்ந்துகொண்டு சிரத்தையுடன் ஓடுகளைப் பிரித்து கீழே தள்ளி உடைப்பதுமுண்டு. நமது அடுப்படிகளிலும் வந்து அகப்படும் உணவுகளை லபக் லபக்கென்று போட்டுக்கொண்டு போய்விடுவதுமுண்டு. குரங்குகளெல்லாம் ஹனுமாருடைய சந்ததிகளென்று எண்ணுவதால் அவை என்ன அக்கிரமங்கள் செய்தபோ



திலும் சில ஜனங்கள் யாதொரு தடையும் செய்கிறதில்லை. அதனால் சில ஊர் குரங்குகள் ஜனங்களண்டை பயமில்லாமல் அக்கிரமங்கள் செய்கின்றன. பட்டப்பகலில் அரிசி மண்டியில் குரங்கு சேனை ஒன்று சென்று அரிசியைத் தின்றுவிட்டுப் போகும். எங்கே சுவாமி கோபித்துக்கொள்ளுவாரோவென்று எண்ணி குரங்குகளை ஓட்டுவதில்லை. குழந்தைகளாவது ஸ்திரீகளாவது ஏதேனும் தின்பண்டங்கள் எடுத்துத் தெருவே செல்லுவாராகில் குரங்கானது திடீரென்று பாய்ந்து தாடையில் 2-அறை அறைந்து தின்பண்டத்தைப் பற்றிக்கொண்டு போய்விடும். குழந்தைகளை உபத்திரவிப்பது தவிர நாம் வளர்க்கும் ஆடு மாடுகளையும் தொந்திரவு செய்யும். ஆடுமாடுகள் மேய்ந்துகொண்டே இருக்கும்பொழுது மேலிருக்கும் மரக்கிளையிலிருந்து தொப்பென்று அவற்றின்மேல் குதித்து அவற்றைப் பயப்படுத்தி அவற்றை நிமண்டிக்கொண்டே சில தூரம் சவாரி செய்யும். சில சமயம் அவற்றின் வாலைக் கடித்துத் துண்டித்துவிடும்.

மரத்திலேறிச் செல்வதற்கும் காய் கனிகளைத் தின்பதற்கும் இதன் தேகம் எவ்விதம் அமைந்திருக்கிற தென்று இப்பொழுது கவனிப்போம்.

உரோமம்.—இதன் தேகத்தைக் கவனியுங்கள். நம்மைப்போல் முகம் உள்ளங்கை உள்ளங்கால் இவ்விடங்களைத் தவிர மற்றெங்கும் உரோமம் இருக்கின்றன. ஆனால் குரங்குக்கு உரோமம் நம்மைவிட நீண்டும் ஜாஸ்தியாயுமிருக்கின்றது. ஏன்? நம்மைப்போல் வீடுகட்டி அதில் வசிக்கின்றனவா? அல்லது தேகத்தை வஸ்திரத்தால் போர்த்திக்கொண்டு வசிக்கின்றனவா? இல்லையே? ஆகையால் குளிரில் சதா வசிப்பதால்தான் ஜாஸ்தி உரோமம் இருக்கின்றன. குரங்கின் தலைமயிரைப் பாருங்கள், நமதுபோல் நீண்டில்லாவிட்டாலும் வாரி விட்டது போலிருக்கின்றது. குரங்குகள் உட்கார்ந்துகொண்டு ஒன்றுக்கொன்று பேன் எடுக்குமல்லவா? மனிதர்களின் பேனை எடுக்கவும் கற்றுக்கொடுப்பதுண்டு. ஆனால் பேனெடுக்கும்பொழுது நாம் தலையை அசைத்தால் பட்டென்று தலையில் குட்டும். எடுத்த பேன்களையும் வாயில்போட்டுக் கொல்லும்.

வால்.—இதன் வாலை கவனியுங்கள். தேகத்தைவிட நீளமாயிருக்கிறது பாருங்கள். இதை கூப்பிடுகிறேன். நாய் பூனையைப்போல் இது வாலை ஆட்டக்காணோம். இந்நீண்டவாலிருப்பதேன்? இதோ நாலுகாலிலும் நடக்கும்பொழுது வாலானது தரையில் தொங்குகிறது. அதை இழுத்துக்கொண்டே போகிறது. குரங்குகள் சிலவேளை பின்கால்களில் நின்றுகொண்டு தலையை நீட்டி தன்னைச்சுற்றி யெம்பி பார்க்கும். அப்பொழுது கீழே விழாமல் சரியாய் நிற்க தன் வாலைத் தரையில் ஊன்றி அண்டக் கொடுக்கும். ஆனால் குரங்கானது உயரத்திலிருக்கும் மரக்கிளைகளில் நடக்கும்பொழுது அதைக் கவனித்தால் தன் வாலை உயரத்தில் தூக்கிக்கொண்டு இருபக்கங்களிலும் அசைத்துக்கொண்டே செல்லும். ஏன்? கயிறு கட்டி அதின்பேரில் நடக்கும் வித்தையாடிகளை நீங்கள் பார்த்திருக்கலாம். நடக்கும்பொழுது கீழே விழாமலிருப்பதற்கு அவர்கள் கையில் ஒரு நீண்ட கம்பையாவது தடியையாவது வைத்துக்கொண்டு, அவர் வலதுபக்கம் சாயும்பொழுது தடியை இடது பக்கம் நீட்டிக்கொண்டு சுளுவாக நடப்பார்கள். அதுபோலவே குரங்குகளும் கீழேவிழாமல் நடப்பதற்கு தங்கள் நீண்ட வாலை வேண்டும் பக்கத்தில் சாய்த்துக்கொண்டே போகிறது. அமெரிக்கா தேசத்திலிருக்கும் குரங்குகளுக்கு வாலானது நாலுமார் நீளமிருக்கும். இந்த வாலை உச்சத்தில் ஒரு கிளையில் பச்சை ஒந்தியைப்போல் சுற்றிக்கொண்டு கை கால்களை விட்டுவிட்டு வெகு தூரம் கீழே தொங்கி ஊஞ்சலாடும். ஆனால்

நமது தேசத்துக் குரங்குகள் அப்படிச் செய்யாது.

சந்தி.—இந்தக் குரங்கு நம்மைப்போல் குந்திட்டுக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறது பாருங்கள். நாம் உட்காருமிடம் கரடு முரடாயிருந்தால் நாம் என்ன செய்கிறோம்? துணியையாவது தலையணையையாவது மெத்தென்று போட்டு அதின்மேல் உட்காருகிறோம். அப்படிச் செய்வது நமக்கு நோவாமலிருப்பதற்குத் தானே. கரடு முரடான மரப்பட்டைகளிலும் தரையிலும் உட்காரும்பொழுது குரங்கிற்கு நோவாமலிருப்பதற்கு அதற்கும் ஒருமெத்தையுண்டு. இதோ இதன் இரண்டு சந்தியைக் கவனியுங்கள். இவ்விடத்தில் சதையானது உரோமமில்லாமல் தடித்துச் சிவந்து மெத்தென்றிருக்கிறது. இதுதான் இதன் மெத்தை உண்டைகள். இவ்விதமான உண்டைகள் பூனைக்கும் நாய்க்கும் கால்களின் அடியிலுண்டல்லவா? ஏனென்றால் இவைகளெல்லாம் தரையில் சஞ்சரிக்கும் பிராணிகள்.

கைகால்கள்.—குரங்கின் கை கால்களைப் பாருங்கள். நமது கை கால்களைப்போல் தோற்றுகின்றன. ஆனால் நமது கைகளைவிட இதன் கைகள் நீண்டிருக்கின்றன. குரங்கு நிற்கும்பொழுது இக்கைகள் முட்டங்காலுக்குக் கீழே தொங்குகின்றன. இதன் கையை விரிக்கிறேன். உள்ளங்கை நமது கைபோல் மிருதுவாயும் ரேகைகளுள்ளதாயும் இருக்கின்றது. பூனை நாய் இவற்றின் கட்டை விரல் வெகு குட்டையாய் பிரயோஜன மற்றிருந்தனவல்லவா? குரங்கின் கையில் இந்தத் தடியைக் கொடுக்கிறேன். அதை நம்மைப்போலவே பிடித்துக்கொள்ளுகிறது பாருங்கள். தடியைச்சுற்றி ஒரு பக்கத்தில் 4-விரல்களையும் எதிர்பக்கத்தில் கட்டை விரலையும் வளைத்துக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் வஸ்துக்களைப் பிடிப்பதற்கு இதன் கை அமைந்ததென்றாயிற்று. இதோ கொஞ்சம் கடலை போடுகிறேன். நம்மைப்போல் பொறுக்குகிறது பாருங்கள். இப்போது இதன் கால் விரல்களைக் கவனியுங்கள். நமது கால்விரல்களைப்போலில்லை. நமது கால்விரல்கள் குட்டையாயும் கட்டைவிரல் பெருத்தும் மற்ற விரல்களோடு ஒட்டினதுபோலுமிருக்கின்றன. கையையும் கை விரல்களையும் வளைக்க முடிவதுபோல் நமது உள்ளங்காலையும் கால் விரல்களையும் வளைக்க நமக்கு முடிகிறதில்லை. காலால் எதையேனும் பிடித்துக்கொள்ள உங்களால் முடியாதல்லவா? குரங்கின் காலை விரிக்கிறேன். அதில் கையைப்போலவே நாலு நீண்ட விரலும், ஒரு கட்டைவிரலும் இருக்கின்றன பாருங்கள். கால் கட்டைவிரல் பாக்கி விரல்களோடு சேராமல் வேறுபட்டிருக்கின்றது. இந்தத் தடியை மறுபடியும் கொடுக்கிறேன், கையால் பிடித்துக் கொள்வதுபோல் காலாலும் பிடித்துக் கொள்ளுகிறது. ஆகையால் கால்களும் பிடித்துக்கொள்வதற்கே அமைந்தன. இப்படியிருப்பதால் குரங்குகளையெல்லாம் நாலுகைப்பிராணிகள் என்று சொல்வதுண்டு.

இதோ மோட்டிலிருந்துதொங்கும் கயிற்றின் மேல் குரங்கு ஏறுவதைக் கவனியுங்கள். தன் கையாலும் காலாலும் கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறுகிறது. செங்குத்தாய் நிற்கும் மரக்கிளைகளை இவ்விதம் தான் பிடித்தேறும். நமக்குக் கால்களால் பிடிக்க முடியாததினால், நாம் தென்னைமரத்திலேறும்பொழுது கால்களால் மரத்தைச் சுற்றிக்கொள்ளுகிறோம், அல்லது காலில் ஒரு பிருமணை மாட்டிக் கொள்ளுகிறோம். பூனை முதலானவை மரம் ஏறும்போது தங்கள் வளைந்த நகங்களால் மரத்தைப் பற்றிக்கொண்டே ஏறுகின்றன. மற்றும் எல்லாப் பிராணிகளின் கால்களும் தரையில் நடமாடுவதற்கே அமைந்தன.

குரங்குகளும் தரையிலும், மரத்திலும், நமது கூரைகளிலும் நடக்கும். ஆனால் அவைகள்

...

மரவாழிகளாதலால் கிளைக்குக் கிளை தாவவும், கிளைகளைக் கைகளால் பிடித்துத் தொங்கிக் கொண்டே ஒருகையை விட்டு இன்னொரு கிளையை கைகாலுகளால் பிடித்துப் போவதற்குமே அதன் கைகாலுகள் அமைந்துள்ளன.

குரங்குகள் சிலவேளை இரண்டு கால்களில் நிற்கும். ஆனால் இரண்டுகாலில் நடக்காது. இது பழக்கின குரங்கானதால் இரண்டு கால்களில் கொஞ்சம் தூரம் நடப்பதைப் பாருங்கள். ஜாஸ்திதூரம் நடக்க முடியவில்லை. ஏன்? இதன் முதுகை கவனியுங்கள். நமது முதுகைப்போல் நேராகவில்லை. வளைந்திருக்கிறது அதனால்தான் இரண்டு கால்களில் நடக்கச் செய்தால் கூனியைப்போல் வருத்தப்பட்டுக்கொண்டு நடக்கிறது. தேகம் முன்னுக்குச் சாய்ந்திருப்பதால் முன்னுக்குத்தள்ளி விழுகிறது. கொஞ்சம் நடந்ததும் கைகளை நிலத்தில் ஊன்றி சிரமமாறுகிறது. விழாமலிருப்பதற்கு இப்பொழுது தன் கைகளைத் தலைக்குப்பின்னும், இப்பொழுது முதுகுக்குப்பின்னும் கோத்துக்கொண்டு செல்லுகிறது. இப்பொழுது கழுத்துக்குப்பின் தடியை குருக்கே வைத்து அதைப் பிடித்துக் கொண்டு நடக்கிறது பாருங்கள்.

குரங்கின் நகங்களைக் கவனியுங்கள். நமது நகங்கள்போலவே தட்டையாயிருக்கின்றன. இந்நகங்களால்தான் அவை சொரிந்துகொள்ளும்; பேனையும் எடுக்கும்.

தலையும், பற்களும்.—குரங்கின் தலையும் காதும் மனிதனதுபோலிருக்கின்றன. ஆனால் இதன் முகம் சற்று நீண்டிருக்கிறது. மூக்கும் சப்பட்டையாயிருக்கிறது. கண்களோ ஆடுமாடு முதலியவற்றின் கண்களைப்போல் தலைக்கு மேல்புறத்தில் பக்கங்களிலில்லாமல் நமது கண்களைப்போலவே நெற்றிக்கடியில் உள்ளே தள்ளி இருக்கின்றன. ஆகையால் எதிரிலிருக்கும் வஸ்துக்களைதான் ஒரு தடவையில் பார்க்கமுடியும்.

குரங்கு தின்பது காய் கனிகளும், இலைகளும் தானியங்களும்தானே. இவ்வுணவுகளை அது திருடி உண்பதால் தன்னை யாராவது வந்து துரத்திவிடுவார்களோ என்று எண்ணி தன் உணவை லபக் லபக்கென்று வாயில் போட்டுக்கொள்ளும். இதோ குரங்கிற்கு ஒரு கை கடலை போடுகிறேன். ஒரு நிமிஷத்தில் அவற்றைப் பொறுக்கி வாயில் போட்டுக் கொண்டுவிட்டது. இரு கடவாயையும் கவனியுங்கள். பந்தைப்போல் இருபக்கமும் உப்பியிருக்கின்றன. ஏனென்றால் இந்தக் குரங்கிற்கு வாயினுள் இரு கடவாயிலும் பைகளுண்டு. அகப்படும் உணவை வெகு சீக்கிரத்தில் இந்தக் களஞ்சியத்தில் நிரப்பி மறைவான இடங்களில் சென்று மெதுவாக அதைச் சதைத்து உண்ணும்.

குரங்கின் உணவுகளும் ஏறக்குறைய நமது உணவாக விருப்பதால் அதன் பற்களும் நமது பற்கள்போலவே இருக்கின்றன. முன்வாய் பற்கள் காய் கனிகளைத் துண்டாய் கடிக்க சிறு உளிகள்போலிருக்கின்றன. கடவாய் பற்களோ உணவைச் சதைக்க, பெருத்த தட்டையான நுனிகளோடு இருக்கின்றன. இதன் கோறப் பற்களைப் பாருங்கள். நாய்க்கிருப்பதுபோல் பெரிதாயிருக்கின்றன. ஆகையால் இது ஒரு ஆணாகும். பெண் குரங்குகளுக்கு இப்பற்கள் சற்றுச் சிறிதாயிருக்கும். இப்பற்களைப் பார்த்துக் குரங்கு மாமிசபக்ஷணி யென்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் மாமிசபக்ஷணிகளுக்குக் கடவாய்ப் பற்கள் கத்திரிகோல் போலவிருக்குமல்லவா? குரங்கிற்கு அவை தட்டையாய்த்தானே இருக்கின்றன. அதனால் குரங்கு மாமிசபக்ஷணியல்ல. அப்படியானால் இக்கோறப்பற்கள் இவ்வளவு நீண்டு பெரிதாயிருப்பானேன்? பூனை, நாய் முதலானவை தங்கள் கோறப் பற்களால் தங்கள் உணவைக் கௌவி கிழிக்கின்றனவல்லவா? அதுபோல குரங்கின்

இப்பற்களும் மாமிசத்தைக் கிழிப்பதற்கே இருக்கின்றன தமது சத்துருக்களோடும், வேறு குரங்குகளோடும் சண்டைசெய்யும்பொழுது இப்பற்களால்தான் ஒன்றுக்கொன்று கடித்துக் கிழித்துக்கொள்ளுகின்றன.

குரங்குகளிலும் அநேக குடும்பங்கள் சேர்ந்து ஒரே இடத்தில் வசிக்கும். ஒரு தோப்பானது அதன் கிராமமாகும். ஒவ்வொரு மரத்திலும் ஒரு குடும்பம் வசிக்கும். அந்த மரம் அவற்றின் சொந்த வீடாகும். நமது உத்திரவில்லாமல் நமது வீடுகளுள் யாராவது வந்தால் அவரை அடித்து எப்படித் தள்ளிவிடுகிறோமோ, அப்படியே ஒரு குடும்பம் இருக்கும் மரத்தில் அன்னிய குரங்கு வந்தால் அதைக் கடித்துத் துரத்திவிடும். சில ஊர்களில் ஒவ்வொரு வீட்டுக் கொல்லைகளிலும், அல்லது கோவில்களில் ஒவ்வொரு கோபுரங்களிலும் ஒவ்வொரு குடும்பம் வசிக்கும். தப்பித் தவறி அன்னியக் குரங்கு வந்துவிட்டால் அவற்றைக் கடித்துத் துரத்திவிடும். குரங்குகளுக்கு நீந்தமுடியாததினால் அவற்றைக் கடலைவிட்டுப்பிடித்து, ஆறுகளைத் தாண்டி வெகு தூரத்துக்கப்பாலிருக்கும் காடுகளிலும் குன்றுகளிலும் கொண்டுபோய் விடுவதுண்டு. ஆனால் ஆறு வற்றினதும் அவை திரும்பி வந்துவிடும்.

குரங்குகளும் தடவைக்கு ஒன்று அல்லது இரண்டு குட்டிகள் போடும். குட்டிகள் பால் உண்டு வளரும். தாமே போக சக்தியுண்டாகும் வரையில் தாயின் வயிற்றைக் கெட்டியாகக் கட்டிக்கொள்ளும். தாய் தான் செல்லுமிடங்களுக்கெல்லாம் குட்டிகளையும் தூக்கிக் கொண்டுபோகும். சில குரங்குகளுக்கு முகமும், சந்தியும் அடிக்கடிச் சிவந்திருக்கும். ஆண்களுக்கே இது அதிகமாய் இருக்கும். சில நாட்டு வைத்தியர்கள் குரங்கின் இரத்தத்தையும் மூளையையும் எடுத்து, க்ஷயம் முதலான ரோகங்களுக்கு அனுகூலமாக மருந்து செய்வதுண்டு,

உலகத்தில் பலஜாதிக் குரங்குகளுண்டு. அவைகள் வெவ்வேறு தேசங்களில் வசிக்கும். குரங்குகளில் மிகவும் பெரிதான குரங்குகள் ஆப்பிரிக்காவிலும், சுமட்ரு தீவுகளிலும் வாழுகின்றன.

குரங்குகளுக்குப் பரிகாசபுத்தி ஜாஸ்தி. மனிதன் செய்யும் காரியங்களைத் தாமும் செய்ய முயலும். பழகின குரங்கானது யஜமானன் க்ஷவரம் செய்துகொண்டதைப் பார்த்துஅவன் போனபிறகு தானும் க்ஷவரம்செய்யமுயலும். அவன் தலைப்பாகை வைத்துப் போவதைப் பார்த்துத் தானும் எதையாவது எடுத்துத் தலையின்பேரில் கவர்த்துக்கொள்ளும்.

வீ. ஆர். துரைசாமிசாஸ்திரி, எம்.ஏ., எல்.டி.

நீர்த்தாழி (Aquarium).—ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒரு நீர்த்தாழி இருப்பது அவசியமாகும். இதைப் பின்வருமாறு செய்யலாம். அகன்ற வாயையுடைய ஒரு கண்ணாடி ஜாடியையாவது அல்லது விளக்குவைக்க உபயோகிக்கும் ஒரு கண்ணாடி குளோப்பையாவது எடுத்து மரத்தினால் செய்த ஒரு சிறு உரலில் வைக்கவேண்டும். அதில் சுத்தமான மணலைச் சிறிதளவு அடியில் பரப்பி அம்மணலில் வேர்பதிய சில நீர்ப்பூண்டுகளை நட்டு அச்சாடியில் முக்கால் அளவு சுத்த ஜலத்தை ஊற்ற வேண்டும். இந்தத் தாழியில் சிறு மீன்களையும், நீர்ச்சிப்பிகளையும், நீர் நத்தைகளையும் நீரில்வாழும் வேறு சில ஜந்துக்களையும் விட்டு, அப்போதைக்கப்போது சிறிது சோற்றுப் பருக்கைகளைப் போட்டு வளர்க்கவேண்டும். ஆனால் நாம் இத்தாழியிலிருக்கும் நீரை அசுத்தமான பொழுதெல்லாம் வாரத்திற்கொருதடவையாவது கொட்டிவிட்டு சுத்த ஜலத்தை முன் அளவிற்கு ஊற்றிவரவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் அப்பிராணிகள் இறந்துபோம். இத்தாழியானது நீர்வாழும் சிறு பிராணிகளைப்பற்றி பள்ளியிலேயே அநுகூலமாகப் பார்த்துப் படிப்பதற்கேற்றவற்றுத ஒரு சிறு குளமாகும்.

...

# சங்கு, கிளிஞ்சில், சிப்பி, பலகறை

## SHELLS AND OYSTERS



அழகான ஒரு வஸ்திரம் போல் இப்பூமியைச் சூழ்ந்து எல்லாவுலகங்களுக்கும் பிராணாதாரமாயிருக்கின்ற கடலின் காட்சியையும் அதில் உற்பத்தியாகின்ற பொருள்களின் அதிசயங்களையும் இன்னவிதமென்று வர்ணித்தெழுத எவராலுமாகாது. பூர்வகாலத்து வித்வான்கள் பலர் அவைகளை வர்ணிக்கப் புகுந்து இன்ன இன்ன விதமென்று சொல்ல முடியாமல் சும்மா மயங்கி நின்றார்கள். கடல் எத்தனை ஜீவராசிகளுக்கு வாசஸ்தானமாயிருக்கின்றது! நாம் கிளிஞ்சில், சங்கு, சோழி முதலான பலவகைப் பொருள்களை வைத்துக்கொண்டு விளையாடுகிறோமே, அவையெல்லாம் என்னவென்று நினைக்கிறீர்கள்! அவை கடலில் உற்பத்தியாகின்ற பலவிதமான பூச்சிகளின் கூண்டுகளேயொழிய வேறொன்றுமல்ல. கடற்கரையோரமாய்ச் சிறிது நேரம் போய் நின்று பார்த்தால் இப்புதுமையை நாம் நன்றாய்க் காணலாம். சிப்பி, சங்கு, நத்தை முதலான பூச்சிகள் பல உயிருள்ளவைகளாகவே அலையோடு கரையில் அடித்துக் கொண்டு வரும்; மறுபடி அலையோடுகூடவே திரும்பிப் போய்விடும். அப்படிப்பட்ட பூச்சிகள் அநேகம் நாளளவிலே அழிந்துபோக அவற்றின் மேலோடுகளாகிய சிப்பி முதலியவை மாத்திரம் தனியே வெகுவாய்க் கரையோரங்களில் அலைகளால் கொண்டுவந்து ஒதுக்கப்படுவதுண்டு. அவைகளைப் பிள்ளைகளும் பெரியோர்களும் பொறுக்கிக்கொண்டு போய்த் தாம் விளையாடவும் விற்றுப் பணம்

சம்பாதிக்கவும் உபயோகப்படுத்திக் கொள்வார்கள். மகாராஜாக்களும், பிரபுக்களும், தனவான்களும், முக்தாஹாரங்களாகவும், வேறுபல சிறந்த ஆபரணங்களாகவும் செய்து தரித்துக் கொள்ளுகின்ற விலை யுயர்ந்தவையான முத்துக்கள் இத்தன்மையான ஒருவகைக் கடற்பூச்சியின் வயிற்றிலேதான் உண்டாகின்றன.

ஆ! இந்தப் பூச்சிக்கூடுகளும் பூச்சியோடுகளும் எவ்வளவு அற்புதமாயிருக்கின்றன பாருங்கள்! இரத்தினமணிகள் கண்டெடுப்பதற்காகப் பூமியைத் தோண்டுகிறவர்களும், விலையுயர்ந்த பொருள்களைத் தேடியெடுப்பதற்காக முத்துக் குளிப்பவர்களும், சிற்பசித்திரங்களின் விநோதத்தைப் பார்க்கத் தலையை நிமிர்த்துகிறவர்களும், கடற்கரைக்கு வந்தால் அங்குள்ள அற்புதமான பொருள்களைக் கையில் எடுத்துப்பார்க்கப்பிரயத்தனப்படாமல் ஒருபோதும் சும்மா நிற்கமாட்டார்கள். கடற்கரையில் அலையினால் ஒதுக்கப்பட்டிருக்கின்ற கிளிஞ்சில் ஓடு முதலியவெல்லாம் என்னவென்று நினைக்கிறீர்கள்! அத்தனையும் இவ்வுலகங்களைப்படைத்த பெரிய சிற்பியாகிய கடவுளின் கைவேலைப்பாடல்லவா? மற்றும் பலபொருள்கள் இருக்கட்டும்; சாதாரணமான கிளிஞ்சிலோட்டைக் கையிலெடுத்துப் பாருங்கள்; அதன் உருவம் எத்தனை அற்புதமாய் அமைந்திருக்கின்றது! இந்தப் பூச்சி யோடுகளில் சில, மகாராஜாக்கள் மிகவும் அற்புதமானவை யென்று அருமையாகக் காப்பாற்றி வைத்துக்கொள்ளத் தக்கவையாயிருக்கின்றன. சோழி, சங்கு, பலகறை முதலானவைகளால் இத்தேசத்திலும் தேசாந்தரங்களிலும் எளியவர்கள் பலர் பலவிதமான ஆபரணங்கள் செய்து அணிந்து கொள்ளுகிறார்கள். மாடு, குதிரை முதலியவைகளுக்கும் அவற்றால் அலங்காரம் செய்கிறார்கள். மிகவும் விசித்திரமாயிருக்கின்ற சிலவற்றை விநோதப் பொருட்காட்சிச்சாலையில் வைத்து எல்லோரும் கண்டு வியக்கும்படி செய்கிறார்கள். இத்தேசத்தில் பூர்வகாலத்திலே பலகறையைப் பண்டமாற்றுக்கு உபயோகமான ஒருவகை சிறு நாணயமாய் உபயோகப்படுத்தினதாகவும் தெரியவருகிறது. இக்காலத்திலும் சில தேசங்களில் அவை இன்னுமப்படியே வழங்கிவருகின்றன. இந்த விசித்திரமான பொருள்களெல்லாம் தென்கடலிலுள்ள தீவுகளில் மிகுதியாய் அகப்படுகின்றன. கடலில் அந்தந்தப்பாகத்திலுள்ள சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி அங்கங்கே வசிக்கின்ற பூச்சிகளுக்கு உறைவிடமாய் கடவுள் இந்தக் கூடுகளை அமைத்திருக்கிறார்போலும். முக்கியமாய் அழகுக்காகவே யல்லாமல், மிகவும் அருமையானவை யென்று சொல்லி, இவற்றில் சில, மிக்க விலையேறப்பெற்றவையாயிருக்கின்றன. ஆயிரம் பதினாயிரம் பொன் கொடுத்தும் அவற்றின்மேல் ஆசையுள்ளவர்கள் அவைகளை வாங்கிக் கொள்ளுகிறார்கள். இதைப் பற்றிய சிறு கதையொன்றுண்டு; அதென்னவெனில்:—பாரிஸ் நகரத்தில் முன்னொரு காலத்திலே ஸ்தாவர சாஸ்திர பண்டிதரான ஒருவர் இக்கடற்பொருள்களில் மிகவும் அற்புதமான ஒன்றைக் கண்டார். அவர் அத்தனையாகப் பணக்காரரல்லாவிடினும் அதை எப்படியாயினும் வாங்கிக் கொள்ள வேண்டுமென்கிற ஆசை அவருக்கு மிக்க அதிகமாய் இருந்தது. அதன் விலையோ அதற்குடையவள் மிகவும் அதிகமாய்ச் சொன்னாள். ஆனாலும் அதை எப்படியாவது வாங்கிக் கொள்ள வேண்டுமென்று அவர் தன் வீட்டிலுள்ள அருமையான தட்டு முட்டுகளையெல்லாம் விற்றுத் தன் பெண்சாதி பிள்ளைகளுக்கும் தெரியாமல் அதை வாங்கிக்கொண்டார்



...

பிறகு பெண்சாதி வீட்டில் போய்ப் பார்த்து அங்கிருந்த தட்டு தாம்பாளம் முதலியவை யொன்றும் காணாதிருக்கக் கண்டு மிகுந்த விசனமடைந்து, அச்செய்தியைத் தன் புருஷனிடம் சொல்லப் போனாள். அப்போது தான் அவர் தாம் விரும்பிய பொருளை வாங்கிக் கொண்டுவந்து உட்கார்ந்தார். பெண்சாதி அழுதுகொண்டு வந்ததைப் பார்த்து அவர் தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியில் அப்படியே சார்ந்து கொண்டார். அவர் வாங்கி வந்த புதுமையான பொருள் அவருடைய பையிலிருந்ததினால் அது திடையின் கீழே அகப்பட்டுக் கொண்டு அப்படியே மள மள வென்று நெறிந்துபோயிற்று. அதைக் கண்டு அவர் நாம் ஆசைப்பட்ட பொருள் அநியாயமாய்ப் போயிற்றே யென்று தாமும் புலம்ப ஆரம்பித்தார். கடைசியில் அவரைச் சமாதானப்படுத்துவதே அவர் மனையாளுக்குப் பெரிய வருத்தமாயிற்று என்பதாம். இப்படியாகத் தமக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் விற்றாயினும் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று ஆசைகொள்ளத்தக்க அத்தனை அற்புதமான பொருள்கள் கடலில் அநேக மிருக்கின்றன.

இப்படியே கடலில் வேரில்லாமலே முளைத்து வளருகின்ற பூண்டு வகைகள் அநேகமுண்டு. அவை மனிதர்களுக்குப் பலவிதமாயுபயோகப்படுகின்றன. பவழக் கொடிகளும் இப்படிக் கடலில் உற்பத்தியாகிற பூண்டு வகைகளுள் ஒன்றேயாம்.

ம—ணி.

ஒரு குளக்கரையில் இரண்டு செம்படவர்கள் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் யார் தான் அதிகமாக மீன்கள் பிடிக்கிறார்களென்று பந்தயம் போட்டுக்கொள்ளப்பட்டது. இருவரும் வெகு கவனத்துடன் குளத்தின் கரையோரத்தில் நின்றுகொண்டு மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவன் கால் தவறி ஜலத்தில் விழுந்துவிட்டான். உடனே மற்றொருவன் பிரமாதமாக கூச்சலிட்டுக்கொண்டு இந்தப் பந்தயத்துக்கு நான் ஒத்துக்கொள்ளவே யில்லை. தூண்டிலிட்டு மீன் பிடிக்கிறதாகப் பேச்சே யொழிய நேரே ஜலத்திற்குள்போய் கையிட்டு பிடித்து வருவதாக பேச்சே யில்லை யென்றான்.

# அடங்காப்பிடாரி அடங்கியவிதம்

## TAMING OF THE SHREW

(380-ம் பக்கத் தொடர்ச்சி).

இவ்வாறு பெட்ரூகியோ கல்யாணத்தை மிகுந்த தடபடலுடன் தீர்மானம் செய்துகொண்டு போய்விட்டவுடன் அங்கிருந்த க்ரீமியோவும், டிரேனியோவும் தமக்குப் பையான்காவிடம் உள்ள காதலை வெளியிட்டனர். பாப்டிஸ்டா இருவருள் யார் அதிக ஸ்திரீதனம் கொடுக்கமுடியுமோ அவர்களுக்கே பையான்காவை கொடுப்பதாகச் சொன்னான். முதலில் க்ரீமியோ தன் ஸொத்துக்களின் விவரத்தை எடுத்துக் கூறி தன்னால் கொடுக்கக்கூடிய ஸ்திரீதனம் இவ்வளவு என்று கூறினான். லூஸென்ஷியோ வேஷம் கொண்ட டிரேனியோ முதலில் தன் யஜமானன் தகப்பனாகிய வின்ஸென்ஷியோ ஸொத்து முதலியவைகளை எடுத்துக்கூறித் தன்னால் க்ரீமியோவைவிட அதிகதனம் கொடுக்கமுடியும் என்று காட்டினான். இதைக் கேட்டதும் "வின்ஸென்ஷியோவை சீக்கிரத்தில் இங்கு வரவழைத்து உன் சொற்படி இசையும்படி செய்தால் உனக்கு பையான்காவைக் கொடுத்து விடுகிறேன். அடுத்த ஞாயிற்றக்கிழமை காதரீன் கல்யாணம். அதற்கு அடுத்த ஞாயிற்றக்கிழமை பையான்காவுக்கும் கல்யாணம் செய்துவிட வேண்டியதுதான். அதற்குள் உன் தகப்பனாரை வரவழைத்துக் காரியத்தை முடித்துவிடு. இல்லாவிடில் ஸ்வதந்திரமுடைய க்ரீமியோவுக்கே நான் பையான்காவைக் கொடுக்கவேண்டி வரும்" என்று பாப்டிஸ்டா தீர்மானம் செய்தான். தான் லூஸென்ஷியோ வேஷம் தரித்ததுபோல வேறொருவனை வின்ஸென்ஷியோ வேஷம் தரிக்கும்படி செய்து எப்படியாவது தன் யஜமானனை ஸுகப்படுத்தி விடுவது என்று டிரேனியோவும் தீர்மானித்துவிட்டான்.

இந்த விஷயங்கள் இவ்வாறிருக்க, கேம்பியோ என்ற பெயர் பூண்ட உபாத்தியாயராகிய லூஸென்ஷியோவும், லிகியோ என்ற பெயர் பூண்டு, காதரீன் வீணையால் அடிபட்ட பாட்டு உபாத்தியாயராகிய ஹார்டென்ஷியோவும் பையான்காவுக்குக் கல்வி கற்பிக்க முயன்று அதன் இடையில் தமது காதலை வெளியிட்டு வந்தனர். முதலில் கேம்பியோ ஓர் பாட்டிற்குப் பொருள் கூறுங்கால் பக்கத்தில்

ஒருவரும் இல்லாத ஸமயம் பார்த்து, அந்தப் பாட்டைப் பதம் பதமாகப் பிரித்து ஒழுங்காக "நான் ஹூஸென்ஷியோ, பைஸாநகரத்து வின்ஸென்ஷியோபிரபுவின் பிள்ளை. உன்மேல் உண்மைக் காதல் கொண்டிருக்கிறேன். அதைப் பூர்த்தி செய்து கொள்ளத்தான் இவ்வேஷம் கொண்டு வந்தேன். இது முடியும் வரையில் என் நம்பிக்கையான வேலைக்காரனாகிய டிரேனியோவே என் வேஷம் கொண்டு வருகிறான்" என்று பொருள் கூறுவதுபோலத் தன் காதலை வெளியிட்டான். அதற்குப் பையான்கா மறுபடியும் பொருள் கூறுகையில், முறையே "உன்னை எனக்குத் தெரியாது, நம்பிக்கை வரவில்லை, நமது பேச்சை யாராவது கேட்டு விடுவார்கள், ஜாக்கிரதை, வீண் எண்ணங்கள் எண்ணாதே, ஆயினும் தயங்காதே" என்று பொருள்கூறி பாடம் ஒப்பிப்பதுபோல தனது காதலை வெளியிட்டு விட்டாள். இதற்குள் லிகியோ வீணையைக்கொண்டு பாட்டுக் கற்பிக்க வர கேம்பியோ போய்விட்டான். லிகியோவும் தன் காதலை வெளியிடத்தக்க பாட்டுக்கட்டிப் பாட பையான்கா தனக்கு அது பிடிக்கவில்லை என்று அவனை நிராகரித்துவிட்டாள். இவ்வாறு ஹூஸென்ஷியோ மனம் களித்துத் திருப்தியடைந்தான்.

காதரீன் கல்யாண தினமாகிய ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டது. பாப்டிஸ்டா தனக்கு வேண்டியவர்களை எல்லாம் அழைத்திருந்தான். அவர்கள் எல்லோரும் வந்து கூடிவிட்டனர். எல்லாம் தயாராகிவிட்டது. மாப்பிள்ளையை மாத்திரம் காணோம்! வெகு நாழிகையாயும் மாப்பிள்ளை வராதது கண்டு எல்லோரும் துக்கித்தனர். பாப்டிஸ்டா மிக வருந்தினான். அடங்காப்பிடாரிகூட அழத்தொடங்கிவிட்டாள். இப்படி இருக்கையில் திடீரென்று கோமாளி உடையுடன் பெட்ரூகியோ ஓர் கோவேறு கழுதையின்மேல் ஏறிக்கொண்டு வெகு அவஸரமாக வந்துவிட்டான். கல்யாண ஸாமான்கள் ஒன்றும் அவனிடம் இல்லை. ஒரு வேலைக்காரன்தான் கூட இருந்தான். பாப்டிஸ்டா முதலியோர் அவனை உடைமாறிக் கல்யாணம் செய்துகொள்ளும்படி வேண்டினர். அதற்கு அவன் "என் அருமைக் காதலி என்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாளோ, அல்லது என் உடையைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாளா? இந்த உடையே போதும். வாருங்கள் கல்யாணத்தை முடித்துவிடுவோம்" என்று மணவறையில் சென்று உட்கார்ந்து சடங்குகளைத் தொடங்கிவிட்டான். சொல்லவேண்டிய வார்த்தைகளை இடிபோல கேட்கும்படி கூக்குரலிட்டுச் சொன்னான். புரோஹிதரைப்படுத்தாத பாடு படுத்திவிட்டான். இம்மாதிரி கோமளித்தனமாகவே கல்யாணம் முடிந்தது. உடனே தன் ஊருக்குப் போகவேண்டும் என்று அவன் புறப்பட்டுவிட்டான். ஒரு நாளிருந்து போகும்படி எல்லோரும் வேண்டினர். "ஒருவேளைகூட இருப்பதில்லை! என் அவஸரம் எனக்கல்லவோ தெரியும்!" என்று பெட்ரூகியோ சொல்லக் காதரீன் தான் வருவதில்லை என்று முரண்டினாள். "இதென்ன விபரீதம்! என் வீடு நீயில்லாமல் பாழாகிவிடுமே! உன்னை விட்டுவிட்டு நான் அங்கு போவது என்ன பிரயோசனம்! நீ வரத்தான் வேண்டும்" என்று கூறித் தன் வேலைக்காரனை நோக்கி, "கத்தியை உருவிக்கொள். யாராவது நமது சொத்தை எடுத்துப் போகுங்கால் தடுத்தால் அவர்களை வெட்டிச்சாய்ப்போம்" என கூக்குரலிட்டுவிட்டு உருவின கத்தியோடு தானும் காதரீன் அருகில்சென்று அவளை இழுத்துவந்து குதிரைமேல் ஏற்றிக்கொண்டு, தானும் அதன்மேலேயே ஏறிக்கொண்டு பெட்ரூகியோ தன் ஊருக்குப் பிரயாணம் புறப்பட்டுவிட்டான். உடனே பையான்கா, டிரேனியோ இவர்களைப் பெண்மாப்பிள்ளை ஸ்தானங்களில் உட்கார வைத்து அன்றைய விருந்து நடத்தப்பட்டது.

அடங்காப் பிடாரியை அடக்கவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு கிளம்பிய பெட்ரூகியோ சும்மா காதரீனை விட்டுவிடுவானா! போகும் வழியில் குதிரை சிரமம் பொறுக்கமாட்டாது சேற்று நிலத்தில் விழும்படியாகவும் அதன் அடியில் காதரீன் அகப்பட்டுச் சேற்றில் புரளும்படியாகவும் செய்தான். குதிரை விழுந்ததும் வாயில் வந்தபடி எல்லாம் திட்டிக்கொண்டு வேலைக்காரனை அவன் அடிக்க, காதரீன் வந்து சண்டை விலக்கும்படி நேர்ந்தது. பெட்ரூகியோ காதரீன் பேரில் இருந்த அன்பால் வேலைக்காரனைக் கோபிப்பதுபோல்நடிக்க, காதரீன் "குதிரை திடீரென்று விழுந்ததற்கு வேலைக்காரன் என்ன செய்வான்" என்று நயந்து கூறி கணவன் கோபத்தைத் தணித்தாள். இதுபோலவே 1000-காதரீன் சேர்ந்தால் எவ்வளவு அடங்காப்பிடாரி யாவாளோ அவ்வளவு அடங்காப் பிடாரித்தனம் தன்னிடத்திலிருப்பதை பெட்ரூகியோ, காதல் என்ற சாக்கை வைத்துக்கொண்டு, வெளிக்காட்டி வந்தான். தன்

. . . . .

வீடு வந்ததும் வேலைக்காரர்கள் தயாராக இல்லாதது கண்டு அவர்களைக் கோபித்துக் கொண்டு எரிந்து விழுந்து அடித்து வீட்டைக் கலக்கினன். ஏதோ சாக்கை வைத்துக் கொண்டு வீட்டில் இருக்கும் வேலைக்காரர்களை எல்லாம் அடிக்கத் தொடங்கி விட்டான். இப்படி யிருக்கையில் ஓர் வேலைக்காரன் உணவு கொண்டுவந்தான். பெட்ருகியோவும் காதரீனும் புறப்பட்டது முதல் சாப்பிடவே இல்லை. காதரீன் பசியுடன் இருந்ததால் மிகுந்த ஆவலுடன் காத்திருந்தாள். வந்த உணவில் ஏதோ குற்றங் கூறி "என் அருமைக்காதலிக்கு இம்மாதிரி உணவையா கொண்டுவருவது, திருட்டுப்பயலே! என்னை அவமானப் படுத்தவா இம்மாதிரி செய்தாய்" என்று சீறி அவன்மேல் உணவை வாரி யடித்துவிட்டு, அன்று உணவின்றிப் படுக்கை அறையுள் புகுந்தான். அங்கு காதரீனைத் தூங்கவிடவில்லை. கட்டிலிலிருந்த படுக்கைகளில் ஏதோ குற்றங் கூறி அவைகளைக் கோபத்துடன் வாரித் தரையில் எறிந்து காதரீனைப் படுக்கவொட்டாது இரவு முழுவதும் உட்காரும்படி செய்து, அவள் தூங்கி ஆடி வழியும்பொழுது யாரோ ஓர்வேலைக்காரனைக் கோபித்துக் கொள்வதுபோல சப்தம் போட்டு அவளைத் திடுக்கிட்டு எழும்படி செய்தான். இவ்வாறு அன்றிரவு முழுவதும் காதரீனுக்குத் தூக்கம் பிடிக்காதிருக்கும்படி செய்துவிட்டான்.

காதரீன் நிலை இப்படி இருக்க பாடுவாவில் லூஸென்ஷியோவுக்கும் பையான்காவுக்கும் ஏற்பட்ட காதல் வரவர விருத்தியடைந்துகொண்டு வந்தது. இது பாப்டிஸ்டாவுக்குத் தெரியாது. பாட்டு உபாத்தியாயராகிய லிகியோவுக்கு இது தெரியவர அவன் அப்பொழுது அங்கிருந்த லூஸென்ஷியோ வேஷம் கொண்ட டிரேனியோவிடம் வந்து பையான்கா எல்லோரையும் மோசம் செய்துவிட்டு உபாத்தியாயர் கேம்பியோவைக் காதலித்துவிட்டாள் என்று தெரிவித்தான். அந்த ஸமயத்தில் அங்கு கேம்பியோவும் பையான்காவும் உல்லாஸமாகப் பேசிக்கொண்டுவர இவர்கள் மறைந்து அவர்கள் காதல் விளையாட்டுகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர். இவர்கள் போனதும் டிரேனியோவும் லிகியோவும் வெளிவந்தனர்.

(தொடரும்.)

# இந்துலேகை

(352-ம் பக்கத் தொடர்ச்சி.)

## 5-ம் அத்தியாயம்

### பஞ்சுமேனவனுடைய துரோதம்

சீனுபட்டரின் கதாப்பிரசங்கத்தின் பின்னும், தன் அனுமதியின்றியே சீனன் சென்னைக்குச் சென்ற பின்னும் பஞ்சுமேனவனுக்கு அதிகமான கோபாவேசங் கிளம்பிவிட்டது. வழியில் எதிர்ப்பட்டவர்கள் யாவராயிருந்தாலும் சிறிதும்வித்தியாசமில்லாமலே எல்லோரையும் வாயில் வந்தபடி யெல்லாம் தாறுமாறாய்த் திட்டினன். சிலரை நையப் புடைக்கவும் புடைத்தான். சாத்தர்மேனவனை யழைத்து வர ஒரு ஆளையனுப்பினன். மஹா வணக்கமும் பொறுமையும் உள்ள சாத்தர்மேனவன் என்பவன் மெள்ள சத்தஞ்செய்யாமல் அடிமேலடி யெடுத்துவைத்து வந்து, அரசனுக்கெதிரில் நிற்பதைப்போல் மஹா விநயபயபக்தியுடனே, வாயைக் கையால் மூடிக்கொண்டு நின்றான். இவனது அடக்கத்தையும் மரியாதையையுங்கூடச் சிறிதுங் கவனியாமல், பஞ்சுமேனவன், "அடே நாயே, முழுமகனே, மூடா, மட்டி, போக்கிரி என்ன? உன் உடம்பு உனக்குத் தெரியவில்லைபோலிருக்கிறது. நீ சீனனைப் பட்டணம் அனுப்பினயா? சொல்லடா. ஏன் இடித்த புளிபோல் நிற்கிறாய்? சுவரே!" என்று தூஷித்தான். "சீனனை மாதவன் பட்டணமழைத்துச் சென்றான்" என்று பதில் மொழி தந்தான் சாத்தர்மேனவன்.

"உன்னுடைய சம்மதமில்லாமலா?" எனக் கேட்டான் பஞ்சு.

"எனக்குச் சம்மதம் உண்டா, இல்லையா என்பதைப் பற்றித் தனியாய்க் கேட்கவில்லை" என்றான் சாத்தர்மேனவன்.

"அடே நீசா, சண்டாளா, சொல்லடா. உன்னுடைய சம்மதத்தின்பேரில் அல்லவா?" என்று கூவினன் பஞ்சு.

"நான் ஒன்றுந் தடுக்கவில்லை" என்றான் சாத்தர் மேனவன்.

"அப்படியா? ஏனடா கைம்பெண்டாட்டி, நீ அதைத் தடுக்கவில்லை? நான் என் அனுமதியைத் தந்திலேனென்பது உனக்குத் தெரியாதா? அப்படியிருக்க, நீ என் அவனது பிரயாணத்தை நிறுத்த முயலவில்லை?" எனக் கேட்டான் பஞ்சு.

"எனக்குத் தங்கள் அபிப்பிராயம் யாதுந் தெரியாது. தகப்பனார் தங்களைக் கேட்டதாகவும் தாங்கள் அதற்கு இசைந்ததாகவுங் கேள்விப்பட்டேன்" என்றான் சாத்தர்மேனவன்.

"யார் தகப்பனடா? அடே பயலே! யாரடா? அந்தச் சண்டாளனா? அந்த ஈனஜாதிப் பயல் வீட்டில் கால்வைத்த நாள் முதற்கொண்டு, வீட்டில் ஒன்றாவது உருப்படவில்லை. எல்லாவற்றிற்குஞ் சனியன் பிடித்தது. ஒன்றாவது கைகூடினபாடில்லை. அந்தச் சனியன் உன்னிடம் என்ன சொல்லிற்று?" எனக் கூறினான் பஞ்சு.

"கோபாலன் சொன்னான் எனக்குத் தகப்பனார் தங்கள் அனுமதியைப் பெற்றுவிட்டதாக" என்றான் சாத்தர்மேனவன்.

"அவனைக் கூப்பிடு இங்கே" என்றான் பஞ்சு. சற்றுநேரத்திற்கெல்லாம், ஒன்றிலும் நிலைபெறாத சித்தமுடைய, விவேகமற்ற கோபாலன் என்பவன் எஜமானரிடம் வந்தான்.

"அடே துஷ்டா, அந்தச் சண்டாளன், உன் தகப்பன், என்னடா சொன்னான் உன்னிடம்? சீனனைச் சென்னைக்கனுப்ப நான் சம்மதப்பட்டேனென்றடா சொன்னான்?" எனக் கேட்டான் பஞ்சு.

"என் தகப்பனார் சண்டாளனுமில்லை, பறையனுமில்லை. அவர் சுத்தப் பிராமணர்" என்றான் கோபாலன்.

"என்ன சொன்னாய் நீ மடையா?" என்று கூவிக்கொண்டே எழுந்து கோபாலனை இரண்டு மூன்று அடி பலமாய் அடித்தான்.

"காரணமேதுமின்றி என்னைத் தாங்கள் அடிக்க வேண்டாம்" என்றான் கோபாலன்.

"உன்னால் என்ன செய்ய முடியும்? உன்னை நான் சற்று முன்தான் வலிவாய் இழுத்து அடிக்கவில்லையா? ஏன்? அடிகள் உன்மீது சிறிதுமுன் படவில்லையா? நீ என்ன செய்துவிட்டாய்?" என்றான் பஞ்சு.

இந்தச் சந்தர்ப்பத்தில், சங்கரமேனவன் வேகமாய் ஓடிவந்து தன் மாமனுக்கெதிரில் நின்றுகொண்டு கோபாலனைப் பிடித்து அந்தண்டை தள்ளிவிட்டான்.

"ஆ! சங்கரா, வா. இக்காலத்தில் ஒன்றாயினுஞ் சரியாய் நடப்பதில்லை. எல்லாம் தப்பு வழியிலேயே நடைபெறுகின்றன. இவையெல்லாம் கலிகாலத்தின் கொடுமைகள்போலும். மாதவன் என்னை எவ்வளவு அவதூறாய்ப் பேசினானென்பது உனக்குத் தெரியாதா? அவனுக்கு இங்கிலீஷ் படிப்பு கற்றுக்கொடுத்த நாள் முதற்கொண்டு எனக்குச் சனியன் பிடித்தது. என் காரியத்திற்கு நான் இப்போது போதுமானபடி வருந்துகின்றேன். இன்னொன்று, ஒன்றுந் தெரியாத அந்தக் கோபாலனைப் பார்த்தாயா? அவன் கொழுப்பு என்ன கொழுப்பு! என்னுடன் எதிருக்கெதிர் வாயாடுகின்றான். அந்தக் கைம்பெண்டாட்டியின் பற்களையெல்லாம் ஒன்றுவிடாமல் உதுத்துவிடலாமென எனக்கு அகங்காரம் உண்டாகிறது" என்றிரைந்தான் பஞ்சு.

மாமா, இப்போது இந்தப்பயல்களுடன் பேசவேண்டாம். கூப்பிடாமல் சும்மாயிரு. இந்தக் காலத்தில் தான் பயம், பக்தி, மரியாதைமட்டு ஒன்றுமில்லாமற்போயிற்றே. இந்தப் போக்கிரிகளுடன் நான் ஒருபோதும்பேசுவதில்லை" என்றான் சங்கரமேனவன்.

"அது யாருடைய தப்பு? உன்னுடைய தப்புதான். நீதான் அவர்களைத் தலைமேலேற்றி விட்டு விட்டாய். நீ கொஞ்சம் ஜாக்கிரதையாயிருந்திருந்தால் இவ்வளவு தூரத்திற்கு வருமா? ஆனால்-போனது போகட்டும்-இனி செருத்துருத்தி நிலங்களுக்கும் சாத்தருக்கும் பாத்தியதை யொன்றுமில்லாமல் செய்துபோடுகின்றேன். இந்தத் தக்ஷணமே அந்நிலங்களை ஒப்பித்துவிட்டு, நாளது தேதிவரையில் வரவு செலவு கணக்குகளைக் காண்பிக்கும்படிச் செய்கிறேன். என்ன? நான் சொன்னது தெரிந்ததா? போ. பார் வேலையை இந்த க்ஷணமே" என்றான் பஞ்சு.

"மாமா, அப்படியே. இதோ போய்த் தங்கள் கட்டளையின்படி செய்கின்றேன்" என்றான் சாத்தர்மேனவன்.

"நீ எக்கேடாவது கெட்டுப்போ" என்று சீறினான் பஞ்சுமேனவன்: "மாமா என்ற மரியாதைகூட என்னிடத்தில் நீ வைத்திருக்கிறாயா? அந்த ஜாதிகெட்டவனுடைய மகனாயிருப்பதனாலல்லவா உனக்கு இவ்வளவு கிருக்கு உண்டாயிருக்கிறது? உனக்கு எது வேண்டுமானாலும் எனக்கு இஷ்டமானால் தான் கிடைக்கும்; எனக்கிஷ்ட மில்லாவிட்டால் நீ தலைகீழாக நின்றாலும் கிடைக்காது. அந்த டம்பாச்சாரி கோவிந்த பணிக்கர் தனக்கிஷ்டமானதைத் தன் பிள்ளை மாதவனுக்குக் கொடுப்பான். அவனுக்குக் குடும்பத்தை ரட்சிக்க வேண்டுமென்ற பொறுப்பில்லை. அவன் என்னதான் செய்யமாட்டான். அந்த மாதவனும், ஒழுங்குமாப்பிள்ளையாகவே இருக்கிறான். . ...

உன்பாடு என்னமோ திண்டாட்டந்தானே. அந்த ஜாதிகெட்ட பாப்பானை உன் தகப்பனுக்குப் பிண்டம் பெருங்காயமாயிருக்கிறது. பாப்பார் தின்றுவிட்டெறியும் எச்சிற்களையாவது கிடைக்காதாவென்று அலைந்து திரிகிறான். உன் பவிஷு இப்படியிருக்க, உனக்குக் கிருக்கு என்ன வேண்டியிருக்கு? உனக்கு வாய் அடைத்துப்போச்சா? பேசேண்டா, தடிப்பயலே."

"மாமா, தங்களைவிட எனக்கு ஒத்தாசை பண்றவாள் யார் இருக்காள்?" என்றான் சாத்தர்.

"அப்படியானால், புலியைப்பார்த்து பூனை சூடிட்டுக்கொண்டது போல, அந்த மாதவனைப் பார்த்து நீயும் அதிகப் பிரசங்கித்தனமாய் ஏன் பேசினாய்? உனக்கு வந்த கேடுகாலமென்ன? சின்னானுக்கு யாரடா பணங்கொடுத்தது?" என்றான் பஞ்சுமேனவன்.

"தன் தகப்பனார் கொடுத்ததாகக் கோபாலன் சொன்னான்" என்றான் சாத்தர்.

பஞ்சுமேனவன் கோபாலன் பக்கமாய்த் திரும்பி, "உன் தகப்பனாரடா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று பதில்சொன்னான் கோபாலன்.

"பேஷ்! உன் தகப்பனா! அட ஜாதிகெட்ட பரம சண்டாளப் பயலே! அடே, அந்தப் பிச்சைக்காரப் பயலா? அவன் பரிசாரகம் செய்து வயிறு வளர்க்கும் விதவையல்லவோ? அவனுக்குப் பணம் ஏது?" என்று ஏளனம் செய்தான் பஞ்சுமேனவன்.

"என் தகப்பனார் ஒன்றும் ஜாதிகெட்டவரல்ல" என்றான் கோபாலன். அதைக்கேட்டுப் பஞ்சுமேனவன் அவன்மேல் சீறி எழுந்து "அடே, உன் பாஜா ஒன்றும் இங்கே பலிக்காது, கொஞ்சம் நிறுத்து" என்று கர்ஜிக்க, சங்கரமேனவன் பரிந்து வந்து அந்தக் கிழவனுடைய குரோதத்தைத் தணிக்க யத்தனித்ததில் அவன் பட்ட சிரமத்துக்காக அவனுக்கு இரண்டு மூன்று குத்து விழுந்தது. "அவனுக்கு நான் கொடுத்திருக்கும் பூமியையெல்லாம் பிடுங்கிவிடு. இனி பைசாகூட அவன் கண்ணில் காட்டாதே" என்று மீண்டும் உறுமினான் பஞ்சுமேனவன்.

கோபாலன்.—நான் அந்த நிலங்களை யெல்லாம் ஒரு வருஷத்துக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டேன். வருஷம் முடிவுவரையில் குத்தகைதாரர்கள் அவைகளை விடமாட்டார்கள்.

பஞ்சுமேனவன்.—விடமாட்டையா?

கோபாலன்.—குத்தகைதாரர்கள் விடமாட்டார்களென்கிறேன்.

பஞ்சு.—அடே நீ அந்த நிலங்களை விடமாட்டாயா? விடமாட்டையா சொல்றா? உன்னை அந்த நிலங்களை விடும்படி நான் செய்கிறேனா இல்லையா பார், அவ்வளவுதான்.

கோபாலன்.—ஏதோ செய்யுங்கள் பார்ப்போம். அதைப்பார்க்க வேண்டுமென்று தான் எனக்கும் ஆசையாயிருக்கு.

பஞ்சு.—அடே நீ அந்த நிலங்களை விடுகிறாயா இல்லையாடா?

கோபாலன்.—அவை என் சுவாதீனத்தில் இல்லை என்கிறேனே.

பஞ்சு.—அடே போக்கிரி! எண்டா இப்படி அண்டப்புளுகு புளுகிறாய்? இந்த நிலங்களை நான் உனக்குக் கொடுத்ததேயில்லை யென்று அடாவடி அடிக்கப் பார்க்கின்றையா?

கோபாலன்.—நான் அப்படி எப்போதும் சொன்னதில்லையே. நான் சொன்னதெல்லாங் கூடி, அந்த நிலங்களைப் பிறத்தியார்களுக்கு விட்டுவிட்டிருக்கிறேன் என்றுதானே.

பஞ்சு.—மறுபடியும் எழுந்து கோபாலன்மேல் புலிப்பாய்வதுபோல் பாய்ந்து "அடே நீ என்னுடன் எதிருக்கெதிர் வாயாடவாடா வந்தாய்" என்று கர்ஜித்தான். கர்ஜிக்கவே கோபாலன் ஒரே ஓட்டமாய் முற்றத்துக்கு ஓடிப்போனான். பஞ்சுமேனவன் அவனை விடாமல் தொருத்திக்கொண்டு முற்றத்தின் வெளிக்கதவு வழியாய்ப் போகையில் கால் தடுக்கி விழவே முழங்கால்களில் பலமாய்க்காயம் பட்டது. அப்போது அவனுக்கிருந்த பெருங்கோபத்தில் அந்தக் காயத்தைக்கூட லக்ஷியம் பண்ணாமல், சங்கரமேனன் தன்னை எழுப்பிவிட்டதன் மேல் கோபாலனை விடுகிறதில்லையென்று பிடிவாதமாய் அவனைத் தொருத்திச்செல்ல, சங்கரமேனன் அக்கிழவனை பலவந்தமாய் அடக்கித் தன்னாலான வரையில் சாந்தப்படுத்தும்படியாயிற்று.

பஞ்சு.—ஓ தெய்வமே! காலம் என்ன விபரீதமாய்விட்டது! எல்லாம் கலியுக மகிமையே! அந்த தறதலைப்பையனைத் தொருத்திக்கொண்டு ஓடினதில் விழுந்ததனால் என் முழங்காலில் எவ்வளவு காயம் பட்டிருக்கிறது பார். எனக்கு நேர்ந்ததை யெல்லாம் பார். இனி எங்கயப்பாணை அந்தக் கும்மிணிச் சிறுக்கிக்காவது அவள் பெற்ற எமன்படைகளுக்காவது ஒரு செப்பாலடித்த காசுகூட கொடேன். அதுகளின் வயிற்றுக்கு அழுவதைவிட வேறே ஒரு காசுகூடக் கொடுக்கமாட்டேன். சங்கரா, அவர்கள் என்னிடத்தில் பெற்றுக்கொண்டதை யெல்லாம் உடனே கக்கி அதற்கு வழிசொலலச் சொல்லு. இவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டபிறகு வீட்டுவேலைக்காரர்களொப்பந்தம் அவர்கள் வயிற்றுப் பிண்டம் மாத்திரம் போடுவதைவிட வேறொன்றும் கிடைக்காது. (இன்னும் வரும்.)

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

துஷ்ட நிக்ரஹம்.— ஸிஸிலித்தீவில் மெஸ்ஸினியா என்றொரு பட்டணம் உண்டு. அதில் முன்னொரு காலத்தில் ஓர் செம்மான் இருந்தான். அவன் தன் நாட்டின்மேல் மிகுந்த பக்தி உடையவன். இவன் காலத்தில் ஸிஸிலி வரவரக் கெட்டுப்போய்க் கொண்டே வந்தது. எங்கு பார்த்தாலும் பொய்யும் பிரட்டும், பொய்சொல்லிக் கொடியவர் தப்புவதும், லஞ்சம் கொடுத்துப் பணக்காரக் குற்றவாளிகள் விடுதலையடைவதும், ஒன்றும் தெரியா அப்பாவிகள் சிறைச்சாலையில் வருந்துவதும், கொலைத்தொழிலும், அதிகரித்து இந்தத் தேசாபிமானிக்கு மிகுந்த துக்கத்தை உண்டாக்கியது. அந்த ஊர் அரசன் கீழிருந்த அதிகாரிகளும் இந்தக் குழப்பத்தை அதிகப்படுத்தினார்களே ஒழிய ஒருவராவது கொடியவர்களைத் தக்கபடி தண்டித்துச் சீர்திருத்த முயலவில்லை. இதைக்கண்டு பொறுக்கமுடியாமல் போக, செம்மான் தானே இதைச் சீர்திருத்துவதாகத் தொடங்கிவிட்டான். ஒரு சிறு துப்பாக்கி ஒன்றை ஸம்பாதித்து இவன் அதைத் தன் உடுப்புள் மறைத்துக் கொண்டு தினம் மாலைப்பொழுதில் வெளியே புறப்படுவான். கொடியவர்களை அதிகாரிகள் தெரிந்து விட்டுவிட்டபோதிலும் அவர்களை இன்னாரெனத் தெரிந்துகொண்டு, கண்ணுக்கு இருட்டும் ஸமயத்தில் வழியில் கண்டவர்களை நிதானித்துப் பார்த்துக் கொடியவருள் ஒருவன் என்று கண்டால் அவன் பின்னே சென்று ஸமயம் பார்த்து ரஹஸ்யமாக அவனைச் சுட்டுக்கொன்றுவிட்டு அந்தச் செம்மான் தன் வீடு வருவான். இம்மாதிரி இரண்டு மாஸம் வரையில் ரஹஸ்யமாக ஸுமார் 50 கொடியவர்களை இவன் கொன்று தீர்த்துவிட்டான். இவனால் இறந்து விழுந்தவர்கள் கொடியவர்களாயும், அவர்கள் மேலிருந்த விலை உயர்ந்த நகைகள் ஒன்றும் எடுக்கப்படாமலும் உள்ளது உள்ளபடி இருந்தமையாலும், இக்கொலையை மிகுந்த ரஹஸ்யமாகச் செய்பவன் பணத்தாசையுடன் திருடிப் பிழைக்க வேண்டும் என்று செய்பவனல்ல என்பதும், லஞ்சம் முதலியவைகள் மூலமாக சட்டத்திற்கு தப்பிய கொடியவர்களைத் தண்டிக்கும் யமன் என்பதும் எல்லோருக்கும் விளங்கியது. வர வர ஊரிலுள்ள கொடியவர்கள் ஸூர்யன் அஸ்தமித்தால் வெளியிறங்க நடுங்கும்படியாய் விட்டது. இவ்வாறு குற்றவாளி இன்னார் என்று அறியமுடியாத கொலைகள் ஊரில் நடப்பதே ஊருக்கு க்ஷேமக்குறைவாதலால் அவ்வூர் அதிகாரிகள் "இக்கொலைகள் செய்பவனைப்பிடித்துக்கொடுப்பவர்களுக்கு 2000-ரூபா இனாம்கொடுக்கப்படும், அல்லது இக்கொலைகளைச் செய்பவனே நேரிட வந்து தன் தொழிலை ஒப்புக்கொண்டாலும் அவனுக்கும் இதே இனாம் கொடுத்து அவனையும் தண்டிக்காது விடப்படும்" என்று விளம்பரம் செய்தனர். செம்மான் காதிலும் இது விழுந்தது. உடனே அவன் "நாமோ ஊரைத் திருத்தவேண்டுமென்று தொடங்கினோம். இப்பொழுது ஊரில் இருந்த மஹாபாதகர்களில் ஸுமார் 50-பேர் மாண்டுவிட்டனர். இனி உள்ளவர் இத்தொழிலைச் செய்ய அஞ்சுவர். நமது எண்ணமும் பூர்த்தியாகிவிட்டது. இனி நாம் இப்படியே செய்து வருவது அழகன்று. எவ்வளவுதான் தேசநன்மை வந்தபோதிலும், அதை இனிக்கொலை முதலிய கொடுந்தொழில்களால் வரும்படி செய்வது நல்லதல்ல. நாம் வேண்டுமானால் தேசாபிமானத்தால் இக்கொலைகளை வெகு ரஹஸ்யமாகச் செய்கிறோம், அதிகாரிகளாலும் கண்டுபிடிக்க முடியவில்லை. இதைக் கொடியவர்கள் கண்டு அவர்களும் நம்மைப்போலத் தொடங்கிவிட்டால் நமது நாட்டின்கதி என்னமாகும்! ஆதலால்ஓர் நல்ல முடிவை எந்நாளும் கெட்டவழிகளில் அடைய முயலுதல் நன்றன்று. அவ்வாறு செய்தால் தமது கொடுந்தொழில்களை விடாது செய்வதுதான் நன்மை என்று கொடியவர்களுக்கு எண்ணமுண்டாகி நாட்டில் மிகுந்த குழப்பம் வந்துவிடும். இதுவரையில் செய்த கொலைகள் என்னமோ நமது நாட்டிற்காகத்தான் செய்தோம். இனிமேலும் இதைச்செய்வதால் கொடியவர்கள் செயல்கள் அதிகரித்துவிட்டால் என்ன செய்வது! ஆகவே இதை இதோடு நிறுத்துவோம். மேலும் கொடியவர்களுக்கு ஓர் பயமாக இருப்பதற்காக நாம் இப்பொழுது சென்று நமது நோக்கத்தை வெளியிட்டு நமது கொலைகளை ஒப்புக்கொண்டு நமத் கஷ்டங்களைக் காட்டி வரும்தண்டனைக்கு ஆளாவோம். நல்ல விஷயத்தில் கொடியவைகளைச்செய்தவனுக்கு இந்தத் தண்டனையானால், கெட்ட எண்ணத்துடன் செய்யும் கொடியவர்களுக்கு எவ்வளவு தண்டனை விதிக்கவேண்டும் என்று பயந்து கொடியவர்கள் அடங்க, நமதுநாடு, மாறு க்ஷேமத்தை அடையட்டும்",

. ...

என்று எண்ணமிட்டுக்கொண்டு அதிகாரிகள் இடம் சென்று தன் கொடிய தொழில்களை ஒப்புக்கொண்டான். இதுவும் அல்லாமல் தான் இக்கொலைகள் செய்வதற்குத் தேசாபிமானமே காரணம், நன்மை புரிய கொடுமை செய்யவேண்டி வந்ததே என்றவிஷயத்தில் தனக்கு இருக்குந் துக்கம், ஒருஸமயத்தில் அவ்வூர் கொடியவர்களைத் தெரிந்துகொண்டே தண்டிக்காது விட்ட அதிகாரிகளைக் கொல்லவேண்டும் என்று தனக்குத் தோன்றியதும், அப்பொழுது, கடவுளுக்கு ஸமமான அரசனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகளைத் தண்டிக்க தனக்கு அதிகாரமில்லை, கடவுளே அவர்களைக் கண் திறந்து பார்க்கவேண்டும் என்று தான்எண்ணித் தேறியதையும் பலர் அறிய அந்தச் செம்மான் வெளியிட்டான். முடிவில் மிகுந்த 'உருக்கத்துடன் கொடுந் தொழிலை மனதார வெறுக்கும் நானே இவ்வளவு கொடுந் தொழில் செய்யும்படி நேர்ந்ததே! இதற்கு நான் தண்டனை அனுபவித்தால் தான் என்பாபம் தீரும். ஆகையால் நியாதிபதிகளே!என்னைத் தாங்கள் இஷ்டப்படித் தண்டனைக்குள்ளாக்கலாம்' என்றுசொல்லி முடித்தான். நியாயாதிபதிகள் இவனுக்குக் கொடுக்க வேண்டிய வெகுமதியைக்கொடுத்து வெளிஊரில் சென்று வஸித்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்ள அவ்வாறே செய்து அவன்பின்னர் ஸுகமாக வாழ்ந்தான். மெஸ்ஸீனியாவும் இவனால் வெகு நாள் சண்டை முதலியன இன்றி நல்ல ஊராக இருந்தது.

காற்றுள்ளபோதே தூற்றிக்கோள்.—இந்தப் பழமொழி நெல்லைக்குத்தி அரிசியாக்குமிடத்திலிருக்கும் தொழிலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. நெல்லைக்குத்தியதும் அதில் அரிசி தவிடு உமி ஆகிய இவைகள் கலந்திருக்கும். இவைகளில் உமியை வேறாய்ப் பிரிப்பதற்கே தூற்றுதல் என்பது. உமியை விட அரிசி கனமாக இருப்பதால், இவை இரண்டும் கலந்த கலப்பை முறத்தில் எடுத்து உயரத்தூக்கித் தூற்றினால் அரிசி நேரே கீழேயும் உமி காற்றால் சற்று ஒருபுறம் ஒதுக்கப்பட்டும் விழ அரிசி ஒரு குவியலாகவும், உமி மற்றோர் குவியலாகவும் சேரும். உடனே அரிசியை வேறாக எடுத்துக் கொண்டு விடலாம். இவ்வாறு உண்டாகும் இரண்டு குவியல்களும் நன்றாகப் பிரிந்து உண்டாவதற்கு நல்லகாற்று வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் குவியல்கள் இரண்டு நெருக்கமாகவே உண்டாக மறுபடியும் அரிசியும் உமியும் கொஞ்சம் கலந்துவிடும். காற்றே இல்லாவிடில் கனமாகிய அரிசி முதலிலும் அதன்மேலே மெதுவாக உமியும் விழ இரண்டு குவியல்களும் ஒரே குவியலாகிவிடும். ஆகவே தூற்றுவதற்குக் காற்று அவசியம். தூற்றும் தொழிலை நன்றாய்ச் செய்து பயன்பெற வேண்டுமாகில் நல்ல காற்றுள்ள ஸமயத்தில் செய்ய வேண்டும். இம்மாதிரி தூற்றுதல் ஸாதாரணமாக மற்றைய தான்யங்கள் விஷயத்தில்தான் செய்வது வழக்கம். இப்பழமொழியில் தூற்றுதல் என்பது பொதுவாக எல்லாவிதத்தொழில்களையும், காற்று என்பது அத்தொழில்களுக்கு வேண்டிய ஸஹாயங்களையும் குறிக்கின்றன. ஆகவே இப்பழமொழிக்கு எத்தொழிலைச் செய்ய வேண்டுமாயினும் அதற்கு ஸஹாயமாயிருப்பவைகளின் அனுகூல நிலையை நோக்கிச் செய்துமுடிக்கவேண்டும் என்பது பொருள். தவறி ஸஹாய வஸ்துக்கள் இல்லாதகாலத்தில் ஓர் தொழிலைத் தொடங்கி விடுதல் பயன் படாது. ஆகையால் அவ்வாறு செய்வதைவிட செய்யாதிருத்தலே நலம். இந்தப் பழமொழியின் கருத்துள் அடங்கிய பழமொழிகள் 'பருவத்தேபயிர் செய்.' 'இளமையில் கல்' முதலியவைகளே. இவைகள் எல்லாவற்றிற்கும் தருணம் பார்த்துக் கர்மம் செய்யவேண்டும் என்பதே கருத்து.

இதற்கு உதாரணமாக அநேக விஷயங்களை எடுத்துக்காட்டலாம். தேகத்தில் பலம் இருக்குங்காலத்திலே நன்றாகப்பொருள் ஸம்பாதித்து அனாவசியமாகச் செலவிடாது சேர்த்துவைப்பானாயின் ஸம்பாதிக்க முடியாத வயஸுகாலத்தில் ஸுகமாக இருப்பான்.இம்முறைமைப்படி பொருள் ஸம்பாதிப்பவன் காற்றுள்ளபோதே தூற்றிக்கொண்டவன். ஒருவன் தேகம் திடமாக இருக்கும் காலத்திலேயே பகவத் பக்தி நன்னடக்கை முதலிய ஸன்மார்க்க விஷயங்களில் பழகிவருவானாகில், இந்திரியங்கள் பலம்குறைந்து ஸுகம் அனுபவிக்க முடியாத விருத்தாப்பியத்திலும் கூட அவன் திருப்தி செய்யக்கூடாத ஆசையால் வருந்தவே மாட்டான். விருத்தாப்பிய கஷ்டங்கள் ஒன்றும் அவனுக்கு வரவேமாட்டாது. இவ்வாறு செய்பவனும் காற்றுள்ளபோதே தூற்றிக் கொண்டவன். வியாபாரிகள் விஷயத்திலும் எந்த வஸ்து ஜனங்களுக்கு அதிகமாக வேண்டியிருக்கிறதோ அதில் வியாபாரம் செய்பவனே பயனடைவான். இதுபோலவே மனதை அடக்கும் விஷயத்திலும். எக்காலத்தும் ஒருவன் மனம் சலித்துக்கொண்டே இராது ; ஒவ்வொரு ஸமயம்அது அடங்கிவரும். அந்தஸமயம்பார்த்து ஸத்காலக்ஷேபம், த்யானம் முதலியவைகளில் பழகினால் வரவர பழக்க விசேஷத்தால் மனதை எளிதில் அடக்கிவிடலாம். முற்கூறியவைகள் எல்லாம் தருணம் பார்த்துக் கருமம்செய்தலுக்கு உதாரணங்களே.

இந்தப் பழமொழியை சிலர் கெட்டவழிகளிலும் உபயோகப்படுத்திக்கொள்வார்கள். ஒருவன் ஓர்வீட்டுக்கார்யஸ்தனாக இருக்கிறான் என்றுவைத்துக்கொள்ளுவோம். அந்த வீட்டு யஜமானனுக்குப் பிற்காலம் தன்கதி என்னமாகுமோ என்ற எண்ணத்துடன் தத்கால நிலைமையிலிருந்து எவ்வளவுஸொத்து, திருடுதல், பொய்க்கணக்கெழுதல், லஞ்சம் வாங்குதல் முதலிய அமார்க்கங்களால் சேர்க்கக்கூடுமோ அவ்வளவையும் சேர்ப்பதையே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளுதல் என்று எண்ணிவிடலாம். மேலதிகாரியாக விருந்து ஜனங்களிடம் லஞ்சம் வாங்கிப் பிழைத்தல், எரிகிற வீட்டில் பிடுங்கினது லாபம் என்று குழப்பம்நேர்ந்த விடங்களில் தன்கையில் அகப்பட்டதை ரஹஸ்யமாகச் சுருட்டிக்கொண்டுபோதல், உண்மைக்குப் பாடுபடுபவனை அதட்டி வேலைவாங்குதல், ஓட ஓட ஒருவனை விரட்டித் திருப்தி அடைதல் முதலிய உலகவிஷயத் தொழில்கள் யாவும் இப்பழமொழியில் அடங்கியிருக்கும் குதர்க்கப் பொருள்களே. இம்மாதிரி இப்பழமொழியைப் பொருள்படுத்தி நடப்பது கொடிய பாபத்துக்கு இடமாகி ஒருவனை மீளாத்துக்கத்திற்கு ஆளாக்கும் என்பதற்கு என்ன ஸந்தேகம்?

இப்பழமொழிக்கு மிகச் சிறந்ததாகிய ரஹஸ்யப் பொருள் ஒன்று உண்டு. காற்று என்ற பதத்திற்கு மூச்சுக்காற்று என்று பொருள்கொள்ளலாம். இதற்கு ஆதாரம் 'காயமது பொய்யடா, அது காற்றடைத்த பையடா' என்ற ஸித்தர்பாடலே. தூற்றிக் கொள்ளுதலாவது அரிசியை உமியிலிருந்து பிரித்தல். 'இதைமறைக்கும் தன்மையவாகிய பஞ்சகோசம், தேஹம் முதலிய வெளித்தோற்றங்களிலிருந்து ஆத்மாவைப்பிரித்தல், அதாவது நிஷ்டை செய்து எல்லாத்தோற்றங்களுக்கும் அப்பாற்பட்டு ஸகலத்திற்கும் ஸாக்ஷியாக இருப்பதே ஆத்மா என்று மாறா உணர்ச்சிவரும்படிசெய்து கொள்வது' என்று பொருள் படுத்தலாம். இதற்கு ஆதாரம் 'நெல்லாகி முளைக்கும் எனைத்தண்டுலமாக்கிய குருவே' என்ற கைவல்ய வாக்கியமே. இதில் ஞானோபதேசத்தால் நிஷ்டை கைகூடிய சிஷ்யன் குருவை நோக்கி 'நெல் போன்ற (உமியால் மூடப்பட்ட அரிசியைப்போல்) அஞ்ஞானத்தால் மூடப்பட்ட ஆத்மாவை உடைய என்னை (குத்தித்தூற்றி அரிசியாக்குவதுபோல ஞானோபதேசத்தால்) அரிசிபோலாக்கிய (ஆத்மாவாக நிஷ்டையில் தனித்து நிற்கும்படி செய்த) குருவே' என்று பரிவுடன் வணங்குகிறான். ஆகவே இவ்வாதாரங்கள் மூலமாக நோக்கின் இப்பழமொழிக்கு 'ஆத்மாவை மறைக்கும் பஞ்சகோசாதிகளைச் சுவாஸக்காற்றுள்ளபோதே நீக்கிக்கொள், அதாவது, நிஷ்டை ஸாதித்து இறக்குமுன் ஸித்திபெறு' என்பது ரஹஸ்யப் பொருளாகின்றது. ஸாதாரணப் பழமொழிகளில் எவ்வளவு ரஹஸ்யப் பொருள்கள் அடங்கியிருக்கின்றன பாருங்கள்!

## XVII இயற்கையற்புதங்கள்

# ஹாலிவால் நக்ஷத்திரம்

## *HALLEY'S COMET*

விவேக போதினி முதல் தொகுதி 10-ம் பகுதி 302-ம் பக்கத்தில் பொதுவாக வால்நக்ஷத்திரங்களைப்பற்றிக் கூறியுள்ளது. அதில் பின்வரும் விஷயங்களை முக்கியமாக ஞாபகம் வைத்துக்கொண்டால் இங்கு ஹாலிவால் நக்ஷத்திரத்தைப் பற்றிக் கூறப்புகும் விஷயங்கள் நன்கு விளங்கும்.

1. ஸூர்யனது காந்த மின்சாரசக்தியால் வால்நக்ஷத்திரத்தைச் சூழ்ந்திருக்கும் புகைபோன்ற அலைகள் ஒதுக்கப்படுவதால் இதற்கு வால் உண்டாகிறது. ஆகவே வால் நக்ஷத்திரத்தின் வால் எப்பொழுதும் ஸூர்யன் இருக்கும் பக்கத்திற்கு நேர் எதிர்புறம் நீண்டிருக்கும். வால்நக்ஷத்திரம் ஸூர்யன் அருகாமையில் வர வர அதன் வால் நீளும்.

2. சுற்றிவரும் வால்நக்ஷத்திரம் த்விமத்ய சக்கிரத்தில் ஸூர்யனைச் சுற்றிவரும்.

3. வால்நக்ஷத்திரவஸ்து புகைபோல அடர்த்தியற்றதாக இருப்பதால் அதன் வாலுள் பூமி அகப்பட்டால் பூமிக்கு யாதொருகேடும் வராது. ஓர் வேளை எரிநக்ஷத்திர மழை மாத்திரம் ஏற்படலாம்.

4. வால்நக்ஷத்திரம் அடிக்கடி ஸூர்யன் அருகாமையில் வந்துகொண்டிருந்தால் அதன் வஸ்து, வாலாக ஒதுக்கப்படப் பின்தங்கி விடுவதால் வரவர வால் குறைந்துவந்து முடிவில் நக்ஷத்திரமே நஷ்டமாகப்போகும்.

ஹாலி வால் நக்ஷத்திரமானது சென்ற வருஷம் ஸெப்டம்பர் மாதம் 11-ம் தேதி மேனாட்டு நக்ஷத்திர சாலை தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குப் புலப்பட்டது. பின்னர் முன் எடுத்த படங்களை * நோக்குங்கால் ஆகஸ்ட்டு 24-ம் தேதியன்றே இதன் படம் காணப்பட்டது. 24-ம் தேதி ஈஜிப்டில் எடுத்த படத்திலும் இது காணப்பட்டது. அதுமுதல் இது மெதுவாகப் பெரிதாகிவர அக்டோபர் நவம்பரில் ஸூர்யனுக்குக் கிழக்குப்புறத்திலிருந்த சனிக்கிரஹத்திற்குக் கீழே முன் இரவில் புகைப்பொட்டுப் போல 4'' குறுக்களவுள்ள தூரதிருஷ்டி கண்ணாடிக்குப் புலப்பட்டது. அப்பொழுதே வான சாஸ்திரிகள் கணனம் செய்து 1910-ம் வருஷம் மே மாதம் 18-அல்லது 19-ம் தேதியில் பூமிக்கு அருகாமையில் இது வரப்போகிறதென்றும், அப்பொழுது நன்றாகத் தெரியும் என்றும் பூமி அதன் வால் வழியே ஊடுருவிப்போகப் என்றும் நிர்ணயம் செய்தனர். இந்த வால்நக்ஷத்திரம் ஸூர்யனைத் தாண்டி அதன் மேல்புறம் வந்து பின் இரவு அதாவது அதி

* தூரதிருஷ்டிக் கண்ணாடியை நக்ஷத்ரங்கள் சுற்றும் வேகத்துடன் சுற்றும்படி யந்திரங்கள் ஏற்படுத்தி அதை ஸரியாக ஒழுங்குபடுத்தி அதன் கீழ்ப்புறத்தில் படப்பெட்டியைக் கட்டி 3, அல்லது 4-மணி நேரம் அல்லது வேண்டியகாலம் அதைத் திறந்துவைத்தால் நக்ஷத்திரத்தின் படம் அதில் பதியும்.

காலையில் தெரிந்துகொண்டு வந்தது. இப்படி வருகையில் ஏப்ரல் மாதம் 23-தேதியன்று சுக்கிரனுக்கு ஸுமார் வடகிழக்கு பாகத்தில் ஸுமார் $\frac{2}{3}$-நேர்கோணப்பிரிவு தாழ்ந்து (நேர்கோணம் = உச்சிமுதல் அடிவானம் வரையில் உள்ள பிரிவு.) நமது கண் பார்வைக்கே தெரிந்தது. இந்த நக்ஷத்திரம் வர வர மெதுவாக மேலே உயர்ந்துகொண்டும் வாலை நீட்டிக்கொண்டும் வந்தது. இப்படி இருக்கையில் கிருஷ்ணபக்ஷம் வந்துவிட்டபடியால் இது மங்கலாக தினம் காலை சுக்கிரனுக்கு அருகாமையில் தெரிந்துகொண்டிருந்தது. மேமீ 6வ அமாவாஸை கழிந்ததும் பின்னிருட்டு ஆகையால் வால் நக்ஷத்திரம் நன்றாக நீண்டவாலுடன் தெரியத் தொடங்கிவிட்டது. இப்படி வரவர நீண்டுகொண்டு வர, மேமீ 14,15-ம் தேதி யன்று வால் ஸுமார் $\frac{2}{3}$-நேர்கோணம் நீண்டுவிட்டது. இதற்குமுன் வந்தஸமயங்களில்இதன்வால் இதைவிட நீளவில்லை. இதுவரையில் வரவர மேலே உயர்ந்து சுக்கிரன் மட்டத்திற்குவந்து கொஞ்சநாள் அங்கேயே நின்ற வால்நக்ஷத்திரம் திடீரென்று அன்று ஸூர்யனை நோக்கிக் கீழேஇறங்கவும் வாலும் நீளத்தொடங்கி விட்டது. அதிசீக்கிரத்தில் இவ்வாறு இறங்கிவர வால்நக்ஷத்திரத்தின் பொட்டு பாகம் 17-ம் தேதி முதல் காலையில் தெரியவில்லை, வால்மாத்திரந்தான் தெரிந்தது. வால் ஸுமார் இதற்குள் முழுநேர்கோணத்தை விட அதிகமாக நீண்டு காணப்பட்டது. அப்பொழுது அதன் நீளம் ஸுமார் 20,000,000 மைல் இருக்கலாம். பூமி வால்வழியே போகுங்கால் வால் 60,00,000 மைல் அதன்மேல் நீண்டு காணத்தக்க நிலையில் இருந்தது. மேமீ 18, 19, 20 ஆகிய இந்தத் தேதிகளில் வால்நக்ஷத்திரத்தின் வால் காணப்பட்டது. வெள்ளிக்கிழமை (20வ) அன்று சாயுங்காலம் மேகம் மூடிக்கொண்டிருந்தபடியால் அன்று மாலையில் வால் நக்ஷத்திரம் அநேகருக்குத் தெரியவில்லை. நக்ஷத்திரம் ஸூர்யனை நோக்கி இறங்கிய வேகத்தை நோக்கில் அன்று மாலையிலேயே ஸூர்யனைத் தாண்டி முன்னிரவில் அது தெரிந்திருக்கவேண்டும். சிலர் அன்று சாயுங்காலமே வால் நக்ஷத்திரத்தை மேற்கே கண்டார்களாம். அடுத்தநாள் (சனிக்கிழமை 21வ) சாயுங்காலம் மேற்குப் புறத்தில் $\frac{1}{3}$-நேர்கோண உயரம் வால்நக்ஷத்திரம் வால் குன்றிக் காணப்பட்டது. அதுமுதல் இன்றுவரையில் வர வர மெதுவாக வால் நக்ஷத்திரம் மேல் நோக்கி உயர்ந்துகொண்டும் மங்கலாகிக்கொண்டும், வருகிறது. அதன் வாலின் நீளம் குறைந்துகொண்டு வருகிறது. இனி ஜூன் மாதம் முடியும்வரை ஒருவேளை கண்ணுக்குப் புலப்படும். அப்புறம் ஸுமார் நாலைந்து மாதம் அது தூரதிருஷ்டிக்கண்ணாடிக்கு மாத்திரம் புலப்படும்.

இனிபூமிக்கு அருகாமையில் இந்தநக்ஷத்திரம்இருந்தநாள்களாகிய மேமீ 18,19,20, 21-ம் தேதிகளில் நடந்த அற்புதங்களை எடுத்துக் கூறுவோம். முன் செய்துள்ள கணனங்களால் மேமீ 19-தேதியன்று பூமி ஒருவேளை வால்நக்ஷத்திரத்தின் வால் வழியே போகலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அப்படியாகில் வால்நக்ஷத்திரம் ஸூர்யனுக்குக் குறுக்கே இந்தத் தேதிகளில் போகவேண்டும். ஆகவே 18-ம் தேதிமுதல் எல்லா வானசாஸ்திரிகளும் ஸூர்யன் அருகாமையில் தூரதிருஷ்டிக்கண்ணாடி மூலமாகப் பார்த்து வந்தனர். வால் நக்ஷத்திரம் குறுக்கிட்டிருக்கவேண்டிய 19-ம் தேதி ஸுமார் 9-மணி முதல் 10-மணிக்குள் ஸூர்ய பிம்பத்தில் ஓர்விதக் கருப்புப் பொட்டும் காணப்படவில்லை. இதுவும் வால் நக்ஷத்திர வஸ்துவின் அடர்த்திக் குறைவைக் காட்டுகின்றது. வால் வளைந்திருந்ததால் வால் அடுத்த நாள் (20வ) காலையிலும் தெரிந்தது. 20வ பகலில் தான் வால் வழியாக பூமி போயிருக்கவேண்டும். அன்று பட்டணத்தில் உஷ்ணம் நிரம்ப அதிகமாகவும் இருந்தது. இதைத் தவிர வேறு ஓர்வித மாறுபாடும் காணப்படவில்லை. இதற்கு முன்னதாகவே மேமீ 18வ புதன்கிழமை காலை வால் பூமி அருகாமையில் வந்துகொண்டிருப்பதாகச் சில அற்புதத் தோற்றங்கள் தெரிவித்தன. வர வர வால் திடீரென்று நீண்டுகொண்டு வந்ததே வால் பூமி அருகாமையில் வருகின்றது என்பதற்கு ஓர் அடையாளமாக இருந்தது. இது முன் ஒரு தரம் வந்தகாலத்தில் $\frac{2}{3}$-நேர்கோண அளவு வாலைத் தான் உடைத்தாயிருந்தது. அது இந்த ஸமயம் முழு நேர்கோணத்தைவிட அதிகமானதே வால் பூமியை நோக்கி வருகிறது என்பதைக் குறிப்பித்தது. 18-ம் தேதி காலைஒருவர் மிகுந்த கவனத்துடன் இந்த வால் நக்ஷத்திரத்தைப் பார்த்துத் தாம் கண்டதை ஹிந்து பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அவர்கண்டது பின்வருவன: (1) அன்றுகாலை ஸுமார் 3-50-மணிக்கு இளம் மஞ்சள்வர்ணமுடைய ஒருஎரிநக்ஷத்திரம் காணப்பட்டது. உடனே ஸுமார் இருபது பொறி நக்ஷத்திரங்களும் காணப்பட்டன. இதனாலே நக்ஷத்திரத்தின் வால் தனி வஸ்துக்களால் ஆக்கப்பட்டது என்பது விளங்கிற்று. (2) $4\frac{1}{2}$-மணிக்கு வாலின் வடபுறத்தில் ஓர் நீண்டவால்போன்ற வெளிச்சம் காணப்பட்டது. இதுவும் நக்ஷத்திரத்தின் தலைப் பாகத்திலிருந்து வருவதுபோலக் காணப்பட்டது. கொஞ்சநாழிகைக்கெல்லாம், இதுபோன்ற அநேக வால்கள் கிளம்பின. (3) முதல்வால் கொஞ்சம் குறைந்து இரண்டாகக் கவர் பிரிந்தது. (4) திடீரென்று முதல்வால் மறைந்து புதியவால்களே பரந்து நின்றன. (5) இவ்வால்களுக்கு குறுக்கே சிலமேகங்கள் போன்றவை வட்டமாகக் காணப்பட்டன. இந்தவட்டங்களின் மத்தியம் வால் நக்ஷத்திரத்தின் தலையாக இருக்கலாம். ஸுமார் $5\frac{1}{4}$-மணிக்கு இவைகள் சற்று சிவந்துபிரகாசித்தன. (6) அப்பொழுது மேகங்கள் இல்லாததாலும், இந்த வால்கள் திடீ

றென்று கொஞ்ச நாழிகையில் உண்டானதாலும், பழைய வாலிலிருந்து இவைகள் உண்டானதாலும், ஸூர்யன் ஸம்பந்தமாக இவைகள் மாறுமலிருந்தபடியாலும், மேகங்கள்போல இல்லாதபடியாலும், இவைகள் ஸூர்ய ஸம்பந்தமான தோற்றங்களே ஒழிய பூமி ஸம்பந்தமான தோற்றங்களல்ல என்பது தெரியவந்தது. வால் பூமியை நோக்கி வருகிறதென்றும், அது பூமியாகர்ஷண சக்தி எட்டுமிடம் வந்ததும் வளைந்ததென்றும், இதனாலே வாலுள் இருக்கும் காந்த மின்சார சக்தி வாலைப் பிரித்ததென்றும், வால் இவ்வாறு பிரிந்ததனாலே அது அநேக சிறு தனிவஸ்துக்கள் பரந்திருப்பதால் உண்டாகின்றதென்றும், வால்கள் எல்லாம் ஒரேமாதிரி பிரகாசித்ததால், அவைஸூர்யவெளிச்சத்தால் மாத்திரம் பிரகாசிப்பனவல்ல ஸ்வயகாந்த மின்சார வெளிச்சமுடையன என்றும் இத்தோற்றங்களிலிருந்து ஊகிக்கலாம்.

காமையிலே இந்த வருஷம் ஜனவரி மாஸம் முதல் ஜூன் மாஸம் வரையில் இருந்ததால் மார்ச்சுமாதம் ஒருதரம் வால்நக்ஷத்திரம் ஸூர்யனைத்தாண்டியது. அப்பொழுது பூமியிலிருந்து வெகுதூரத்தில் அதிருக்கும் பக்கத்திற்கு எதிராக, ஸூர்யனைப் பூமிக்கும் தனக்கும் இடையில் உள்ளதாக இருந்தது என்பது அந்தக்காலங்களில் வால்நக்ஷத்ரம் ஸாதாரணக்கண்ணுக்குப் புலப்படாததால் வெளிவருகிறது. பின்னர் இது ஸூர்ய நெருக்க பாகத்தை ஏப்ரல் 19உயில் அடைந்தது. அப்பொழுது அது ஸூர்யமத்தியிலிருந்து, 5,40,00,000 மைல் தூரத்திலிருக்கும். பின்னர் பூமி வால்நக்ஷத்திர கதியைத்தாண்டி மறுபுறம் போக வால்நக்ஷத்திரம் பூமிக்கும் ஸூர்யனுக்கும் இடையே வந்து மறுபடியும் ஸூர்யனைத் தாண்டியது. மேமீ 19உ வரையில் கிழக்கே மேல் நோக்கிய வாலுடன் காலையில் தெரிந்த நக்ஷத்திரம் 21உ மாலை மேற்கேயும் மேல் நோக்கியவாலுடன்




வட்டம்—பூமிகதி : குறைவட்டம் : வால்நக்ஷத்ரகதி ஸ—ஸமராத்ரஸ்தானம் : ஸூநெ—ஸூர்யநெருக்கம்

இந்த வால் நக்ஷத்திர விஷயமாக இரண்டொரு விஷயங்கள் விளக்க வேண்டியது அவசியம். முதலில் ஸூர்யனுக்குக் கிழக்கே தெரிந்த வஸ்து ஸூர்யனைத்தாண்டி மேற்கேபோய் பின்னர் திரும்பி மறபடியும் ஸூர்யனைத்தாண்டி கிழக்கே வருவானேன் ? இது பின்வரும் சித்திரத்தில் இருந்து எளிதில்விளங்கும். பூமியானது இந்த வால் நக்ஷத்திர கதிக்கு அரு

வால்குறைந்தும் ஏன் தெரிந்தது என்று சிலர் சங்கிக்கலாம். வால் ஸூர்யனிருக்கும் பக்கத்திற்கு எதிர் புறத்திலே எப்பொழுதும் இருக்கவேண்டும் என்ற விதியும், அமாவாஸைக்கு முந்தின நாள் ஸூர்ய உதயத்திற்கு முன்பு கிழக்கே காலையில் தெரியும் சந்திரன், அமாவாஸை கழிந்து இரண்டாம் நாள் மேற்கே ஸூர்யாஸ்தமனத்திற்குப் பின்

மாலையில் தெரிகிற விதத்தையும், வால் பூமியின் வழியேபோய் திரும்பி நிற்கும் என்ற உண்மையையும், வால் நக்ஷத்திரம் ஸூர்யனைவிட்டுத் தூரப்போகுங்கால் அதன் வால் குன்றும் என்ற உண்மையையும் ஞாபகம் வைத்துக்கொண்டால் இந்தத் தோற்றத்தின் காரணம் வெளியாகும்.

இந்த வால் நக்ஷத்திர விஷயமாக அநேகர் வெகுவாகப் பயம் அடைந்தனர். ரஷ்யா தேசத்தில் இந்த விஷயமாக ஜனங்கள் பயந்துவிட்டனராம். வால் நக்ஷத்திரத்தின் வாலுள் பூமி சிக்கி சிதறிவிட அநேகர் இறக்கும்படி நேரிடும் என்ற பொய்யைக் கட்டிவிட்டு ஜனங்களைப் பயமுறுத்தி சிலர் அங்கு பணம் சேர்த்து கோயில்களில் பூஜைசெய்வதாகத் தலைப்பட்டனர். ஊரெங்கும் பகவானைக்குறித்து ஸ்தோத்ராதிகள் செய்யப்பட்டனவாம். இப்பரதகண்டத்தில்கூட சிற்சில ஊர்களில் எல்லோரும் மேமீ 19உ வெளியே ஓடி விட்டனராம். வால் நக்ஷத்திரம் அடர்த்தி குறைந்த வஸ்துவாலாகியது, அது எந்தக்கிரஹத்தைத் தாக்கியபோதிலும் கிரஹத்திற்கு யாதொரு கெடுதியும் வாராது; வால் நக்ஷத்திரம் தான் சிதறும் என்ற உண்மையையும் பூமியோடு தாக்குங் காலத்தில் இதைச் சுற்றியிருக்கும் ஸாதாரண வாயுமண்டலம் வால்நக்ஷத்திர வஸ்துவை உள்ளே வரவிடாது எரி நக்ஷத்திர மழையாக்கிவிடும் என்ற உண்மையையும் உணர்ந்திருந்தால் இந்தப் பயம் அதிகமாக ஒருவருக்கும் வந்திராது. இந்த மேமீ 20உ பகல் நமது பூமி வால்நக்ஷத்திரத்தின் வாலின்வழியாகப் போயிற்று. ஓர்வித மாறுதலையும் காணோம். இதேமாதிரி 1861-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதி ஓர் பெரியவால் நக்ஷத்திரத்தின் வால் வழியே நமது பூமி போயிற்று. யாதொரு மாறுதலும் தெரியவில்லை. (விவேகபோதினி தொகுதி, 1, பகுதி 10, பக்கம் 304-ஐப்பார்க்க.) ஜனங்கள் இந்த விஷயத்தில் வைத்திருந்த பயம் அறியாமையினால் உண்டானதேயல்லது வேறல்ல.

இனி இந்த வால் நக்ஷத்திரத்தைப் பற்றிய விஷயங்கள் கண்டறிந்த ஹாலியைப் பற்றியும், அவர் செய்த ஆராய்ச்சியின் விஷயத்தைப்பற்றியும் எடுத்துக்கூறுவோம். எட்மண்டு ஹாலி என்ற வானசாஸ்திரி 1656-ம் வருஷத்தில் பிறந்தார். இவர் காலத்திலே தான் ஸர் ஐஸக் நியூடன் என்ற தத்வசாஸ்திரி இருந்தது. (1642—1727). நியூடன் என்பவர், தமக்கு முன்னால் இருந்த கேபலர் கிரஹகதி விஷயமாகச்செய்த விதிகளால், ஸூர்யனிடம் ஓர்வித ஆகர்ஷணசக்தி இருத்தல் வேண்டும் என்று தீர்மானித்தார். இந்த விஷயத்தை வெளியிட வேண்டிய தைரியமில்லாததால் இவர் தயங்கி நிற்க, இவரிடம் ஹாலி என்பவர் 1684-ம்௵ வந்து இவரது அனுமானத்தின் சிறப்புக்களைக்கேட்டு ஆனந்தித்துத் தான் செய்துவரும் கணனத்திற்கு அதை உபயோகப்படுத்திக்கொண்டார். கொஞ்சநாளைக்குள் அவருக்கு ஆக்ஸ்போர்டில் அங்ககணித உபாத்தியாயர் வேலையாக, அவர் வால் நக்ஷத்திரவிஷயமாக ஆராய்ச்சி செய்யலாயினர். மிகுந்த கஷ்டத்தின்பேரில் அவர், நியூடன் அனுமான பலத்தால், ஸுமார் 24 வால் நக்ஷத்திர கதிகளின் மூல அளவைகளை எழுதிவெளியிட்டார். அதில் மூன்று நக்ஷத்ரங்களுடைய அளவைகள் சற்றேறக்குறைய ஒரேமாதிரி இருந்தன. இவை 1531-௵ ஆகஸ்டுமீ 24உயிலும், 1607௵ அக்டோபர்மீ 16உயிலும், 1682௵ ஸெப்டம்பர்மீ 4உயிலும் பூமி அருகாமையில் காணப்பட்டன. இவைகளின் இடையில் உள்ளகாலம் முறையே 76-வருஷம் 2-மாதமும், 74-வருஷம் 11-மாதமும் ஆக இருந்தன. மற்றைய மூல அளவைகள் எல்லாம் ஒன்றாக இருக்க ஹாலி என்பவர் 'இது ஒரே நக்ஷத்திரமாகத்தான் இருத்தல் வேண்டும். ஏதோ வழியில் உள்ள கிரஹங்களின் ஆகர்ஷண சக்தியால் இடைக்காலம் ஸுமார் 75-வருஷத்திற்கும் சற்று ஏற்றத்தாழ்வாக இருக்க இடமுண்டு' என்று தீர்மானித்தார். இதனால் இந்த நக்ஷத்திரம் மறுபடி 1758-௵ வரவேண்டும் என்றும் வெளியிட்டார். இந்த ஹாலிதான் நக்ஷத்திரங்களுக்கும் அசைவுகள் உண்டு என்று கண்டுபிடித்தார். இவர்தான் கப்பல்யாத்திரையின் கஷ்டங்களைக்குறைத்தவர். இவர் நியூடனைத் தைரியப்படுத்தி அவர் பிரபஞ்ச ஆகர்ஷண விதியை வெளிப்படுத்தி அதன் மூலமாக வான சாஸ்திரத்தில் அவருக்குப் பிரஸித்தமுண்டாகும்படி செய்து தாமும் பிரஸித்தமடைந்தார். ஆயுள் முழுவதும் வானசாஸ்திரத்தில் உழைத்த ஹாலி என்பவர் 1742-ம் வருஷத்தில் இறந்தார். பின்னர் 1759-ம் வருஷம் இவர் கூறிய வால்நக்ஷத்திரம் ஸூர்ய நெருக்க இடத்திற்கு வந்தது. ஸுமார் 75-வருஷத்திற்கு ஒருதரம் சற்று ஏறத்தாழவரும் என்றும், அவ்வாறு வருவதற்குத் தகுந்த காரணமும் கூறிய ஹாலியின் வார்த்தை எல்லோருக்கும் ஞாபகமிருக்க வானசாஸ்திரிகள் அதற்கு ஹாலிவால் நக்ஷத்திரம் என்று பெயரிட்டனர்.

இதன் பின்னர் இந்தநக்ஷத்ரம் வந்த வருஷங்களும் வரப்போகும் வருஷங்களும் பின்வருமாறு ஊகிக்கப்பட்டன. இவைகளில் அநேகம் முன் ஏற்பட்டுள்ள கணனப்பட்டியிலிருந்து ஊஹித்தவை. இங்கு காட்டப்பட்ட சிற்சில வருஷங்களில் பெரிய உற்பாதங்கள் நேர்ந்தனவாம். சிற்சில வருஷங்களில் சுபங்களும் ஸம்பவித்தனவாம். உலக விஷயங்களில் ஏற்படும் ஸுகதுக்கங்கள் வால்நக்ஷத்திரத்தாலாவது என்று எண்ணுவது மூட நம்பிக்கையே ஒழிய வேறல்ல. இதனால் வீணாகப் பயத்திற்கு ஆளாவது புத்திமான்களுக்கு அழகல்ல. வால் நக்ஷத்திரம் வந்த காலத்தில் நல்லதும் கெட்டதும் ஸம்பவித்திருப்பதால் வால் நக்ஷத்திரத்தை அசுபஸூசகம் என்று மாத்திரம் கொள்ளவேண்டியதில்லை.

| வருஷம் | ஸூர்ய நெருக்கம் | |
|---|---|---|
| 87 கி. மு. | ஆகஸ்ட் | 15 |
| 12 கி. மு. | அக்டோபர் | 8 |
| 66 கி. பி. | ஜனவரி | 26 |
| 141 கி. பி. | மார்ச் | 25 |
| 218 கி. பி. | ஏப்ரல் | 6 |
| 295 கி. பி. | ஏப்ரல் | 7 |
| 373 கி. பி. | நவம்பர் | 7 |
| 451 கி. பி. | ஜூலை | 3 |
| 530 கி. பி. | நவம்பர் | 15 |
| 607 கி. பி. | மார்ச் | 2 |
| 684 கி. பி. | நவம்பர் | 26 |
| 760 கி. பி. | ஜூன் | 15 |
| 837 கி. பி. | பிப்ரவரி | 25 |
| 912 கி. பி. | ஜூலை | 19 |
| 989 கி. பி. | அக்டோபர் | 9 |
| 1066 கி. பி. | மார்ச் | 27 |
| 1145 கி. பி. | ஏப்ரல் | 6 |
| 1222 கி. பி. | செப்டம்பர் | 10 |
| 1301 கி. பி. | அக்டோபர் | 23 |
| 1378 கி. பி. | நவம்பர் | 9 |
| 1456 கி. பி. | ஜூன் | 8 |
| 1531 கி. பி. | ஆகஸ்ட் | 26 |
| 1607 கி. பி. | அக்டோபர் | 27 |
| 1682 கி. பி. | செப்டம்பர் | 15 |
| 1759 கி. பி. | மார்ச் | 13 |
| 1835 கி. பி. | நவம்பர் | 16 |
| 1910 கி. பி. | ஏப்ரல் | 19 |

இந்த வால் நக்ஷத்திரத்தைப் பற்றிய பொது விஷயங்களைச் சற்றுக் கூறுவோம். ஹாலிக்குப் பின்னர் இந்த நக்ஷத்திரத்தைப்பற்றி பூரணமாகவிஷயங்கள் கணிக்கப்பட்டு வற்புறுத்தப்பட்டன. இந்த நக்ஷத்திரம் த்விமத்ய சக்கிரத்தில் சுற்றிவருகிறது. ஓர் மத்யத்தில் ஸூர்யனிருக்கிறது. இதன் ஸூர்ய நெருக்க பாகம் ஸுமார் 54,000,000-மைல் தூரம். ஆகையால் இது பூமிகதியுள் அகப்பட்டிருப்பது. இங்கு வரும்பொழுது இந்த நக்ஷத்திரம் 1-நிமிஷத்திற்கு 1,740-மைல் வீதம் ஓடி வருகின்றது. இதன் ஸூர்ய ஒதுக்க பாகம் நேப்டியூன் என்ற 8-வது கிரஹகதிக்கு 496,400,000-மைல் அப்பாற்பட்டு நிற்பது, இது ஸூர்யனிடமிருந்து முன்னதைப்போல ஸுமார் 540-மடங்கு தூரத்தில் அதாவது 3,288,000,000-மைலில் இருப்பது. இதன்கதி வழியே சுற்றிவர இதற்கு $74\frac{22}{25}$-வருஷம் முதல் $79\frac{37}{100}$-வருஷத்திற்குள் ஆகும். ஸராஸரி பொதுவாக $76\frac{37}{100}$வருஷத்திற்கு ஒருதரம் திரும்பிவரும் என்று கூறலாம். இந்த நக்ஷத்திரம் ஸூர்யனைவிட்டு ஒதுங்கிப்போக வேகத்தில் குறைந்துகொண்டே வரும். இம்மாதிரி இடைக்காலம் ஏறத்தாழ இருப்பதற்குக் காரணம் இதன் கதியில் இது வியாழன் சனி முதலிய பெரிய கிரஹங்கள் கதிக்குக்குறுக்கே போகவேண்டிவர அவைகளால் இதன்வேகம்குறைக்கவோ ஏற்றவோபடும் என்பதே. இதையும் ஹாலி முன்னரே ஊஹித்தறிந்துள்ளார்.

வால்நக்ஷத்திரங்கள் ஒவ்வொருதரம் ஸூர்ய நெருக்கத்தை அடையும் பொழுதெல்லாம் ஸூர்யனது ஒதுக்கும் சக்தியால் வால் நீள பின்னர் வாலாகும் பாகத்தில் சிலவற்றை இழந்துவிடுகின்றன. இவ்வாறு இழந்துவர வால்நக்ஷத்திரங்கள் வால்கள் ஒவ்வொரு தடவைகளிலும் குறைந்துகொண்டே வரும். என்கி வால் நக்ஷத்திரம் $3\frac{1}{2}$-வருஷத்திற்கு ஒருதரம் திரும்பிவருகிறது. அது இப்பொழுது வாலில்லாமல் இருப்பதே இந்த ஊஹத்திற்கு முக்கிய ஆதாரம். இதுபோல சில வால் நக்ஷத்திரங்கள் எல்லாம் சிதறி எரிநக்ஷத்திரக் கூட்டங்களாக ஸூர்யனைச் சுற்றிவருகின்றன. பூமி அருகாமையில் வருங்கால் இவைகள் எரி நக்ஷத்திரங்களாக பூமியில் உதிரும். ஆகையால் வரவர வால் நக்ஷத்திரங்கள் குறைந்து சிதறி மாய்ந்துபோய் எரி நக்ஷத்திர மழைகளாகவேண்டியதுதான். மேலும் வால்களில் அடர்த்தி குறைந்திருக்கும்படி தனிவஸ்துத் திவலைகள் நிறைந்திருப்பதால் அவைகளில் அழுத்தமும் அதிகம் இல்லை. இவைகளால் வால் நக்ஷத்திரகதியும் பூமி கதியும் சேருமிடத்து பூமி அதனோடு தாக்குங்காலாவது அல்லது அதன் வாலுள் போகுங்காலாவது எரிநக்ஷத்ர மழையைத்தவிர வேறொன்றும் ஏற்படாது. ஆதலால் இந்த ஸம்பவத்தால் யாதொரு பயமும் நாம் அடையவேண்டியதில்லை என்பதும் விளங்கும். இந்த ஹாலிவால்நக்ஷத்திரம் 76-வருஷத்திற்கு ஒருதரம்தான் வருவதால் சீக்கிரம் ஸூர்யன் சக்தியால் சிதையாது. ஆனால் இது மெதுவாக வஸ்து இழந்து சிதறி எரிநக்ஷத்ரக் கூட்டமாகிக்கொண்டு குறைந்து வரும். ஆதலால் இன்னும் அநேகம்தரம் வரவரக் குறைந்த வாலுடன் இது பூமி அருகாமையில் வருவது காணப்படலாம். பூமிக்குமாத்திரம் எந்த வால் நக்ஷத்திரத்தாலும் யாதொரு கேடும் வாராது. ஆதலால் வால் நக்ஷத்திரங்கள் ஓர்விதக் கேடும் விளைப்பனவல்ல. இவைகளைக் கண்டு பயப்படாது வானசாஸ்திரிகள் போல நாம் எல்லோரும் மெய்மறந்து வியப்படையும் மனோ நிலையை அடைவோமாக.

. ...

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### துரௌபதி அல்லது மனத்தினிலை

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

என்பது பொய்யாமொழி. தன்னுடைய கற்பு நிலைமையைக் காத்து, அதற்குக் கேடுவராமலிருப்பதைபற்றிக் கவலைகொண்டு வாழ்வதும்; தனது குணம்மனம் நிலைமை இவைகளில் பிறர்க்கு ஸந்தேஹமுண்டாகாது இருக்கும்படிச் செய்யும் நடத்தையும், தன்னை மனைவியாக அடைந்தவனை உண்டி உணவு முதலியவற்றால் அவனுக்கு உடற்குஸுகமுண்டாகும்படிச் செய்வதன்றி, அவனுக்கு துன்பம் முதலாகிய உண்டான காலத்தில் தனது வல்லமையால் அவனை அந்நிலைமையிலிருந்து தப்பும்படி உபாயஞ் செய்து, நடத்தி அவன் மனத்திற்கும் ஸுகமுண்டாகும்படி நடத்தலும்; நற்குண நற்செய்கைகளைத் தப்பாது அடைந்திருந்து, அவைகளைக் கொண்டு நன்னிலைமைக்கு உழைத்துத் தனது கணவனுக்குப் புகழுண்டாக்க உழைத்தலும்; தம் கணவற்குச் செய்யவேண்டியவற்றை மறவாது அவற்றை எல்லாஞ் செய்தலும்; தமது பெயர் கெடாது வாழலும் எவளிடத்தில் உள்ளனவோ அவளைத்தான் ஸரியான மனைவியென்று சொல்லப்படுகிறது. தனது கணவனை ஆதரித்து, உபசரித்து, அவனுக்குத் தேஹஸுகமும் மன உத்ஸாகமும் உண்டாக்கி நல்லவழியிலோட்டி, தீங்குவந்தால் நீங்கச்செய்யும் புத்தியைக் கொண்டு போக்கி, அவனுக்குப் புகழுண்டாக்கித் தான் புகழடைந்து வாழ்வது தான் உத்தமபத்தினியின் ஸ்வபாவம். இவ்வாறு செய்வதில் கஷ்டம் வரும். அதை நான் எப்படி அனுபவிப்பேன், பொறுப்பேன் என்று மனத்தில் கவலை கொள்ளாது சோர்வடையாதிருப்பதுதான் அந்த ஸ்வபாவத்தின் இயற்கை. அவ்வாறு நடப்பதில் சிலஸமயங்களில் தமது மனதை வழிதவறிப் போகச்செய்யும் மனோஹரமாகிய மாயைகளுண்டாகலாம். அவற்றை லக்ஷியஞ்செய்யாது தனது வழியைப் பின்பற்றிப் புகழடைவது பெருமையல்லவா? அவ்வாறு செய்வதற்கு மனதைத் தனக்கு ஆளாக்கிக் கொள்ளவேண்டும். மனத்தின் அசைவு நீங்கிவிட்டால் நாம் நமது வழியில் செல்வது மிகவும் ஸுலபம். மனத்தின் நிலையினால் உண்டாகும் பெருமையை அப்பொழுதுதான் அடைய முடியும். இதற்கு உதாரணமாகத் திரௌபதியின் சரித்திரமிங்கு எழுதப்படும்:—

### 1. பிறப்படைந்தகாதை.

த்ரோணற்கு குருதக்ஷிணை அளிப்பதாக அர்ஜுனன் முதலியோர் வாக்களித்திருந்தனர். ஆனாலும் த்ரோணருக்கு அர்ஜுனன்தான் இதைச் செய்வானென்பது நன்றாய் மனத்தில்பட்டிருந்தது. அதற்கு அநேக காரணங்களுண்டு.

ஸிந்துநதியின் உபநதிகள் ஐந்தும் பரவி வளப்பம் மிகுந்து ஓங்கியது பாஞ்சால நாடு; அதற்கரசன் யாகசேனன். நுரைகொழித்துத் திவலை வீசும் அந்நதிபரவிய ப்ராந்தியங்களை எல்லாம் அவனே ஆள்பவன். இவனது நகரை அர்ஜுனன் முதலியோர் முற்றுகை செய்தார். அர்ஜுனன் யாகசேனனைத் தனது தேர்க்காலில் கட்டித் தனது ஆசாரியன் முன்புவிட்டு "யான் குருதக்ஷிணை அளித்தேன்" என்றான்.

யாகசேனனும் த்ரோணாசாரியரும் ஒரு வாத்தியாரிடத்தில் படித்தவர். சிறுபொழுதில் அத்யந்த நேசர்கள். அப்பொழுது யாகசேனன் தன் தந்தை இறந்ததும், தன்னாட்டிற்குத் தான் அரசன் ஆனால், த்ரோணற்குப் பாதி நாடு அளிப்பதாக வாக்களித்து இருந்தான். பின்பு த்ரோணன் கிருபாசாரியன் தங்கை கிருபியை மணந்து சிவபிரான் அருளால் ஹஸ்வத்தாமனைப் பெற்றான். அக்குழந்தை தாய்ப்பால் இல்லாது தவிக்க, யாகசேனனைக்கண்டு சில பசுக்களை அடைந்து குழந்தைக்குப் பால்கொடுக்கலாம் என்றுதான் எண்ணி, யாகசேனன் ராஜ்யபட்டத்தை அடைந்திருப்பதைக் கேள்வியுற்று அவன்பால் சென்று "யாகசேன! யான் த்ரோணன். உன்னுடன் சிறுபொழுதில் படித்தவன். எனக்கு நீ ஓர் வாக்கும் அளித்திருக்கின்றனை. அதெல்லாம் போகட்டும். யான் இப்பொழுது மஹாதேவனருளால் ஓர் ஆண் குழந்தை உடையேன். அதற்குப் பால் பற்றாது 'குழந்தை தாய்முகம் நோக்க யானும் உன்முகம் நோக்கி' வந்தேன். சில பசுக்களைக் கொடுத்தால் அவைகளைக் கொண்டு குழந்தைக்குப் பாலூட்டுவேன்" என்றார் த்ரோணர்.

இதைக்கேட்டதும் "யான் அரசன். நீ முனிவன் உனக்கும் எனக்கும் எவ்வாறு நேசம் இருக்கமுடியும்? பசுவாவது, கன்றாவது;-போ! போ!" என்று யாகசேனன் எளனஞ்செய்து சிரித்துக் கர்ச்சனைசெய்தான். ஆனால் த்ரோணர் இவைகளுக்கெல்லாம் பயப்படவில்லை. வாய்மை தவறினான் அரசன் என்னும்

ஆஸ்சரியம் ஒருபால் இருக்க, தன்னை ஏளனம் செய்தான் என்னும் ஆத்திரம் தன்னைக் கோபத்துக்கு ஆளாக்க, அவனை எவ்வாறேனும் ஏளனஞ் செய்ய வேண்டுமென்று, "யாகசேனா! நீயே வாய்மை தவறினாய். நான் தவறுவதென்ன அதிசயம். ஆயினும் நீ சொல்லியபடியே உன்பூமியில்பாதியும் கொள்வேன். அது மாத்திரமன்று. உன்னைத் தேர்க்காலில் கட்டிக் கொண்டு, எனக்கு ஆளாக்கிக் கொள்வேன்" என்று ராஜ ஸபையில் எல்லாரும் அறியும்படி உறக்கக் கூவி சபதம் செய்துக்கொண்டு வந்து, பீஷ்மர் கேட்டுக்கொண்டபடி பாண்டவ துரியோதனாதியர்களுக்குப் படைத்திறம் கற்பித்து தனக்கு இச்சபதத்தை நிறைவேற்றித் தருவதே குரு தக்ஷிணை என்று அவர்களுக்குக் கூறினர். இதைத்தான் அர்ஜுனன் அளித்தேன் என்றதும்.

யாகசேனனைக் கண்டு த்ரோணர் நகைத்து "என்னை இத்தகையன் என்று அறியாமல் சொல்லிய வார்த்தைகளை இப்பொழுதாவது அறிவையோ? இனியாவது நான் உன் ஸ்நேகத்திற்கு தகுந்தவன் ஆவேனா? பயப்படவேண்டாம். யான்பிராஹ்மணன். நீ அரசன். உன்னை இச்சிறுவன், அர்ஜுனன், தேர்க்காலில் கட்டிவந்தது உனக்குப் புகழாமோ? இனி விடு. உன் முழுநாடும் எனதாயினும் நீ வாக்களித்தவாறு பாதி நாட்டைக்கொண்டேன். பாதியை நீ யாள்வாயாக நான் உன்னைக் கொல்ல மாட்டேன்" என்று சொல்லி அவனுக்கு உயிரும் வாழ்வும் உதவினர்.

தேர்க்கட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட யாகசேனன் அவமானம்அடைந்ததை எண்ணி எண்ணி மனம்நொந்து "இத் த்ரோணன் தலையைத்துணிக்க ஓர் பிள்ளையையும், வல்லமை மிக்க அர்ஜுனன் தோட்களுக்கு இயைந்த ஓர் கன்னிகையையும் பெற வேண்டும்" என்ற எண்ணம் உண்டாகி தன்னூர் அடைந்ததும்இவ்வெண்ணத்தை முனிச்ரேஷ்டர்கள் இடம் சொல்லித் தனக்கது வித்திக்குமாறு செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். கடைசியாகஉபயாசன், யாசன் என்னும் இரண்டு முனிவர்களைக்கொண்டு ஓர் பெரும் யாகஞ் செய்ய அதில் தோன்றிய யாகசேஷத்தை யாகசேனன் மனவிக்குக் கொடுக்க, அவள் தீண்டாளாகி * இருந்ததால் அச்சேஷத்தை ஹோமத்தீயில் சொரியஅதனிடத்திருந்து முதலில் தேரோடு ஓர் வீரகுமாரன் தோன்றினன்: அவனே த்யுஷ்டத்யும்நன். பின்னும் உபயாசன் அவிசைத்தீயில்சொரிய, நெருப்புத்தா மரைமலர் இடத்துத்தோன்றிய லக்ஷ்மிபோல் ஓர்பெண்தோன்றினள். அவள் க்ருஷ்ணை: அவள்தான் த்ரௌபதி.

அப்பொழுது "முன் அரக்கர்குலம்மாள ஓர்பெண் பிறந்தாள். இப்பொழுது இவ்வனல் நடுவே அரசர் குலங்கள் எல்லாம் அழிய இப்பெண் தோன்றினள்" என்று ஓர் அசரீரி வாக்களித்தது.

* தீண்டாள்—மாதவிடாயால் வீட்டிற்கு வெளியிருப்பவள்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

அடுத்த கவர்னர் ஜனரல்.—ஸர் சார்லஸ் ஹார்டிஞ்ஜ் நேமிக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவில் 1840-ம் ஞூமுதல் 1848-ம் ஞூவரை கவர்னர் ஜனரலாயிருந்த லார்டு ஹார்டிஞ்ஜின் பேரன் இவர். சிலகாலம் பிரிடிஷ் ராஜாங்கத்தின் பிரதிநிதியாய் அந்நிய ராஜஸ்தலங்களில் தௌத்தியம் செய்து பேர்பெற்று இப்போது பிரிடிஷ் ராஜாங்கத்தின் அந்நிய இலாகாவில் ஸ்திரமான உதவி செக்ரிடிரியாயிருக்கிறார். சிலகாலம் இவர் மிஸ்டர் கிளாட்ஸ்டனிடம் பிரைவேட் செகிரிடிரியாய் வேலைபார்த்து வந்தபடியாலும் தற்காலம் லிபரல் மந்திரிகளுடைய அபிமானத்தைப் பெற்றவராயிருப்பதாலும் விசாலபுத்தியும் முன்னோக்கங்கொண்டவராகவே இருப்பாரென்று நம்பப்படுகிறது.

***

சைவசமயாபி விர்த்திசபை பாளையங்கோட்டை,—இச்சபையின் 24-வது வருடோற்சவம் திருநெல்வேலி ஜில்லா, பாளையங்கோட்டையில் சென்ற மேமீ 29, 30, 31உகளில் விமர்சையாய் நடைபெற்றது. அச்சபைக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவரான ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமி தேவரவர்கள் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பெற்றார். அச்சபையின் அக்கிராசனாதிபதியும், திருநெல்வேலியில் பிரபலவக்கீலும், தமிழ் அபிமானியுமான ஸ்ரீமான் என் எ. வி. சோமசுந்தரம்பிள்ளை யவர்களின் பெருமுயற்சியால் இதுமிகவும் சிறப்பாகநடைபெற்றதென்னலாம். தென்னாட்டில் இதுவரை இவ்வளவு பெரியசபைகூடினதில்லை. ஒவ்வோர்நாளும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடினார்கள். பல விஷயங்களைப்பற்றியும் பிரசங்கங்கள் நடந்தன.

***

பரோடா ராஜ்யமும் கல்வியும்.—பரோடா சமஸ்தானத்தில் 1906-ம் ஞூத்தில் 688 பள்ளிக்கூடங்களிருந்தன, 1907ம் ஞூத்தில் 1267 பள்ளிக்கூடங்களாய் விட்டன. ஆண்பிள்ளைகள் 12 வயது வரையிலும் பெண்பிள்ளைகள் 10 வயது வரையிலும் ...

படித்தே தீரவேண்டும். தேக சௌக்கியம் சுகாதாரம் முதலியவைகளைப் பற்றி அவர்களுக்குப் போதிப்பதற்காக, சில உபந்நியாசகர்களை பரோடா மகாராஜா அவர்கள் நியமித்திருக்கிறார்கள்.

***

உப்பு.—போன வருஷம் எப்பிரல், மே மாதங்களில் இந்தியஜனங்கள் தின்ற உப்பை விட இந்த வருஷம் அதே மாதங்களில் அன்னார் தின்ற உப்பு 15,000 மணங்கு அதிகமென்று கணக்கிடப் பட்டிருக்கிறது.

***

விவசாயிகள் செய்யக்கூடிய சிறு தொழில்கள்.—கிராமவாசிகள் விவசாயத்தையே நம்பியிருக்கிறவரையில் சுகமாய் ஜீவிக்க முடியாதென்றும், பட்டுப்பூச்சி வளர்த்தல், தேனீ வளர்த்தல், கோழி முதலியவை வளர்த்தல், கனிவிருக்ஷங்கள் பயிரிடல், நூற்றல், கயிறு திரித்தல், அழகான கூடைமுதலியவை செய்தல், நேர்த்தியான மட்பாண்டங்கள் செய்தல்,—இவைகளும் வேறு பலவும் கிராமவாசிகள் செய்யக்கூடிய தொழில்களே. பாய் பின்னுதல், கறிகாய் பயிரிடல், மாடுகள் வளர்த்து தயிர் பால் நெய் விற்றல், இவை போன்ற தொழில்களும் செய்யலாம். நமது வருமைக்குத் தொழில்கள் அகப்படாமை காரணமல்ல. முயற்சியின்மையே முக்கிய காரணம்.

***

பாம்புகடிக்குக் கெரோஸின் ஆயில்.—பாம்புக்கடிக்கு மண் எண்ணெய் என்னும் கெரொஸின் ஆயில் நல்லமருந்தாம். பாம்பு கடித்த உடனே கடித்த இடத்தை கெரொஸின் எண்ணெயில் அமிழ்த்து வைத்தால் புகை புறப்படுவதுபோல் கடித்த இடத்திலிருந்து பச்சையாக ஆவிபோல் ஒன்று வெளிப்படுமாம். இது எண்ணெயோடு சம்பந்தப்படாது. ஆனாலும் எண்ணெயில் கண்ணுக்கு நன்றாய்த் தெரியும் என்று ஒரு டாக்டர் சொல்லுகிறார்.

***

வியவசாயபஞ்சாங்கம்.—இப்பொழுது வருஷா வருஷம் பிரசுரமாகும் வியவசாய பஞ்சாங்கத்தை இங்கிலீஷ், தெலுங்கு, கன்னடம், உரியா, பாஷைகளில் அச்சிட்டுக் கிராமாதிகாரிகளுக்கு இனமாய் காப்பிகள் கொடுக்கும்படிக்குக் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

நூதன செடிகளைச் சேர்த்தல்.—அமெரிக்கர் 1909-ம் வருஷம் எப்ரல் மாதம் 1உ முதல் ஜூன் மாதம் 30உ வரை 585-நூதன செடிகளையும் வித்துக்களையும் அயல் நாடுகளிலிருந்து தங்கள் தேசத்துக்குச் சேர்த்திருக்கிறார்கள். முதலிலிருந்து 25,717 புதிய செடிகள் அந்நாட்டுக்குச் சேர்க்கப்பட்டன.

***

தென்னை நெற்று சாற்றுதல்.—தென்னை நெற்றுகளை முளைக்கவிட வேண்டுமானால் காய்களை உவர்த்தி ஜலம் ஆடும் சமயத்தில் கிணற்றில் 3-மாதம் போட்டுவைக்க காய் ஈரம் கோத்து பளுவேறும். பிறகு இந்தக் காய்களை எடுத்துக் குவித்து ஈரம் காயாமல் மண்ணால் மூடிவைத்தால் முளை கிளம்பும். அப்புறம் பாத்திகளில் அடக்கி ஜலம் விட்டுவந்தால் காய்கள் நாசமாகாமல் முளைக்கும். இந்தமாதிரி அனுசரிப்பதில் 3-மாதம் நீர இறைப்பதும், கரையான் அரிப்பதும் இல்லாமல் போகும்.

***

திமிங்கிலத்தின் தாடை யெலும்பு நன்றாய் வளையத்தக்கது. அதனை மெல்லிய ஏடுகளாக ரம்பத்தினால் அறுத்துக் கழுத்துப்பட்டையின் உட்புறத்திற் கொடுப்பார்கள். குடைக்கம்பிகளாகவும் உபயோகிப்பார்கள்.

***

தந்தம் வைக்கோல் வர்ணமானது. அதன்மீது தண்ணீரை யூற்றினால் அதனை ரம்பத்தினால் எளிதில் அறுக்கலாகும்: அதனை வெண்ணிறமாய் வெளுக்க வைக்கலாம். அதனைச் சுட்டால் தந்தக் கரியாகும். மூலவர்க்கத்துக் கரியைப்போல் இது பிராணிவர்க்கத்துக் கரியாகும்.

---

சந்தாதாரர்க்கு அறிக்கை

நமது "போதினி" பிரதிமாதமும் முதல் தேதியிலேயே ஒழுங்காய் பிரசுரமாகிறது. எவர்களுக்கு அந்த அந்தமாத காப்பி குறித்தகாலத்தில் கிடைக்கவில்லையோ, அவர்கள் தயவுசெய்து காலதாமதம் செய்யாது நமது ஆபீஸுக்கு உடனே தெரிவித்துக் கொள்ளவேணும். பத்திரிகை பிரசுரமான காலத்திற்கு ஒரு மாதத்திற்கு பிற்பாடு எழுதப்படும் கடிதங்களுக்கு காப்பிகள் அனுப்ப முடியாது.

காப்பி 1-ஒன்றுக்கு அணா 5. அனுப்பினால்தான் அனுப்பக்கூடும்.

மானேஜர், 'போதினி'



நமது சக்ரவர்த்தி



நமது சக்ரவர்த்தினி